இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 243 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 11 வியாழக்கிழமை 27.07.2017

## மின் துண்டிப்பை தவிர்க்க முடியாது

கொழும்பு, ஜூலை 27
சில காரணங்களின் அடிப்படையில் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், நாட்டின் சில பகுதிகளுக்கான மின் விநியோகம் துண்டிக் » 25

## அம்பாந்தோட்டையில் 112 கோடி டொலர் முதலிடுகிறது சீனா

*உடன்படிக்கை நேற்று சபையில் சமர்ப்பிப்பு*

கொழும்பு, ஜூலை 27
அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவின் மேர்ச்சன்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தத்துக்கு அமைச்ச » 06

## தாக்குதல் இலக்கு தானே என நீதிபதி இளஞ்செழியன் திடம்

*பொலிஸார் திசை திருப்புவது ஏன் எனவும் கேள்வி*

யாழ்ப்பாணம், ஜூலை 27
நல்லூரில் நடந்த துப்பாக்கிச் சூட்டின் இலக்குத் தான் தான் என்பதை மீண்டும் ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கிறார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன். நீதிபதி தாக்குதல் இலக்கு அல்ல, அது ஒரு தற்செயலான சம்பவம் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்திருந்த நிலையில் நீதிபதி நேற்று மீண்டும் தாக்குதலின் இலக்குத் தானே என்பதை உறுதிப்படுத்தினார்.
சம்பவத்தில் உயிரிழந்த உப பொலிஸ் பரிசோதகர் சரத் ஹேமச்சந்திரவின் இறுதிக் கிரியைகளில் நீதிபதி நேற்றுக் கலந்துகொண்டார். அப்போது செய்தியா » 25

நல்லூர் துப்பாக்கிச் சூடு;

## பிரமுகர்களின் பாதுகாப்பை மீளாய்வு செய்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 27
நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள பிரமுகர்களின் பாதுகாப்பை மீளவும் உறுதி செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகின்றது.
பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை பொலிஸ் திணைக்களத்தால் » 06

## சரணடைந்த சந்தேகநபர் தனிக் கூண்டில் அடைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27
நல்லூரில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் சரணடைந்த சந்தேகநபர், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தனிக் கூண்டில் அடைக்கப்பட்டுள்ளார்.
நல்லூரில் நீதிபதி மா. இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் முதன்மைச் சந்தேகநபராக பொலிஸாரால் தேடப்பட்டு » 06



## ஐரோப்பிய ஒன்றியத்தின்
# புலிகள் மீதான தடை நீங்கியது

### கறுப்புப் பட்டியலில் இருந்து விடுவித்து ஐரோப்பிய நீதிமன்ற ஆயம் ஆணை

கொழும்பு, ஜூலை 27
ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் நீதிமன்ற ஆயம் விடுதலைப் புலிகள் மீதான தடையை நேற்று நீக்கித் தீர்ப்பளித்தது. விடுதலைப் புலிகளின் நிதியை தொடர்ந்து முடக்கி வைக்கும் உத்தரவையும் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற ஆயம் நீக்கி உத்தரவு பிறப்பித்தது என்று ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்தது.
2009 ஆம் ஆண்டின் பின்னர் இராணுவத் தோல்விக்குப் பின்னரான காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கம் அபாயகரமான தாக்குதல்கள் நடத்தியமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க ஐரோப்பிய ஒன்றியம் தவறியிருந்தது. அதையடுத்தே ஐரோப்பிய உயர் நீதிமன்ற ஆயம் இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளது. » 06

## நீதிமன்ற உத்தியோகத்தர்கள் வடக்கில் இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத் » 23

## அதிகளவில் நாடு திரும்பும் தமிழ் அகதிகள்

கொழும்பு, ஜூலை 27
சுயவிருப்பின் அடிப்படையில் மீளத் திரும்பும் அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் திட்டத்தின் கீழ், இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்புவது அதிகரித்துள்ளது.
தமிழ்நாட்டின் பல்வேறு முகாம்களில் தங்கியிருந்த 57 அகதிகள் நேற்று முன் » 06

## மெய்க்காவலரின் பிள்ளைகளை தத்தெடுத்தார் இளஞ்செழியன்



யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்ப்பாணம் நல்லூர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த தனது மெய்ப்பாதுகாவலரான சரத் ஹேமச்சந்திரவின் இரு பிள் » 25

## பெற்றோல் விநியோக நடவடிக்கையிலிருந்து விலகியது இராணுவம்

*ஊழியர்கள் பணிக்குத் திரும்ப இணக்கம் தெரிவித்ததையடுத்து*

யாழ்ப்பாணம், ஜூலை 27
பெற்றோலிய விநியோக நடவடிக்கையிலிருந்து இராணுவத்தினர் மீளப் » 24



## தடை நீடிக்கும்

ஐரோப்பிய ஒன்றியம் விளக்கம்

பிரசெல்ஸ், ஜூலை 27
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்தும் பயங்கரவாதப் பட்டியலில் நீடிக்கும் என்று ஐரோப்பி ஒன்றியம் அறிவித்தது. » 04

## காசு வாங்கி காடுகளை விடுவித்த ராணுவம் காணிகளை விட மீண்டும் காசு கேட்கின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 27
கேப்பாபிலவில் 111 ஏக்கரில் நிலைகொண்டுள்ள இராணுவ முகாமை அகற்றுவதற்குப் பணம் வேண்டும் என்று இராணுவத்தினர் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளனர். முகாம்களை அகற்றி மக்கள் காணிகளை விடுவிப்பதாக ஏற்கனவே பணம் வாங்கிய இராணுவத்தினர், 180 ஏக்கர் காட்டுப் பகுதியையே விடுவித்திருந்தனர். இந்த நிலையிலேயே மீண்டும் முகாம்களை இடமாற்றப் பணம் வேண்டும் » 25

## உங்களை நம்பித்தான் நாங்கள் இருக்கிறோம்

*சம்பந்தனிடம் கூறினர் கேப்பாபிலவு மக்கள்*



யாழ்ப்பாணம், ஜூலை 27
கேப்பாபிலவு காணி விடுவிப்புத் தொடர்பில் அரச தலைவருடன் 10 நாள்களுக்குள் பேசிப் பதில் கூறுகின்றேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உறுதியளித்த » 25

## தமிழ் பொலிஸ் அதிகாரி மீது கும்பல் தாக்குதல்

*நெல்லியடி விராலிமடத்தில் நேற்றிரவு சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூலை 27
"தமிழ் பொலிஸ் அதிகாரி மீது நெல்லியடி விராலிமடப் பகுதியில் வைத்துக் கும்பல் ஒன்று நேற்று இரவு கொட்டன்களால் கண்மூ » 06

9 மாகாண சபைகளுக்கும்

## ஒரே தினத்தில் தேர்தல்

*ரணிலின் பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி*

கொழும்பு, ஜூலை 27
9 மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அமைச்சரவைத் » 06

எரிபொருள் விவகாரத்தால்

## நாடாளுமன்றில் களேபரம்

*அவை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பு*

கொழும்பு, ஜூலை 27
கொலன்னாவை எரிபொருள் களஞ்சிய சாலை இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை, இதையடுத்து ஏற்பட்ட மோதல் மற்றும் அரச தலைவருடன் பேச்சு நடத்திவிட்டு திரும்பிய பெற்றோலியத் தொழிற்சங்க ஊழியர்கள் கைதுசெய்யப்பட்டமை ஆகிய விடயங்களால் நாடாளுமன்றத்தில் நேற்று கடும் அமளிதுமளி » 25



நல்லூர் கந்தன்
அழகைக் காண
கண் ஆயிரம் வேண்டுமே

நல்லூர் கந்தன்
உற்சவக் காட்சிகள்
தினமும்
newuthayan.com இல் நேரலை



# நிரந்தர வீட்டுத் திட்டம் கோரி தாலிக்குளத்தில் ஆர்ப்பாட்டம்



வவுனியா, ஜூலை 27
நிரந்தரவீட்டுத்திட்டம்வழங்க வலியுறுத்தி வவுனியா, தாலிக்குளம் கிராம மக்கள் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்நடத்தினர். கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆலயம் முன்பாக காலை ஒரு மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

“வவுனியா, பூவரசன்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள தாலிக்குளம் கிராமத்தில் கடந்த பத்து வருடங்களாக வசிக்கும் சுமார் முப்பது குடும்பங்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. அங்கு வசிக்கும் உப குடும்பங்கள் பலவற்றுக்கும்இதுவரைவீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை.

போரால் பாதிக்கப்பட்டு எமது உடைமைகள் அனைத்தையும் இழந்து அகதி வாழ்வு வாழ்ந்து இங்கு குடிய மர்ந்துள்ளோம். எமக்கு தற்போது வரைவீட்டுத்திட்டம்வழங்கப்படவில்லை.

எமது சொந்த நிலத்திலேயே அகதி போன்று வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சமுர்த்திக் கொடுப்பனவுகள் கூட எமக்கு வழங்கப்படவில்லை. எமது கிராமத்துக்கான வீதிகள் நீண்டகாலமாகச்சீரமைக்கப்படவில்லை. இங்கு குடிதண்ணீர் பிரச்சினையும் காணப்படுகின்றது. எமதுகிராமத்தை அரச அதிகாரிகள் கைவிட்டுவிட்டார்கள்என்றே எண்ணத்தோன்றுகின்றது.” என்று ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதி கிராம அலுவரிடம் தொடர்பு கொண்டபோது இது தொடர்பில் எதுவும் தெரிவிக்க முடியாது என்று அவர் பதிலளித்தார். (ற-10,402)

## விபத்தில் வயோதிபப் பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ். சிறுப்பிட்டி, பருத்தித்துறை பிரதான வீதியில் இலங்கை வங்கிக்கு எதிரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை நடந்துள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபப் பெண்ணை மோதியது. விபத்தில் வயோதிபப் பெண்ணின் கால் முறிந்தது. மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து சென்ற இளைஞனும் படுகாயங்களுக்குள்ளானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காகக் கோப்பாய் அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞர் சிறு காயங்களுக்குள்ளானார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் வீதி வளைவையும் பொருட்படுத்தாமல் அதிவேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தியமையே விபத்துக்கான காரணம் என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர். (ற-10)



கிழக்குமாகாணத்தில்அன்னைபராசக்தியின்வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட முதல் தலமான பிரசித்திபெற்ற மட்டக்களப்பு கொத்துக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயத்தில் ஆடிப் பூரத்தை சிறப்பிக்கும் முகமாக பாற்குடப் பவனி சிறப்பாக நேற்று இடம்பெற்றது. மட்டக்களப்புவீரகத்திப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஆரம்பமான ஆடிப்பூரப் பாற்குடப் பவனி நகரின் பிரதான வீதிகளூடாகச் சென்று ஆலயத்தைத் சென்றடைந்து. சிறப்பு வழிபாடுகளின் பின் அம்மனுக்கு பால் அபிஷேகம் இடம்பெற்றது. (ற-10)

## புட்டிப்பால் புரைக்கேறி குழந்தை உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூலை 27
மட்டக்களப்பு வந்தாறுமூலையில் ஆண் குழந்தை ஒன்று நேற்று உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. புட்டிப்பால் புரைக்கேறி மூச்சுத் திணறல் ஏற்பட்டதாலேயே உயிரிழப்பு சம்பவித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

குழந்தையின் தாயார் குழந்தைக்கு புட்டிப்பால் கொடுத்து உறங்கச் செய்துள்ளார். பால் புரைக்கேறியதால் குழந்தைக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயக்க நிலைக்குச் சென்றுள்ளது. குழந்தையை செங்கலடி பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும் காப்பாற்ற முடியவில்லைஎன்றுதெரிவிக்கப்பட்டது. இரட்டையர்களில் ஒருவரான இந்த ஆண் குழந்தையின் இழப்பு அந்தப்பகுதி முழுவதையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ற-10)

## ஊழல் தொடர்பில் விசாரிக்க கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 27
மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில்இடம்பெற்றதுஎன்று கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இந்தமுறைப்பாட்டைநேற்றுப் பதிவு செய்தது. ஊழல் நடைபெறுகின்றது என்று தகவல்கள் வெளியானமை தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டச் செயலரால் மட்டக்களப்பு மாவட்டத்தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய உறுப்பினர்கள் மூவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு விசாரணைமேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது ஊடகவியலாளர் ஒன்றியம் முறைப்பாடு பதிவுசெய்துள்ளது. (ற-10,46)

## பேருந்து விபத்து 35பேர்காயம்

அம்பாறை, ஜூலை 27
அம்பாறை சம்மாந்துறைப் பகுதி வீதியில்பேருந்துஒன்று விபத்துக்குள்ளானதில் 35பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவித்தனர். இந்தச்சம்பவம் நேற்று நடந்துள்ளது.

கதிர்காமத்தில்இருந்துமட்டக்களப்பு நோக்கிப்பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தே விபத்துக்குள்ளானது. பேருந்தின் சாரதி மற்றும் அவரது உதவியாளர் உட்படவிபத்தில்காயமடைந்தவர்கள் சிகிச்சைக் காக சம்மாந்துறை, அம்பாறை மற்றும் கல்முனை மருத்துவமனைகளில்சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பாக சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-10)

# மது ஒழிப்பு ஊர்வலம் கிளிநொச்சியில் நேற்று





கிளிநொச்சி, ஜூலை 27
மது ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நேற்றுக்கிளிநொச்சியில்நடத்தப்பட்டது.

கிளிநொச்சி பேருந்து சாலை சந்திக்கருகே ஆரம்பமான ஊர்வலம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தை அடைந்தது. அங்கு மனு கையளிக்கப்பட்டது.

சட்டவிரோதமதுபாவனையால் குடும்ப வன்முறைகள், முரண்பாடுகள் கிராமங்களில் அதிகரித்துக் காணப்படுகிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஊர்வலத்தில் வலியுறுத்தப்பட்டது.

வன்முறையை தூண்டும் மது பாவனையை தடுக்க ஒன்றிணைவோம், மதுவால்எதிர்காலத்தை வீணடிக்காதே, கசிப்பை உற்பத்தி செய்யாதே, மதுவை வெறு, மதுவை வெறு மகிழ்வு உன்னைத் தேடும், உடலை வதைக்கும் மதுவுக்கு அடிமையாகதே போன்ற வாசகங்கள்எழுதப்பட்டபதாகைகளை ஊர்வலத்தில் கலந்துகொண்டோர்ஏந்தியிருந்தனர்.

கரிதாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. (ற-10,35)

# மீன்களுடன் வந்த ஓட்டோ சங்குப்பிட்டியில் விபத்து

### மீன்களை பொலிஸார் தர தாமதம் என்று குற்றச்சாட்டு

கிளிநொச்சி, யூலை 27
கிளிநொச்சி, பூநகரியின் மீன் ஏற்றி வந்த முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானது. முச்சக்கர வண்டியின் சாரதி காயமடைந்தார். விபத்துக்குள்ளான முச்சக்கர வண்டியுடன் சேர்த்து பொலிஸார் மீன்களையும் எடுத்துச் சென்று மீன்களைத் தரத்தாமதித்ததால் அவைபழுதடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச்சம்பவம்நேற்று நடந்துள்ளது.

காயமடைந்த சாரதி வைத்தியசாலைக்குக்கொண்டுசெல்லப்பட்டார். அவர் சாவகச்சேரி கிராமிய கடற்றொழில் சங்கத்தினருக்கு விபத்துத் தொடர்பில் தெரியப்படுத்தினார். அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்றபோது முச்சக்கர வண்டியைப் பொலிஸார்ஜே.சி.பி. வாகனம் மூலம்பொலிஸ்நிலையத்துக்கு எடுத்துச் செல்வதை அவதானித்தனர். முச்சக்கர வண்டியில்இருந்த மீன்களைவிட்டுச் செல்லுமாறு அவர்கள் கோரிய போதுபொலிஸார்அதற்குமறுப்புத் தெரிவித்தனர் என்று கூறப்படுகின்றது.

கடற்றொழில் சங்க்த்தினர் பொலிஸ் நிலையம் சென்று பொறுப்பதிகாரியிடம் கேட்ட போது அவரும் மறுப்புத் தெரிவித்தார். பின்னர் சிறிது நேரத்தின் பின்னர் தொலைபேசியூடாகத்தொடர்புகொண்டுமீன்களைப் பெற்றுச் செல்லுமாறு தெரிவித்தார் என்றும்கூறப்பட்டது. காலை 7 மணியில் இருந்து மு.ப. 10.30 மணி வரை பொலிஸாரிடம் இருந்த மீன்கள் பழுதடைந்தன என்றும் அதனால் அவற்றை கடற்றொழில் சங்கத்தினர் வாங்க மறுத்துத் திரும்பினர் என்றும் கூறப்பட்டது.

விபத்து ஏற்பட்ட இடத்தில் வீதிப் போக்குவரத்துதடைப்பட்டிருந்தது. அதைச் சரிசெய்தோம். விபத்து இடம்பெற்ற தன்மை தொடர்பில் அறிக்கையிட வேண்டும். விபத்துத் தொடர்பில் விளக்கமளிக்க உரியவர் வரவில்லை. அதனால் வாகனம்பொலிஸ்நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. விசாரணைகளின் பின்னரே அவற்றைஒப்படைக்கமுடியும். விபத்தில் காயமடைந்தவரின் தகவலின் அடிப்படையிலும் ஒப்படைக்கமுடியும். உரியநேரத்தில் அவர் எமக்கு தகவல் தரவில்லை. மீனைப் பொறுப்பெடுத்த நாம் துரிதமாக மீள ஒப்படைத்தோம். எனினும் அவற்றை வாங்க மறுத்து விட்டனர். நாம்அவற்றைஅதிவேக குளிரூட்டியில் பாதுகாத்து வைத்திருக்கிறோம். என்று பொலிஸார்தெரிவித்தனர். (ற-ய-6)

## மிளகு செய்கையாளர் கவனவீர்ப்பு போராட்டம்

பதுளை, ஜூலை 27
மிளகுப்பயிர்ச்செய்கையாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்ஒன்றைஹாலி எல மற்றும் பதுளையில் நேற்றுநடத்தினர்.

பதுளைமாவட்டத்தின்மிளகுப் பயிர்ச்செய்கை உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் வெளிநாட்டிலிருந்துமிளகுஇறக்குமதிக்கு எதிர்ப்புதெரிவிக்கும் பொருட்டும் இந்தக் கவனவீர்ப்புப்போராட்டம்நடத்தப்பட்டது.

போராட்டக்காரர்கள் தமது கோரிக்கை அடங்கிய மனுவை ஊவாமாகாண ஆளுநர் எம்.பி. ஜயசிங்கவிடம்வழங்கினர். (ற-10)

# எரிபொருள் வழங்கல் வழமைக்குத் திரும்பும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 27
நாடளாவிய ரீதியிலான எரிபொருள் விநியோகம் வழமைக்குக் கொண்டுவரப்படும் என அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படும். அரசியல் நோக்கங்கள் காரணமாகவே பெற்றோலிய தொழிற்சங்கங்கள் இவ்வாறு செயற்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.
அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பெற்றோலியக் கூட்டுத் தாபன ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதிகாரிகளிடத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தங்களது கோரிக்கைகளுக்கு உரிய பதில் வழங்கப்படும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.
பெற்றோலியக் கூட்டுத் தாபன ஊழியர்களின் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நாடு முழுவதிலுமுள்ள மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகினர். (ற-10)

## நீர் தேங்கிய குழியில் விழுந்து சிறுவன் சாவு

வவுனியா, ஜூலை 26
சூரியவெவ, விஹாரகல பகுதியில் 4 வயது சிறுவன் நீர் தேங்கிய குழியொன்றில் விழுந்து உயிரிழந்துள்ளான் என பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் நடந்துள்ளது. தனது தந்தையுடன் வயலுக்குச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து நடந்துள்ளது என்று ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.
சூரியவெவ, விஹாரகல சேர்ந்த கசுன் தனஞ்சய என்ற 4 வயதான சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.
தனது தந்தையுடன் வயலுக்கு சென்றுள்ள நிலையில், அங்கு எறும்பு கடிப்பதாக சிறுவன் கூறியுள்ளான். சிறுவனை வீட்டுக்கு செல்லுமாறு கூறிவிட்டு தந்தை புற்களை வெட்டியுள்ளார்.
இந்த நிலையில் 10 மணியளவில் தந்தை வீடு திரும்பிய நிலையில், மகன் வீட்டில் இல்லாத காரணத்தால் குழப்பமடைந்துள்ளார். அதனைத் தொடர்ந்து அயலவர்களுடன் இணைந்து தனது மகனை தேடும் போது நீர் தேங்கியிருந்த குழியொன்றில் விழுந்து கிடப்பதை பார்த்த தந்தை, சிறுவனை சூரியவெவ மருத்துமனைக்கு கொண்டு சென்றுள்ளார். சிறுவன் ஏற்கனவே உயிரிழவிட்டான் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர் என்று கூறப்படு கின்றது.
உயிரிழந்த சிறுவனின் உயிரிழப்பு தொடர்பாக அவசர உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் அம்பாந்தோட்டை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-10)

## அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாகக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 27
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.
அவர்கள் யாழ்ப்பாண நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்துக் கலந்துரையாடினர்.
அந்த அமைப்பின் தலைவர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் மனு ஒன்றை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடமும், யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையிடமும் மனுக் கையளித்தார்.
தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்ற நிலையிலும் இன்றுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக தொடர்ச்சியாக அரசுக்கு அழுத்தம் கொடுத்துவரும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, தற்போது சர்வமத தலைவர்களின் உதவிகளை நாட தீர்மானித்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

## வெளிநாட்டு மதுபானம் விற்றவர் கைது

பதுளை, ஜூலை 27
சட்டவிரோதமாக வெளிநாட்டு மதுபான வகைகளை விற்பனை செய்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.
பண்டாரவளை மாநகர வர்த்தக நிலையமொன்றிலேயே இந்த மதுபானப் போத்தல்கள் மீட்கப்பட் டன.
பண்டாரவளைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் வர்த்தக நிலையத்தை சுற்றி வளைத்து, தேடுதல் நடத்தினர்.
சட்டவிரோதமாக வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 37 போத்தல் மதுபான வகைகள் மீட்கப்பட் டன.
கைது செய்யப்பட்ட நபர் விசாரணையின் பின்னர், பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(ற-10)

உதயன் நடத்தும்



தரம் 05
புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட இலவச வழிகாட்டல் கருத்தரங்குகள்

எதிர்வரும் ஆவணி மாதம் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றினை அதிகரிக்கும் நோக்கில் உதயன் நடத்தும் இலவச கருத்தரங்குகள் பின்வரும் இடங்களில்

30.07.2017
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி

மு/மாங்குளம் ம.வி
மு/ஒட்டிசுட்டான் ம.வி
மு/மல்லாவி மத்திய கல்லூரி
மு/குமாரசாமிபுரம் வித்தியாலயம்

வளவாளர்கள்
புலமை ஆசான் :
திரு.செ.அம்பிகைபாகன்
முன்னணி வளவாளர்:
திரு.சு.திலீப்குமார்
இவர்களுடன் துணுக்காய் வலய துறைசார் வல்லுனர்கள்

குறிப்பு: அனைத்து மாணவர்களும் பெற்றோர், பாதுகாவலர் அல்லது ஆசிரியர்களுடன் வருகை தரவும்

ஏற்பாட்டாளர்கள்: துணுக்காய் கல்வி வலயம் | புலமைச்சுடர்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# யார் சதிகளைச் செய்தாலும் அரசைக் கவிழ்க்க முடியாது

## மைத்திரி காட்டம்

"ஆட்சியிலிருந்து மக்களால் இறக்கப்பட்டோர் மீண்டும் அதிகாரத்துக்கு வர கனவு கண்டுகொண்டு பல்வேறு சதிகளை மேற்கொண்டாலும் எவராலும் அரசைக் கவிழ்க்க முடியாது" என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இப்பாகமுவ, கும்பல் அங்க ஹமீதியா முஸ்லிம் வித்தியாலயத்தில் கற்றல் வள நிலையத் திறப்பு விழாவில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் பணிப் புறக்கணிப்புக் காரணமாக நாட்டு மக்கள் கடும் சிரமத்துக்கு முகம் கொடுத்துள்ளனர். எந்தவொரு பிரச்சினையையும் பேச்சு மூலம் தீர்க்க வாய்ப்பு உள்ளது. மருத்துவர்களும் இன்று பணிப் புறக்கணிப்பை விளையாட்டாக மாற்றியுள்ளனர். மனித உயிர்களுக்கு எந்தவொரு பெறுமதியும் கிடைக்காமை கவலைக்குரிய விடயம்.

நாட்டின் ஒரு அங்குல நிலப்பரப்பையும் எந்தவொரு நாட்டுக்கோ, கம்பனிக்கோ உரித்தளிப்பதற்கு இடமளிக்கமாட்டேன். வரலாற்றில் எந்தவொரு ஆட்சியாளரும் மேற்கொள்ளாதவாறு நாட்டின் நிலம் வேறு நாடுகளுக்கு கடந்த ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்டது. அன்று எவரும் இதற்காக பணிப் புறக்கணிப்போ, ஆர்ப்பாட்டமோ செய்யவில்லை- என்றார். (வ-5)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

### தடை...

"2011ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே ஐரோப்பிய நீதிமன்ற ஆயம் தீர்ப்பை வழங்கியுள்ளது. எனினும் ஐரோப்பிய ஒன்றியம் 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளைத் தடை செய்யப்பட்ட இயக்கமாக பட்டியலிட்டுள்ளது" என்று ஐரோப்பிய ஒன்றியம் விளக்கமளித்துள்ளது.

இதுதொடர்பில் அது வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க்த்தை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் பயங்கரவாத பட்டியலிலிருந்து நீக்கிய போதிலும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் தொடர்ந்தும் புலிகள் பயங்கரவாத இயக்கமாகவே பட்டியலிடப்பட்டிருப்பர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக பட்டியலிடுவதற்கு பயன்படுத்திய முறைமை குறித்தே நீதிமன்ற ஆயம் தீர்ப்பளித்தது.

2011ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையான மதிப்பீடுகளின் அடிப்படையில் ஐரோப்பிய நீதிமன்ற ஆயம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. எனினும், ஐரோப்பிய ஒன்றியம் 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கமாகவே பட்டியலிட்டுள்ளது.

நீதிமன்றின் தீர்ப்பு உன்னிப்பாக ஆராயப்பட்டு தேவை ஏற்பட்டால் எதிர்காலத்தில் தடை உத்தரவு குறித்த திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றுள்ளது. (வ-5)

## வடக்கு சுகாதார தொண்டர்கள் விவகாரம்

# புதிய ஆளணி அங்கீகாரம் வழங்க அரச தலைவரின் செயலர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

"வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்குசுகாதாரஉதவியாளர்சேவைக்கு புதியஆளணிஅங்கீகாரத்தைவழங்கிசுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஒரு மாதகாலத்துக்குள்நடவடிக்கைஎடுக்கப்பட வேண்டும்"

இவ்வாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்குஅரசதலைவரின்செயலர்நேற்று அறிவுறுத்தல் வழங்கினார்.

வடக்கு மாகாண சுகாதார தொண்டர் நியமனம்தொடர்பில்மாகாணஅதிகாரிகளுக்கும் அரச தலைவரின் செயலாளருக்கும் இடையேயான சந்திப்பு நேற்று அரசதலைவரின் செயலகத்தில் இடம்பெற்றது.

"வடக்கு மாகாணத்தில் தொண்டர் அடிப்படையில் 860 பேர் பணியாற்றி வருகின்றனர். நிரந்தர நியமனம் வழங்குமாறு வலியுறுத்தி வீதியில் இறங்கிப் போராடுகின்றனர். இவர்களின் நியமனம் தொடர்பில் பிரத்தியேக ஏற்பாட்டின் மூலம் வழங்குமாறு கோரப்பட்டது" என்று அரச தலைவரின் செயலாளரிடம் வடக்கு அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

வடக்குமாகாணசுகாதாரஉதவியாளர்கள் ஆளணி அங்கீகாரம் எத்தனை? தற்போதுள்ள ஆளணி எத்தனை? என்ற விவரத்தை அரசதலைவரின்செயலாளர்கோரினார்.

"தற்போதுள்ள ஆளணி அங்கீகாரமானது சுமார் 20 வருடங்கள் வரையில் புதுப்பிக்கப்படாதநிலையிலேயேஉள்ளது. தற்போதுள்ள நிலவரத்துக்கு அமைவாக ஆளணிஅங்கீகாரம்மேற்கொள்ளப்பட்டால் ஆயிரத்துக்கும் அதிகமான வெற்றிடம் காணப்படும். அந்தச் சந்தர்ப்பத்தில் 860 சுகாதாரத் தொண்டர்களையும் நிரந்தர சேவைக்குள் உள்வாங்க முடியும்" என்று வடக்கு மாகாண அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

முகாமைத்துவசேவைகள்திணைக்களம், வடக்கு மாகாண சுகாதார உதவியாளர் சேவைக்கு புதிய ஆளணி அங்கீகாரத்தை ஒருமாதகாலத்துக்குள்வழங்கவேண்டும் என்றுஅரசதலைவரின்செயலாளர்அறிவுறுத்தல்வழங்கினார்என்றுதெரிவிக்கப்பட்டது. (வ-101)

### தமிழகக் கட்சிகள் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்கத்தை, தி.மு.க. உள்ளிட்ட தமிழகக் கட்சிகள் பலவும் வரவேற்றுள்ளன.

'ஈழத் தமிழர்களுக்கான உரிமைகள் கிடைக்க இந்திய நடுவண் அரசு உரிய அழுத்தத்தை இலங்கைக்குக் கொடுக்க

>> 06

## எரிபொருள்தொடருந்தை வழிமறித்துப்போராட்டம்

கொழும்பு, ஜூலை 27

கொலன்னாவைப் பிரதேசத்தில் எரிபொருள் தொடருந்தைமறித்துஆர்ப்பாட்டம்நடத்தப்பட்டது. அவர்களில் 10 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கட்டுநாயக்க பண்டரநாயக்க பன்னாட்டு வானூர்திகளுக்குப் பயன்படுத்தும் சிறப்பு எரிபொருளை ஏற்றியவாறு பயணித்துக்கொண்டிருந்த தொடருந்து, கொலன்னாவையில் இடைமறிக்கப்பட்டது. கனிய எண்ணெய் பணியாளர் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள் சிலராலேயே இந்தத் தொடருந்து இடைமறிக்கப்பட்டது.

தமது பிரச்சினை தொடர்பான பேச்சு நிறைவு பெறும்வரைதொடருந்தைவிடுவிக்கப்போவதில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, "அத்தியாவசிய சேவையின் கீழ், கொலன்னாவைஎரிபொருள்களஞ்சியசாலையில் இருந்து 15 பவுசர்களில் எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை சுமார்15பவுசர்களில்எரிபொருள்விநியோகம் இடம்பெற்றுள்ளது" இராணுவ ஊடகபேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.

எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோதிலும், அதற்குதடைஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் பவுசர்கள் வெளியேற முடியாத வகையில் சாலைகள் மூடப்பட்டுள்ளன. கொலன்னாவைமற்றும்முத்துராஜவெலபகுதியின் நுழைவாயிலில் பாரியளவில் பவுசர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் ரயர்களில் காற்று வெளியேற்றப்பட்டுள்ளது. அந்த தடைகளை நீக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-10)

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஹேமச்சந்திரவின் இறுதிக் கிரியை

## பெருமளவானோர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனை இலக்குவைத்துநடத்தப்பட்டதுஎன்று கூறப்படும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த மெய்ப்பாதுகாவலரின் இறுதிக் கிரியைகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று நடைபெற்றது.

சரத் ஹேமச்சந்திரவின் சொந்த ஊரான சிலாபம், குமாரகட்டுவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றன. சமய அனுஷ்டானங்களை பௌத்த துறவிகள் நடத்தினர்.

இறுதிக் கிரியைகளில் மேல் நீதிமன்ற நீதிபதிகளான பிரேம்சங்கர், சசிமகேந்திரன் மற்றும் மா. இளஞ்செழியன் ஆகியோரும், மாவட்ட நீதிபதிகளான பிரபாகரன், அலெக்ஸ் ராஜா, ஜூட்சன், கருணாகரன், ரியாழ், வளன் ஆனந்தராஜா ஆகியோருடன் பல தமிழ் சிங்களநீதிபதிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், வடமாகாண பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன்சிறப்புஅதிரடிப்படையினர்கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர் ஆலயப் பின் வீதியில் நீதிபதி இளஞ்செழியனை இலக்குவைத்துநடத்தப்பட்டதுஎன்று கூறப்படும் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் சரத் ஹேமச்சந்திர என்ற நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர் உயிரிழந்தார். (ற)











உதவிப் பிரதேச செயலரின்

# “ரஞ்சன மஞ்சரி” நாளை வெளியீடு

சாவகச்சேரி, ஜூலை 27

தென்மராட்சி உதவிப் பிரதேச செயலரும் எழுத்தாளருமான செல்வி ரஞ்சனா நவரத்தினம் எழுதிய ‘ரஞ்சன மஞ்சரி’ (படைப்புகளின் தொகுப்பு) நூல் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் (காணி) சு.முரளிதரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழுவின் தலைவரும் ஓய்வுநிலை கிளிநொச்சி மாவட்ட மேலதிகச் செயலருமான செ.சிறிநிவாசன் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஸ்ணகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக மறவன்புலவு க.சச்சிதானந்தன், கவிஞர் த.நாகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (4-9)

# நல்லூர் ஆலயச் சூழலில் 25க்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கமராக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி கோயிலின் சுற்றாடலில் 25 க்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் நன்மை கருதியே கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. என யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

“கண்கானிப்பு கமராக்கள் யாவும் இந்த வாரத்துக்குள் பொருத்தி முடிக்கப்படும். ஆலய சுற்றாடல்களில் இடம்பெறும் குற்றச்செயல்கள் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் உடனடியாக கண்டு கொள்ள இது வசதியாக இருக்கும். கடந்த ஆண்டு நடைபெற்ற திருவிழாவின் போது கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டமையால் தான் குற்றச்செயல்கள் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டன. ஆலயத்தின் தூய்மை மற்றம் புனிதத் தன்மையை பேணவும் மாநகராட்சி மன்றம் சகல நடவடிக்கையையும் மேற்ளும் என்று மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (21-17)

# யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் ஹேமச்சந்திரவுக்கு அஞ்சலி



யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனை இலக்குவைத்துமேற்கொள்ளப்பட்டதுஎன்றுகூறப்படும்துப்பாக்கிச்சூட்டில்உயிரிழந்தமெய்ப்பாதுகாவலருக்கு யாழ்ப்பாணத்தில்உள்ளமுஸ்லிம்மக்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர். யாழ்ப்பாணம், ஐந்து சந்தி பகுதியில் ஒன்றுகூடிய முஸ்லிம் மக்கள், துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டதுடன்தமதுகடைகளைப் பூட்டி உயிரிழந்த மெய்ப்பாதுகாவலருக்கு மௌன அஞ்சலியும் செலுத்தினர். யாழ்ப்பாணம்மேல்நீதிமன்ற நீதிபதியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகம் கண்டனத்துக்குரியது. தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் அரங்கேறுவதற்குஇடமளிக்கக் கூடாது என்று அவர்கள் வலியுறுத்தினர். பழைய இரும்பு வியா பாரிகள் சார்பாக சமூச சேவகர் கே.எம் நிலாம் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. (ற-10)

## பொதுக் கூட்டம்

நாரந்தனை சைவ மகாசபையின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறும்.

தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு சபைத் தலைவர் வே.துரைராசா தலைமையில் கூட்டம் நடைபெறும் என்று செயலாளர் சு.இராமலிங்கம் தெரிவித்தார். (4,ரி)

# நல்லூர் கோவில் திருவிழாக்களில் இவற்றைப் பின்பற்ற அறிவுறுத்தல்

## யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவு விடுக்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. திருவிழாக் காலங்களில் ஆலயத்துக்கு வரும் அடியவர்களின் நலன் கருதி யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் பின்வரும் அறிவுறுத்தல்க ளைப் பின்பற்றுமாறு கோரியுள்ளனர்.

♦ உற்சவகாலத்தில் கோயில் சுற்றாடலிலும் கோயிலுக்கு வரும் பாதைகளிலும் தாங்கள் உள்ளெடுக்கக்கூடிய குடிதண்ணீர் மற்றும் உணவுப்பொருள்கள் சுகாதாரமானது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதோடு அது தொடர்பில் முறைப்பாடுகளை 021 222 2645 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது நல்லூர் பிரதேச பொது சுகாதார பரிசோதகரின் அலைபேசி இலக்கமான 071 862 85 19 இலக்கத்துக்குத் தெரிவியுங்கள்.

♦ குழந்தைகள், சிறுவர்கள் விரும்பி உண்ணும் சிற்றுண்டிகள் சுகாதார மற்ற முறையில் தயாரிக்கப்பட்டால் அல்லது விநியோகிக்கப்பட்டால் அவற்றை வாங்கிக் கொடுப்பதைத் தவிர்ப்பதோடு குறித்த தொலைபேசி இலக்கங்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்தவும்.

♦ அதிகளவான சீனி (சிவப்பு, செம்மஞ்சள் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட குடிபானங்கள்) நிறமூட்டிகள், சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட ஆரோக்கியத்தைக் கெடுக்கும் உணவுகளை இயன்றளவில் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

♦ சாலையில் பரப்பப்பட்டிருக்கும் மண்ணில் சுகாதாரத்தைப் பேணும் வகையில் ஆலய சுற்றாடலில் உள்ள குடியிருப்பாளர்கள் தங்கள் வளர்ப்பு நாய்கள் சாலைக்கு வராது பார்த்துக் கொள்ளுங்கள்.

கோயிலுக்கு வரும் அடியார்கள் தம்முடன் தமது வளர்ப்பு நாய்களைக் கூட்டி வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். மீறும் பட்சத்தில் அவை கட்டாக்காலி நாய்களாக கருதப்பட்டு அப்புறப்படுத்தப்படும் அல்லது நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும். குடியிருப் பாளர்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு வழங்கப்படும் பூச்சி மருந்தை நாய்கள் உட்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் வேண்டப்படுகிறீர்கள்.

♦ ஆலயச் சுற்றாடலுக்குப் பிளாஸ்ரிக், பொலித்தீன் மற்றும் ரெஜிபோம் பொருள்களை எடுத்து வருதல், அவற்றில் உணவு பொதியிடுதல் என்பன முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொது மக்கள் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

♦ அங்கப்பிரதட்சணம் மற்றும் அடியழித்தல் போன்ற நேர்த்திக் கடன்கனை நிறைவேற்றும் அடியவர்களின் நன்மைகருதியும் மண்ணின் சுகாதாரத்தைப் பேணுமுகமாகவும் ஆலயச்சுற்றாடலில் (உள்வீதித்தடைக்குள்) பாதணிகள் அணிந்து செல்வதை முற்றாக தவிர்க்குமாறும் ஆலய வீதிகளில் பரப்பப்பட்டுள்ள மணலின் மீதிருந்து உணவுப்பொருள்கள் உண்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் (கச்சான் கோது போடுதல், கார உணவு மீதிகள் படிந்த ரெஜிபோம் மற்றும் பேப்பர் பாக் போடுதல் போன்றவற்றை தவிர்த்தல்) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

♦ ஆலயச்சூழலில் நடமாடும் பொதுமக்கள் கழிவுப் பொருள்களை வீச வேண்டிய சந்தர்ப்பங்களில் அவற்றைத் தரம் பிரித்து அதற்கென வைக்கப்பட்டுள்ள கழிவுக்கூடைகளில் போடவும்.

♦ ஆலய சுற்றாடலில் தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்கப்படும் பட்சத்தில் அவற்றில் ஒலிபெருக்கிகளைச் சத்தமாக அலறவிடுவதோ திரைப்படப் பாடல்கள் இசைப்பதோ தவிர்த்து ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

♦ வீடுகளில் குறித்த தினங்களில் மட்டும் தண்ணீர்ப்பந்தல் மற்றும் அன்னதான நிகழ்வுகளை நடைமுறைப்படுத்துமாறும் மீறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை மேற்கொள்ள நேரிடலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

♦ பொது மக்கள் தங்கள் வீடுகளில் டெங்கு நுளம்புகள் பெருகாதவாறு சுற்றாடலைப் பேணுவதுடன் தங்கள் வீட்டுக்குத் திருவிழாவை முன்னிட்டு பிற மாவட்டங்களில் இருந்து வருகை தரும் விருந்தினர்கள் காய்ச்சலுடன் வரும் பட்சத்தில் உரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதை (காய்ச்சலுக்கு உட்பட்டவரை மருத்துவ பரிசோதனை உட்படுத்தல் நுளம்பு வலைகளை உபயோகிக்கவைத்தல், நுளம்புக் கடியில் இருந்து பாதுகாத்தல்) உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

♦ ஆலயச்சுற்றாடலிலும் மாநகரசபை எல்லைக்குள் வதியும் பொது மக்கள் தமது வீட்டுக்கழிவுகளை வீதிகளில் வீசி கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாது சுற்றுப்புறச்சூழல் சுகாதாரம் பேண ஒத்துழைக்குமாறும் வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.

♦ கோவிலுக்கு அண்மித்த சூழலில் வதியும் பொது மக்கள் தங்கள் வீட்டுக் கிணறுகளை இறைத்தும் நீர்த்தாங்கிகளைச் சுத்தம் செய்தும் கிணற்றுக்கு வாராந்தம் குளோரின் இடுவதற்கு சுகாதார பகுதியினரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**அன்னதான மடங்கள், தண்ணீர் பந்தல் நடத்துவோர் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள்**

தாங்கள் பொது மக்களுக்கு வழங்கும் உணவுப்பதார்த்தங்கள் குடிபானங்கள் சுத்தமானவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது தங்களது தலையாய கடமை.

♦ தங்கள் வளாகத்திலுள்ள கிணறுகளைத் திருவிழா தொடங்க முன்பு இறைத்து தண்ணீர்த்தாங்கிகளை கழுவிச் சுத்தம் செய்வதோடு அவற்றுக்குக் குறைந்தது வாரந்தோறும் குளோரினேற்றம் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

♦ உணவு கையாள்வோரும் குடிபானங்கள் வழங்குவோரும் தொற்று நோய்களுக்கு ஆளாகாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் முகமாக தற்காலிக மருத்துவ சான்றிதழை யாழ். மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகார பணிமனையில் பெற்றிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

♦ உணவு மற்றும் குடிபானங்களுக்கு சேர்க்கப்படும் நிறமூட்டிகள் தரமானவை என்பதை உறுதிப்படுத்தும் படியும், இது தொடர்பில் மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

♦ குடிதண்ணீர் தேவைக்காக பயன்படுத்தப்படும் நீரானது தரமானதாக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு தரச்சான்றிதழ் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். அல்லது மாநகரசபையால் வழங்கப்படும் குடிதண்ணீராக இருத்தல் வேண்டும்.

♦ பிளாஸ்ரிக் பொலித்தீன் (லஞ்சீற், ஒருநாள் கப், பிளாஸ்ரிக் போத்தல்கள்) பாவனைகளை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளவும். இவை நல்லூர் ஆலய சூழலில் தடை செய்யப்பட்டுள்ளன.

♦ கழிவுகளைத் தரம்பிரித்து அப்புறப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

♦ தங்களது கழிவு நீரின் தேக்கத்தால் இலையான் நுளம்பு போன்றவை பெருகாதிருக்க உரிய முறையில் கிடங்குகளில் கழிவுநீரைச் சேமித்துக் குறித்த தவணை இடைவேளைகளில் தகுந்த முறையில் அப்புறப்படுத்தி சுற்றாடல் சுகாதாரத்தை பேணவும்.

♦ எந்த நேரத்திலும் மேற்குறித்த நடைமுறைகள் பேணப்படாதவிடத்து அல்லது சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாதவிடத்து தங்கள் சேவை இடைநிறுத்தப்படுவதோடு சட்டநடவடிக்கையும் எடுக்க நேரிடலாம் - என்றுள்ளது. (4)

# யாழ். நகர கடைத் தொகுதி ஞாயிறன்று திறப்பு

நடைபாதை வியாபாரிகளுக்காக யாழ்ப்பாண நகரில் அமைக்கப்படும் சிறப்பு அங்காடி விற்பனைக் கூடங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

பேருந்து தரிப்பு நிலையத்துக்கு அருகில் சிறப்பு கடைத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. இவை யாவும் நடைபாதை வியாபாரிகளுக்கு வழங்கப்படும். முனீஸ்வரன் சாலையில் உள்ள நடைபாதை வியாபாரிகளுக்குஇந்த விற்பனை நிலையங்கள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். அங்காடிகள் திறக்கப்பட்டதும் முனீஸ்வரன் சாலையில் உள்ள நடைபாதைக் கடைகள் யாவும் அகற்றப்படும். அந்தச் சாலை ஊடான போக்குவரத்தை இலகுபடுத்துவதற்கு அது சீரமைக்கப்படும் - என்றார். (21-17)

## வேலணை முத்துமாரிக்கு நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 12 நாள்கள் திருவிழாக்கள் நடைபெறும். திருவிழாக் காலத்தில் காலை 6 மணிக்கு வழிபாடுகள் ஆரம்ப மாகும். மாலை நேரப் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (4,ரி)

## இளமை நீரூற்று கருத்தரங்கு

யாழ்ப்பாணத்தில் இளமை நீரூற்றுப் பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் மனவளக் கலை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 9.30 மணியிலிருந்து மதியம் 1.30 மணிவரை மருத்துவர் கே.தினேஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. முற்பகல் பங்குபற்றமுடியாதவர்களுக்கு பி.ப.2 மணியிலிருந்து 6 மணி வரை நடைபெறும். (10)

# வடமாகாணப் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்

## தேசியக் கருத்தரங்கு யாழ். செயலகத்தில் இன்று ஆரம்பம்

போரின்பின்னரானசூழலில்வடக்கு மாகாணப் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான தேசியக் கருத்தரங்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்றும் நாளையும்நடைபெற இருக்கின்றது.

"யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் 20க்கு மேற்பட்ட வல்லுநர்கள், புலமையாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் தமது ஆய்வுரைகளயும் கருத்துரைகளையும் முன்வைக்கவுள்ளனர்.

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் தேவநாயகம் தேவானந்த் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண மகளிர் விவகார சமூகசேவை மறுவாழ்வு மற்றும் கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் மற்றும் யாழ் மாவட்ட மேலதிக செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார். மதிப்புறு விருந்தினர்களாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே. பாலித பெர்னான்டோ யாழ்ப்பாண மாவட்டச் செயலக திட்டப் பணிப்பாளர் திருமதி ஆர்.மோகனேஸ்வரன், வட இலங்கை சர்வோதயம் அமைப்பின் அறங்காவலர் பொ. ஜமுனா தேவி, பெண்கள்அபிவிருத்திஇணைப்பாளர் செல்வி உதயனி நவரட்ணம் ஆகியோர்கலந்துசிறப்பிக்கிறார்கள்" என்று ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது. (வ)

# துவாரகேஸ்வரன் மீது பகிரங்கப் பிடியாணை

## புதுக்கடை நீதிமன்று நேற்று உத்தரவு

கொழும்பு, ஜூலை 27

யாழ்ப்பாண வர்த்தகர் தி.துவாரகேஸ்வரனுக்கு எதிராகப் பகிரங்கப் பிடியாணை உத்தரவு பிறப்பித்தது கொழும்பு, புதுக்கடை நீதிவான் மன்று.

தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு உத்தியோகத்தர்களை கடமை செய்யவிடாது அடாவடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக பொலிஸாரால் தாக்கல் செய்த வழக்கிலேயே நீதிமன்று இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட, துவாரகேஸ்வரனின் போக்குவரத்துச் சேவையில் பணியாற்றும் பேருந்து சாரதியை விளக்கமறியலில் வைக்க நீதிவான் மன்று கட்டளையிட்டது.

"தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவுக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்துவதில் முரண்பட்ட வர்த்தகர் துவாரகேஸ்வரன், அங்கு பணியாற்றும் அலுவலர்களுடன் அடாவடித் தனம் புரிந்துள்ளார். அது தொடர்பில் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் புதுக்கடை நீதிவான் மன்றில் துவாரகேஸ்வரனுக்கு எதிராக வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டது. அத்துடன், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் அறிவுறுத்தலை மீறி பேருந்தை நிறுத்தி வைத்த குற்றச்சாட்டில் துவாரகேஸ்வரனின் போக்குவரத்துச் சேவையில் பணியாற்றும் சாரதி கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறிய லில் வைக்கப்பட்டார்.

வர்த்தகரைக் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு அவருக்கு எதிராக புதுக்கடை நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ)

### கந்தபுராண எழுச்சி நாளை இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் கந்தபுராண எழுச்சி விழா நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. பி.ப.6.30மணிக்குநல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் இது நடைபெறவுள்ளது. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவகாலத்தை முன்னிட்டு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (4)

# பாடசாலை மாணவர்களுக்கு கந்தபுராண நூலறிவுப் போட்டி

மாணவர்களிடையே கந்தபுராணம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் பொருட்டு பாடசாலை மாணவர்களுக்கான கந்தபுராண நூலறிவுப் போட்டி நடத்தப்படவுள்ளது. நல்லூர் கந்தசுவாமி திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை யான காலப்பகுதியில் இவை நடத்தப்படவுள்ளன.

போட்டியிற் பங்குபற்றும் மாணவர்களின் கந்தபுராணம் தொடர்பான தேடலை இலகுவாக்கற்பொருட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த 19 ஆம் திகதி இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மூலமாக வெளியீடு செய்யப்பட்ட "கந்தபுராணவசனம்" எனும் நாவலர் பெருமான் உரைவகுத்த நூலைப் பாடசாலை மாணவர்களுக்கு 500 ரூபா வுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளது.

இதனை நல்லூர் சிறி ல சிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில்பெற்றுக் கொள்ளலாம் என்று திணைக்களம் அறிவித்துள்ளது. (4)

# ரவி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

## நாமல் எம்.பி. கூறுகின்றார்

அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்குஎதிராகநம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரத் தேவையானநடவடிக்கைகளைஎடுப்பது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்கள்கலந்துரையாடிவருகின்றனர். இவ்வாறுநாடாளுமன்றஉறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

திறைசேரிபிணைமுறிப்பத்திரமோசடி மூலம்நாட்டுமக்களுக்குஏற்படும்அநீதியை தடுக்க கூட்டு எதிர்க்கட்சி நடவடிக்கை எடுக்கும். அரசின் பலவீனத்தை மறைக்க அரச வளங்களை விற்பனைசெய்யும்அரசுமற்றுமொரு நாட்டை மகிழ்விக்க தேசிய வளங்களைகுறைந்தவிலையில்விற்பனை செய்கிறதா? -என்றார். (ற)

### அலங்கார திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 27

கைதடி மறவன்புலவு நாவற்குழி கலையாபரணன்கோட்டைஸ்ரீவள்ளி தேவஷேனா ஸ்ரீவள்ள வேலவன்தேவஸ்தானத்தின் அலங்காரத் திருவிழா இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். என அறிவிக்கப்பட்டது. (21)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### புலிகள்...

பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 28 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில்இணைத்துத்தடைவிதித்திருந்தது. அந்த அமைப்பின் நிதிச் செயற்பாடுகளையும் முடக்கியிருந்தது.

அமெரிக்காவில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தத் தடைப் பட்டியலில் 13 தனி நபர்களுடன், 22 அமைப்புகளும் உள்ளடக்கப்பட்டன.

11 ஆண்டுகளின் பின்னர் தற்போது அந்தத் தடை நீக்கப்பட்டுள்ளதால் விடுதலைப் புலிகள் அமைப்பின்முடக்கப்பட்ட நிதி விடுவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த நாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்புச் சார்ந்த நடவடிக்கைளைச் சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை தொடர்பில் தீர்ப்பளித்த ஐரோப்பிய ஒன்றிய ப் பொது நீதிமன்றம் தடையை நீடித்துத் தீர்ப்பளித்தி ருந்தது.

பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு சேர்த்துக்கொள்ளப்பட்ட முறைமை தவறு என்று லக்ஸம்பேர்க்கில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தது. இதேவேளை ஹமாஸ் அமைப்பு மீதான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற ஆயம் நீடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

### பிரமுகர்களின்...

முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை. யாழ்ப்பாணம்மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலரது துப்பாக்கியைப் பறித்து அவரைச் சுட்டுக் கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு வரும் பிரமுகர்களின் பாதுகாப்பு தொடர்பில், இந்தச் சம்பவத்தின் பின்பு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வழங்கப்படுகின்ற பாதுகாப்பு போதுமானதா ? மேலும் பாதுகாப்பு வழங்கவேண்டிய தேவை உள்ளதா ? என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. (து-5-8)

### அதிகளவில்...

தினம் கொழும்புக்குத் திரும்பினர். திருச்சி விமான நிலையத்தில் இருந்து 39 பேரும், சென்னை விமான நிலையத்தில் இருந்து 18 பேரும் இவ்வாறு தாயகம் திரும்பியுள்ள னர். இன்று வியாழக்கிழமை மேலும் 36 பேர், தமிழ்நாட்டில் இருந்து தாயகம் திரும்ப வுள்ளனர் என்று அகதிகளுக்கான ஐ.நா நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

2014ஆம் ஆண்டு சுயவிருப்பின் அடிப்படையில், 396 பேரும், 2015 ஆம் ஆண்டில், 452 பேரும் தாயகம் திரும்பியுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் இதுவரையில், 809 அகதிகள் இதுவரை தாயகம் திரும்பியுள்ள னர்.

இந்த ஆண்டு ஜூன் முதலாம் திகதி நிலவரப்படி, தமிழ்நாட்டில் உள்ள 107 முகாம்க ளில் 62,629 அகதிகளும். முகாம்களுக்குவெளியே 36,794 அகதிகளும் வசிப்பதாக தமிழ்நாடு அரசின் அதிகாரபூர்வத் தகவல்கள் கூறுகின்றன. (த)

### சரணடைந்த...

வந்தவர், யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை சரணடைந்திருந்தார். அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

அதன் பின்னர் நீதிவான் வீட்டில் முற்ப டுத்தியபோது, அவரை எதிர்வரும் 8ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதற்கு அமைவாக யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் தனிக் கூண்டில் அவர் அடைக்கப்பட்டுள்ளார். அவரை அவரது இரண்டாவது மனைவி நேற்றைய தினம் வந்து சந்தித்துள்ளார். அவரைத் தவிர வேறு எவரும், சந்தேக நபரைச் சந்திக்கவில்லை என்று தெரியவருகின்றது. (து-5-8)

### 9 மாகாண...

துணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களைத் தனித்தனியாக நடத்துவதனால் ஏற்படும் பாதிப்புக்களை உணர்ந்து, 9 மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவதற்கு ஏற்ற வகையில் அரசமைப்பு மற்றும் மாகாண சபைகள் சட்டத்தில் அது தொடர்பான விதப்புரைக ளைத் திருத்தம் செய்வதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று அமைச்சரவை துணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க மேலும் கூறினார். (த)

### அம்பாந்தோட்டை...

ரவை அங்கீகாரமளித்த நிலையில், அது நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரான மகிந்த சமரசிங்கவினால் சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அம்பாந்தோட்டைத் முறைமுகத்தில் சீனா 112 கோடி அமெரிக்க டொலர்கள்வரை முதலீடுகளைச் செய்யவுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரச்சபைக்கும், சைனா மேர்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்கஸ் கம்பனிக்கும் இடையே கைச்சாத்திடப்படவுள்ள குறித்த ஒப்பந்தத்தின் காலம் 99 வருடங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் தொடர்பில் நாளை வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ளது. (த)

### தமிழ்...

டித் தனமாகத் தாக்குதல் நடத்தியது. படுகாயமடைந்த பொலிஸ் அதிகாரி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"கொடிகாம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.சிங்கராஜா (வயது28) என்ற பொலிஸ் அதிகாரி கடமை முடிந்து நெல்லியடியில் உள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தார். நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விராலிமடப் பகுதியில் வைத்து இனந்தெரியாத கும்பல் அவரை வழிமறித்து கொட்டன்களால் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளது.

தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக மோட்டார் சைக்கிளையும் போட்டுவிட்டு பொலிஸ் அதிகாரி ஓடியுள்ளார். அவர் உடனடியாக நெல்லியடிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அதற்கிடையில் தாக்குதல் மேற்கொண்ட கும்பல் தப்பித்துச் சென்று விட்டது. காயமடைந்த நிலையில் பொலிஸ் அதிகாரியை மீட்ட நெல்லியடிப் பொலிஸார் உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்" என்று பொலிஸார்மேலும்தெரிவித்தனர். (வ-5-9-26)

### தமிழக...

வேண்டும். மேலும் ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழவிடுதலைப்புலிகள்மீதானதடையை நீக்கியிருப்பதை வரவேற்கிறேன். இந்தத் தடை நீக்கம் ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் ஒரு முக்கியமான திருப்பு முனையாக உள்ளது. ஈழத்தமிழர்கள் விரும்பும் நிரந்தர அரசியல் தீர்வு காண இந்திய நடுவண் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயர், பயங்கரவாதப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டத்தற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் மற்றும் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் ஆகியோர் வரவேற்றுள்ளனர்.

திராவிட விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, ஐரோப்பிய நீதிமன்றத்தின் இந்த அறிவிப்பு தமிழ் மக்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. அதே நேரத்தில் இது காலம் கடந்த அறிவிப்பாகவே பார்க்கத் தோன்றுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். (து-5)

# சிறுபோகச் செய்கை பல ஆயிரம் அழிவு

## விவசாயிகளுக்கு பெரு நட்டம் கூறுகிறார் விவசாயப் பணிப்பாளர்

அச்சுவேலி, ஜூலை 26
வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்பயிர்ச் செய்கையில் பல ஆயிரம் ஹெக்ரேயர் பயிர் அழிந்துள்ளதால் விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பை எதிர்கொண்டுள்ளனர்.
இவ்வாறு வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் உதயனுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,
இந்த வருடத்துக்கான சிறுபோக நெற்பயிர்ச் செய்கையில் உத்தேச இலக்கு 22 ஆயிரத்து 602 ஹெக்ரேயர் எனத் தீர்மானிக்கப்பட்டு நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.
அதில் பல ஆயிரம் ஹெக்ரேயர் அழிந்தன. சிறுபோக நெற்செய்கைக்குப் பயன்படும் குளங்களின் தண்ணீர் அளவு மிகக் குறைவாக இருந்ததால் நெற்பயிர்களுக்குத் தண்ணீர் விநியோகிக்க முடியவில்லை. மழை வீழ்ச்சிஅளவுகுறைந்து கடும் வரட்சி காணப்பட்டதால் நெற்பயிர்கள் வளர்ச்சி குன்றி கருகி மடிந்தன. அதனால்கடந்தகாலபெரும்போக நெற்பயிர்ச்செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டது. சிறுபோக நெற்பயிர்ச் செய்கையும் பாதிக்கப்பட்டது- என்றார். (4-11)

# மன்னார் முதன்மைச் சாலைகளில் வீதிச் சமிஞ்ஞைகள் அவசியம்

## மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை

மன்னார், ஜூலை 26
மன்னாரில் உள்ள முதன்மைச் சாலைகளில் பாதசாரிகள் கடவைகளுக்கான சமிஞ்ஞைகள் அமைக்கப்படவில்லை.
இதனால் சாலைகளைக் கடக்க முற்படும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே சாலைகளுக்குரிய சமிஞ்ஞைகளை அமைத்து உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
முதன்மைச் சாலைகளில் மக்களினுடைய போக்குவரத்து அதிகரித்துள்ளது, அதனால் சன நெரிசலுள்ள இடங்களில் மஞ்சள் கோடு அல்லது வெள்ளைக்கோடுகள் மற்றும் சிக்னல் லைற்கள் பொருத்தப்பட வேண்டும். ஆனால் மன்னாரில் அவ்வாறான சமிஞ்ஞைகள் சொற்ப அளவிலேயே அமைக்கப்பட்டுள்ளன.
மருத்துவமனை, பாடசாலைகள், வழிபாட்டுத்தளங்கள், அரச அலுவலகங்கள் உள்ள இடங்கள், பேரூந்து தரிப்பிடங்கள், ஆகிய இடங்க ளில் பதசாரிகள் கடந்து செல்வதற்கு மஞ்சள் கோடுகளோ, வெள்ளைக் கோடுகளோ இல்லை இருந்த சிலவும் அழிந்து போய் உள்ளது. அவை மீண்டும் புதுப்பிக்கப்பட வில்லை.
முக்கியமாக சமிக்ஞை விளக்கு இருக்கவேண்டிய இடங்களான பொது மருத்துவமனைச் சந்தி (நாற்சந்தி), கச்சேரி முன்பகுதி என்பவற்றில் அதற்கான எந்த ஏற்பாடுகளும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. விபத்துக்கள் அதிகமாகும் இந்த காலப்பகுதியில் மக்களின் பாதுகாப்பினையும் நலனையும் கருத்தில் கொண்டு சாலைகளுக்கான சமிஞ்ஞைகளை சிறந்த முறையில் அமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்கின்றனர் மக்கள். (21)

# தேசியக் கொடியை வீசியவர் சரீரப் பிணையில் விடுவிப்பு

வவுனியா, ஜூலை 27
வவுனியா மாவட்டச் செயலகத்தில் பறக்கவிடப்பட்ட இலங்கை தேசியக்கொடியை . கம்பத்தில் இருந்து கழற்றி வீசியவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்..
வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் காலை வழமை போல் இலங்கை தேசியக்கொடி பறக்கவிடப்பட்டது. அந்த கொடி பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபரால் திடீரென கீழே இறக்கப்பட்டது.
தேசிய கொடியை அவமதித்தார் என்று பொலிஸார் அவரைக் கைது செய்தனர். அவர் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. கைது செய்யப்பட்டவருடைய மனைவி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். சந்தேக நபர் மனநலம் பாதிக்கப்பட்டு கடந்த 2014ஆம் ஆண்டிலிருந்து மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். மனைவி விளக்கினார். நேற்றுமுந்தினம் இரவு பொலிஸார் அவரை வவுனியா நீதிவான் லெலின் குமாரிடம் முற்படுத்தினர்.
ஒரு லட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார். எதிர்வரும் 22ஆம் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (21)

## வறட்சியால் பெரும் அவலம்

# கிளிநொச்சியில் பெரும் தண்ணீர் தட்டுப்பாடு

## கரைச்சி பிரதேச சபையின் நீர் மூலங்களும் வற்றின

கிளிநொச்சி, ஜூலை 27
வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மக்களுக்கு குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதில் கரைச்சிப் பிரதேச சபையும் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்கிறது என கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் க. கம்சநாதன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
வறட்சி காரணமாக வடக்கு மாகாணமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கிளிநொச்சி மாவட்டத்திலும் குடிதண்ணீர் உள்ளிட்ட நீர்த் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வது கடும் நெருக்கடியாக மாறி இருக்கிறது.
பாதிக்கப்பட்ட இடங்களுக்கு கரைச்சி பிரதேச சபை குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகிறது. ஆனால் செருக்கன் கிராமத்துக்கு இரண்டுநாளுக்கு ஒரு தடவையும், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, உமையாள்புரம் கிராமங்களுக்கு ஒன்று விட்டு ஒரு நாளைக்கும் என குடிதண்ணீர் விநியோகிக்கப் பட்டு வருகின்றது. இதற்காக நாளாந்தம் 24,000லீற்றர்குடிதண்ணீர் இரண்டு கிணறுகளில் இருந்து பெறப்படுகிறது.



பிரதேச சபையின் கிணறு மற்றும் கிளிநொச்சி கமநல சேவைகள் திணைக்களத்தினுடைய கிணறு என்பன இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. பிரதேச சபைக் கிணற்றில் தண்ணீர் வெகுவாக வற்றிவிட்டது. கிணற்றின் அடிமட்டத்துக்குச் சென்றுள்ளது.
இந்தக் கிணற்றிலிருந்து 4 ஆயிரம் லீற்றர் குடி தண்ணீரைப் பெறுவதற்கு சுமார் நான்கு மணித்தியாலயங்களுக்கு மேல் காத்திருக்க வேண்டியுள்ளது. அதுவும் இன்னும் சில நாள்கள் மட்டுமே சாத்தி யம். வறட்சி தொடர்ந்தால் புதிய குடிதண்ணீர் மூலங்களைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.
ஆனால் அதிக தொலைவில் இல்லாத வேறு குடிதண்ணீர் மூலங்களைகிளிநொச்சியில் அடையாளம் காணப்பது அரிதானது.
இனிவரும் நாள்களில் தனியாரின்கிணறுகளில் அவர்களின் சம்மதத்துடன் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்- என்றார். (21,35)

# ரூபா 6 இலட்சம் பெறுமதியான 44 முதிரைமரக் குற்றிகள் மீட்பு

## எருவுக்குள் மறைத்து கடத்தப்பட்டவை

கிளிநொச்சி, ஜூலை 27
முல்லைத்தீவு, மல்லாவிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்பட்ட முதிரைமரக்குற்றிகள் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டன
44 முதிரை மரக் குற்றிகள் எருவுக்குள் மறைத்து லொறி ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டன.
பளை இத்தாவில் பகுதியில் லொறி மடக்கப் பட்டது. சுமார்6லட்சம்பெறுமதியானவை என மதிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



மரக்குற்றிகளைக் கடத்திய சந்தேகத்தின் பேரில் சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ் மா அதிபரின் சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவி னருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கடத்தல் முறிய டிக்கப்பட்டது. லொறி தடுத்து வைக்கப்பட்டுள்ளது. விசார ணைகள் இடம்பெறுகின்றன. கைது செய்யப்பட்ட நபர்கள் மேலதிய விசார ணைகளுக்காகவும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகவும், கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என வன்னி பிரதி பொலிஸ் மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (21,35)

# தீயில் எரிந்த வீட்டை சீரமைக்க நிதியுதவி

வவுனியா, ஜூலை 27
தீ விபத்தில் முற்றாக எரிந்து சாம்பலாகிய வீட்டை சீரமைப்பதற்கு ஶ்ரீரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் நிதி உதவி வழங்கினார்.
வவுனியா செட்டிகுளம் பகுதியில் உள்ள வீடொன்று கடந்த 24ஆம் திகதி தீ விபத்துக்குக்குள்ளானது. வீட்டின் பொருள்கள் உட்பட அனைத்தும் தீயில் கருகின. விபத்துக்கு காரணம் மின்னொழுக்குஎனகூறப்பட்டது. எனினும் உறுதிக்கடுத்தப்படவில்லை என்றனர் பொலிஸார். வீட்டைச் சீர மைப்பதற்கு நிதியின்றி அந்த குடும்பம் உதவி கோரியது. ஶ்ரீரெலோ கட்சியின் செயலாளர் ப. உதயராசா வீட்டைச் சென்று பார்வையிட்டார். உதவுவதாக தெரிவித்தார். அதன்படி நேற்று முன்தினம் 50 ஆயிரம் ரூபா நிதியை வீட்டின் உரிமையாளரிடம் கையளித்தார். ஶ்ரீரெலோ கட்சியின் இளைஞர் அணித்தலைவர் ப. கார்த்தீபன், செயலாளர் தினேஸ் மற்றும் கட்சியின் உறுப்பினர்களும் உடன் சென்றிருந்தனர். (21)

## பெற்றோர்களே!



★கண்களில் இரசாயனப் பொருள்கள், சுண்ணாம்பு போன்ற பொருள்கள் வீழ்ந்து விட்டால் சுத்தமான ஓடும் நீரினால் 15.20 நிமிடங்கள் வரை கழுவுங்கள்.
★கண்களைக் கசக்கக் கூடாது.
★விரைவாகக் கண் வைத்தியரின் ஆலோசனை பெறவும்.
★சிறப்பு நாள்களில், பட்டாசு கொழுத்தி வீசும்போது கவனம் தேவை.



*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ் .மாநகர சபை.*

# புலமைப் பரீட்சைக்கு வடக்கில் 20 ஆயிரம் பேர் தோற்றுவர்

## நாடு முழுவதும் 357 ஆயிரம் பேர்

யாழ்ப்பாணம், ஜூலை 27
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் இந்தமுறை 20 ஆயிரத்து 481 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்று மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்தது.

நாடு முழுவதும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.

214 நிலையங்களின் ஊடாக பரீட்சை நடைபெறும். யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாவது பரீட்சைப் பிரிவில் உள்ள 40 பரீட்சை நிலையங்களின் ஊடாக 3 ஆயிரத்து 712 மாணவர்களும், இரண்டாவது பிரிவில் உள்ள 52 பரீட்சை நிலையங்களின் ஊடாக 5 ஆயிரத்து 492 மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 32 பரீட்சை நிலையங்களின் ஊடாக 3 ஆயிரத்து 141 மாணவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 28 பரீட்சை நிலையங்களின் ஊடாக 2 ஆயிரத்து 771 மாணவர்களும், வவுனியா மாவட்டத்தில் 34 பரீட்சை நிலையங்கள் ஊடாக 3 ஆயிரத்து 81 மாணவர்களும், மன்னார் மாவட்டத்தில் 28 பரீட்சை நிலையங்களின் ஊடாக 2 ஆயிரத்து 284 மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

நாடுமுழுவதிலிருந்தும் இந்தமுறை 3 லட்சத்து 56 ஆயிரத்து 728 மாணவர்கள் தோற்றுகின்றனர் என்று கல்வித் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

கடந்த வருடம் இந்தப் பரீட்சைக்கு 3 ஆயிரத்து 14 பரீட்சை மையங்களில் 3 லட்சத்து 43 ஆயிரத்து 757 மாணவர்கள் தோற்றியிருந்தனர் என்று பரீட்சைத் திணைக்களப் புள்ளிவிபரங்கள் தெரிவித்தன.

(4,ரி)

# வடக்கு மாகாணத்தில் இளவயதுத் திருமணம் இந்த வருடம் குறைவு

## நன்னடத்தைத் திணைக்களம் கூறுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 26
வடக்கு மாகாணத்தில் இள வயதில் திருமணம் செய்யும் சிறார்களின் எண்ணிக்கை கடந்த வருடத்தைவிட நடப்பு வருடத்தில் குறைவடைத்துள்ளது என்று வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்களம் தெரிவித்தது.

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் இளவயதில் திருமணம் செய்யும் சிறார்களின் எண்ணிக்கை 61 ஆகக் காணப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 முல்லைத்தீவு மாவட்டத்தில் 8மன்னார் மாவட்டத்தில் 12 இளவயதுத் திருமணங்களும், வவுனியா மாவட்டத்தில் 8 இளவயதுத் திருமணங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 17 இளவயதுத் திருமணங்க ளும் நடைபெற்றுள்ளன.

நடப்பு வருடத்தில் இதுவரை 24 இளவயதுத் திருமணங்களே நடைபெற்றுள்ளன. இவ்வாறு யாழ்ப்பாணம் 5 முல்லைத்தீவு- 8 மன்னார் கிளிநொச்சி-10 திருமணங்களும் நடைபெற்றுள்ளன. வவுனியா மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் எந்தவொரு இளவயதுத் திருமணமும் நடைபெறவில்லை. (4,ரி)

# சைவப் புலவர் தேர்வில் எவரும் சித்திபெறவில்லை தேர்வுச் செயலர் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 26
அகில இலங்கை சைவப்புலவர்சங்கம் இந்தவருடம் நடத்திய சைவப்புலவர் தேர்வில் 31பரீட்சார்த்திகள் தோற்றியிருந்த பொழுதும் எவரும் சித்தி பெற்றிருக்கவில்லை என்று சங்கத்தின் தேர்வுச் செயலாளர் கந்த சத்தியதாசன் கவலை தெரிவித்தார்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் இந்த வருடம் அகில இலங்கை ரீதியாக நடத்தியிருந்த இளஞ்சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வில் சித்தி பெற்றோர் விபரங்களை அறிவித்துள்ளது.

இளஞ்சைவப்புலவர் தேர்வில் 2 ஆம்பிரிவில் பின்வருவோர் சித்தி பெற்றுள்ளனர்.

திருமதிகமலாதேவிசபாரத்தினம்-அரியாலை, திருமதி உருக்மணிதேவி சிவபாலன்-கொழும்பு, திருமதிஜெயலோசனாசிவஞானசுந்தரம் -கொழும்பு, க.கௌசிகன் - தேத்தாத்தீவு, செ.சதீஸ்குமார்-பொலநறுவை, செல்வி சுவாசினிவேலாயுதம் பொலநறுவை, செ.கேமநாதன்-பொலநறுவை, மு.சேமகரன் -அவுஸ்ரேலியா, செல்வி குயிலினி பஞ்சலிங்கம்-பூநகரி, அ.நாகநாதன்-மன்னார், செல்வி அனிதா பஞ்சலிங்கம்- பூநகரி, செல்வி வதனி சின்னையா- மன்னார், செல்வி லோஜினி முத்துக்குமார்- பொலநறுவை, த. மனோஜ்குமார் -இணுவில், செல்விதீவாஅர்ச்சனாதுறைராஜா -புத்தளம்.

இளஞ்சைவப்புலவர் 3 ஆம் பிரிவில் திருமதி நரேந்திரதிலகை நடராஜா -கொழும்பு, திருமதிநிர்மலாதனசிங்கநாதன் -கொழும்பு, செல்வி சனுஸ்யா சின்னராசா- அளவெட்டி, செல்வி மந்தாகினி பாலச்சந்திரன் பூநகரி, செல்விலவனியாவேல்நாயகம் -பொலநறுவை, கு.கந்தபாலன்-கோப்பாய் ஆகியோர் சித்திபெற்றுள்ளனர். (4,28)

# கட்டடங்கள் ஏன் திறக்கப்படவில்லை? உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்கவும்

## மாவட்ட உதவி ஆணையாளர்களுக்கு மாகாண ஆணையாளர் பணிப்பு

வடக்கு மாகாணத்தில் நெல்சிப் திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்டு இதுவரை பாவனைக்காகத் திறந்து வைக்கப்படாத கட்டடங்கள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்கவும்.

இவ்வாறு மாவட்ட உதவி ஆணையாளர்களுக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்பணித்துள்ளார்.

கடந்தவாரம் இந்த விடயம் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசாவால் சபையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வடக்கு மாகாணஉள்ளூராட்சிஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நெல்சிப் திட்டத்தின் ஊடாக பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு இன்னமும் திறக்கப்படாமல் பல கட்டடங்கள் உள்ளன. அவற்றைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்ட கட்டடங்கள் ஏன் இன்னமும் திறக்கப்படாமல் உள்ளன? அதிலே காணப்படும் குறைபாடுகள் என்ன? என்று ஆராய்ந்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று மாவட்ட உதவி ஆணையாளர்களிடம் பணித்துள்ளேன். அவர்களின் அறிக்கைகள் கிடைத்த பின்னர் அவை தொடர்பில் ஆராய்ந்து அனைத்துக் கட்டடங்களையும் திறப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

வடக்கு மாகாணத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 100 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 10 கட்டடங்கள் இன்னமும் திறக்கப்படவில்லை என்று பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியிருந்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் கரத்துறைப்பற்று பிரதேச சபையினர் அமைத்த சிறுவர் பூங்கா, மன்னார் மாவட்ட முசலிப் பிரதேச சபையினர் அமைத்த மறிச்சுக்கட்டி கடைத்தொகுதி மற்றும் சிலாவத்துறைக் கடைத்தொகுதி, மன்னார் மாவட்ட நகர சபையினர் அமைத்த நகர சபைப் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் உள்ள கடைத்தொகுதி, மன்னார் பிரதேச சபையினர் அமைத்த எருக்கலம்பிட்டி கொல்களம், வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபையினர் அமைத்தபெரியஉலுக்குளம் சந்தை, மகா கச்சக்கொடிய சந்தை ஈரற் பெரிய குளம் சந்தை, ஈரற்பெரியகுளம்கலாசார மண்டபம் மற்றும் தோணிக்கல் விளை யாட்டரங்கு என்பன இன்னமும் திறக்கப்படாமல் உள்ளன.

(4,ரி)

# சுமந்திரன் மீதான கொலை முயற்சி ஐவருக்கும் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஜூலை 27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீதான கொலைமுயற்சி வழக்கில், ஐந்து சந்தேகநபர்களுக்கும் கிளிநொச்சி நீதிமன்று எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலை நீடித்தது நேற்று. "கொலைமுயற்சி தொடர்பான விசாரணைகள் முடிவடைந்து அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பு பற்றிய குற்றச்சாட்டுக் குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்றுபயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நீதிமன்றில் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(4,6)

# வவுனியா கொல்களத்தில் காளைகளே வெட்டப்படுகின்றன

## மாகாண கால்நடைப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம் ஜூலை 27
வவுனியா நகரசபைக்குச் சொந்தமான கொல் களத்தில் காளை மாடுகளை மட்டுமே மருத்துவ பரிசோதனைக்குப் பின்னர் வெட்டுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்கள பணிப்பாளர் எஸ்.வசீகரன் இதனைத் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் இருக்கின்ற கொல் களத்தில் முறையற்ற விதத்தில் மாடுகள் வெட்டப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அதன் பின்னர் இந்த விடயம் வவுனியா நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

''நீதிமன்றின் ஆலோசனைக்கு அமைய காளை மாடுகள் மட்டும் அங்கு வெட்டப்படுகின்றன." என்றார் பணிப்பாளர்.

''கொண்டுவரப்படும் மாடுகளில் காளை மாடுகள் மட்டுமே வெட்டுவதற்குத் தேர்வு செய்யப்படுகின்றன. அவை 24 மணித்தியாலங்களுக்குக் கொல் களத்தில் கட்டிவைக்கப்படும். அங்கு சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கால்நடை மருத்துவர்கள் பரிசோதனை செய்வார்கள். நோய்த் தாக்கம் ஏற்பட்டிருக்கும் கால்நடைகளை வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படாது. முன்னர் இருந்ததைவிடப் பல கட்டுப்பாடுகளுடனேயே வவுனியா கொல் களத்தில் மாடுகள் வெட்டப்படுகின்றன"-என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சுகாதாரத்துறையினரும் கால்நடை மருத்துவ அதிகாரிகளும் பரிசோதனை மேற்கொண்ட பின்னரே கால்நடைகள் வெட்டுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன என்று வவுனியா நகரசபைச் செயலாளர் தெரிவித்தார்.

எனினும் வவுனியாவில் களவாடப்படும் மாடுகளும் கொல்களத்தில் வெட்டப்படுகின்றன என்று கால்நடை உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அதனால் மாடுகள் திருடப்படுவது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும் பயன்கிடைக்காது போகின்றது. எனினும் அவர்கள் கவலைப்படுகின்றனர்.

(4,8)

# சமூக அமைப்புக்கள் வலுப் பெறுவதை விரும்புவதில்லை அரச அதிகாரிகள்

## திருமலை சனசமூக நிலைய அபிவிருத்தி அலுவலர் முரளிதரன் தெரிவிப்பு

மூதூர், ஜூலை 27

சமூகமட்ட அமைப்புக்கள் வலுப்பெறுவதை அரச உயரதிகாரிகள் மற்றும் அரசியல் தலைமைகள் விரும்புவதில்லை. அது தமக்கு அசௌகரித்தை ஏற்படுத்துவதாக எண்ணுகிறார்கள். சமூக மட்ட அமைப்புக்கள் கேள்வி கேட்கத் தொடங்கினால், தமது தான்தோன்றித்தனமான செயல்களுக்கு முட்டுக்கட்டை வந்துவிடும் என அஞ்சுகிறார்கள் எனத் திருகோணமலை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். முரளிதரன் தெரிவித்தார்.

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது இருந்த அன்புவழிபுரம் காந்திநகர் சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டு கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராமங்களில் மது, போதைப்பொருள் பாவனை போன்ற விடயங்களைக் கட்டுப்படுத்துவதற்குச் சமூக மட்ட அமைப்புக்கள் வலுவடைய வேண்டும். சமூக மட்ட அமைப்புகள் வலுவடையும்போதுதான் கிராமங்களில் முன்னேற்றமும் அபியிருத்தியும் ஏற்படும்.

அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் அலட்சியப் போக்குகளுக்கும் முடிவுகட்டப்படும். அதற்கு முக்கியமாக இளம் சமூகத்தினர் முன்வர வேண்டும் - என்றார். (த-ய-40)

# பசில் குறித்த விசாரணை அறிக்கைகள் மைத்திரிக்கு

கொழும்பு, ஜூலை 27

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச உட்பட்ட விசாரணைகள் பற்றிய அறிக்கைகள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளதாகப் பெரும் நிதி மோசடி விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுச் சொத்துகளை மோசடி செய்ததாக முன்னாள் அமைச்சர்களான பசில் ராஜபக்ச மற்றும் மகிந்தானந்த அளுத்கமகே ஆகிய இருவர் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் நாவலப்பிட்டி ரயில்வே நிலையத்தின் காணி சுவீகரிப்பு, மலையக அபிவிருத்தி அதிகாரசபை, நுகர்வோர் அதிகாரசபை ஆகியவற்றின் நிதிகளை மோசடி செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளும் உள்ளடங்குவதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அரச தலைவர் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(த)

# புளுகுணாவைக் குளத்தில் மீனவர்கள் மீது தாக்குதல்

## வலைகள், தொலைபேசி அபகரிப்பு இனந்தெரியாத நபர்கள் அடாவடி

மட்டக்களப்பு, ஜூலை 28

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளுகுணாவை குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இரு மீனவர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ள இந்தச்சம்பவத்தில் தாந்தாமலை கிராம மீனவர் சங்கத்தின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்

மாலைவேளை இவர்கள் குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். அப்போது அங்கு வந்த இனந்தெரியாதவர்கள் இவர்களைத் தாக்கியுள்ளனர். பின்னர் அவர்களிடமிருந்த வலைகள் மற்றும் தொலைபேசிகளையும் பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் அங்குள்ள மீனவர்களிடையே பதற்ற நிலையேற் பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தாம் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர். (த-ய-46)

# கொழும்புத் துறைமுக வளவில் விமான நிலையம் நிறுவ திட்டம்

கொழும்புத் துறைமுக வளவில் விமானநிலையமொன்றை அமைப்பதற்கான திட்டமொன்று ஆலோசனையில் இருப்பதாக மாநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இதற்கான பிரேரணையொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும், அடுத்த பத்து ஆண்டுகளில் இந்தத் திட்டம் பூர்த்திசெய்யப் படவுள்ளதாகவும், இதன் நிர்மாணப் பணிகள் முடிவடைந்த பின் மக்கள் கட்டுநாயக்கவுக்குச் செல்வதைத் தவிர்த்து கொழும்பு கோட்டையிலிருந்தே தங்கள் விமானப் பயணங்களை ஆரம்பிக்கலாம் எனவும் அவர் கூறினார். (த)

## நாரந்தனை சைவ மகா சபையின் வருடாந்த பொதுக்கூட்டம்

**(தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்)**

**29.07.2017**

*அம்பிகை அடியார்களே!*

நிகழும் ஏவிளம்பி வருடம் ஆடித்திங்கள் 13 ஆம் நாள் (29.07.2017) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் தான்தோன்றி ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்தில் சபைத் தலைவர் வே.துரைராசா அவர்களின் தலைமையின் கீழ் மேற்படி கூட்டம் நடைபெற அம்பிகையின் அருள் கூடியுள்ளது. அத்தருணம் சபை அங்கத்தவர்கள், அம்பிகை அடியார்கள் யாவரும் வருகைதந்து பங்குபற்றும்மாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**சைவமகாசபை**
**நாரந்தனை.**

**சு.இராமலிங்கம்**
**செயலாளர்**

## St.John's Sympathies

Miss Sayanthiri Arunthavarajah joined the St John Ambulance Association & Brigade in Sri Lanka in 1997. She Was appointed to the rank of Divisional officer. She was very active and dedicated who has attended several public duties, handle the injured and nursing the sick. She was selected to be the best cadet. Who has attended during disasters and Annual National Cadets Camps and took enormous pains to Train young members. She devoted her service during Tsunami disaster. She is an energetic young lady who has devoted her life in serving the humanity. We are highly worried to her sudden death and we have lost valuable officer and convey our deepest sympathies. To the families and St John families in Sri Lanka.

T.F.Jayah
Director-Administrative Secretary

FATHER K.ARUNTHAVARAJAH
077 321 2512

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை சுத்தப்படுத்தல் சேவை வழங்குவதற்கான விலைமனு கோரல்

இல. 84, ஜும்மாபள்ளி வாசல்வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்திற்கு ஒருவருடகாலத்திற்கு சுத்தப்படுத்தல் சேவையை வழங்குவதற்கான அரக்கிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

வியாபாரப் பெயர்கள் சட்டம் இல. 4/1990 இனால் ஒன்றிணைக்கப்பட்ட வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 149) இன்படி பதிவு செய்த அல்லது வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றுடன் இணைக்கப்பட் டமைக்கான சான்றிதழ் (பகுதி 20 இன் பிரகாரம்) உள்ள நிறுவனங்கள் அல்லது தனிநபர் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் தொடர்புடைய விலைமனு ஆவணங்களை 08.08.2017 மதியம் 12.00 மணி வரை உதவிப்பதிவாளர்/ நிர்வாகக் கிளை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/- ஐ நிதிக்கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப்பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் உறையிலிடப்பட்டு அவ்வுறையின் மேல் மூலையில் "சுத்தப்படுத்தல் சேவை வழங்குவதற்கான விலைமனு" என அடையாளமிடப்பட்டு 10.08.2017 பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ இல. 57 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் இடப்படலாம்.

விலைமனுக்கள் 10.08.2017 அன்று பி.ப 2.30 மணிக்குப் திறக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் இடமான சபாமண்டபத்திற்கு சமுகமளிக்கலாம்.

சம்பள சபைகள் கட்டளைச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திற்குக் குறையாத சம்பளம் ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்ற உத்தரவாதம் சேவை வழங்குநரால் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**பதிவாளர்.**

## பெயர் மாற்றம்

பூவத்தோட்ட இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி யைச் சேர்ந்த **மார்க்கண்டன்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **கோபாலன்** எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப் பமிடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**சி. கோபாலன்**

## பெயர் மாற்றம்

இணுவில் தெற்கு இணுவிலைச்சேர்ந்த **வி.காந்தினி தேவி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **வி.சாந்தினி** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்

**வி.சாந்தினி**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கைதடி சந்தியிலிருந்து 150M தூரத்தில் A9 பாதைக்கு அருகில் பொன்னம்பலம் எரிபொருள் நிலையத்துக்கு அருகில் 8.5 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு.0714765998**

## வீடு வாடகைக்குண்டு

சுண்டுக்குளி பாடசாலை அருகில் **(250m)** 4 அறைகளுடன் கூடிய **(Ac/Non Ac)** நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய மாடிவீடு நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.

**(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)**

**தொடர்பு: 077 302 7618**

## கேள்விஅறிவித்தல்

**மாகாணகுறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) - 2017**

**வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி.**

ஒப்பந்த பெயர்:- மருதோடை குடிநீர் திட்டத்திற்கான கிணறு மற்றும் நீர்த்தாங்கி அமைத்தல்
ஒப்பந்த இல:- PSDG/VU/VNPS/W/02

1. தலைவர், பெறுகைக்குழு, வவுனியாவடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவீதி, கட்டுமான வேலைக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டிகேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது. இருப்பினும், வடமாகாணத்தின் நிர்வாக எல்லையில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.
3. கேள்வி பெறதகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொதுநிதிசுற்றறிக்கை 04/2016(i) இலக்க 16.03.2016ம் திகதிய சுற்றறிக்கைக்கு அமைவாகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பிற்கான சிடா(CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வவுனியா வடக்குப் பிரதேச சபை.நெடுங்கேணி (தொலைபேசி: 024-2053014, மின்னஞ்சல் - vnpsnk@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை 2017.08.22 ஆம் திகதி வரைகேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி எனும் இடத்திலிருந்து 2017.07.31 ஆம் திகதியிலிருந்து 2017.08.22 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி எனும் முகவரிக்கு 2017.08.22 ஆம் திகதி 14,30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து (77நாட்கள்) 2017.11.07 திகதி வரையும் செல்லுபடியாகும்.
8. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/VU/VNPS/W/02 | மருதோடை குடிநீர் திட்டத்திற்கான கிணறு மற்றும் நீர்த்தாங்கி அமைத்தல் | 3.868Mn | 3 Months | C8 | 39,000.00 | 2017.12.05 |

9. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2017.08.16ம் திகதி 14.30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர், உள்ளூராட்சி மன்றபெறுகைக்குழு,**
**வவுனியா வடக்குபிரதேச சபை, நெடுங்கேணி,**
**2017.07.27**

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08.10.1939 மறைவு 01.08.2003

**அமரர் சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை**

(பங்குதாரர்
நியூ சோபிதா நகைமாடம்)

திதி : **27.07.2017**



அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பதின்னான்கு
ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயர்
இதயத்தை விட்டகலா நினைவுகளுடன்
இறைவனை வேண்டுகின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்.

"திருவேரகம்"
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

நியூ சோபிதா நகைமாடம்,
74/1,(184), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.



# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 04 ஆம் நாள் (19.07.2017) புதன்கிழமை அபரபட்ஷ ஏகாதசி திதியில் இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் யோகம்மா இராஜேஸ்வர ஐயர்**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

28.07.2017 வெள்ளிக்கிழமை மு.ப 10 மணி தசாகம்
29.07.2017 சனிக்கிழமை மு.ப 9.00 மணி ஏகோதிஷ்டம் மாசிகம்
30.07.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணி சபிண்டீகரணம்
31.07.2017 திங்கட்கிழமை மு.ப 10.00 மணி கிருஹயக்ஞம்
மதியம் 12.00 மணி சமாராதனை (மதியபோசனம்)

மேற்படி தினங்களில் நடைபெறும் கிரியைகளிலும் பங்கு பற்றி அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் சமராதனையிலும் (மதியபோசனத்திலும்) கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேற்படி கிரியைகள் யாவும் விளைவேலி துர்க்கை அம்மன் கோயில் அருகில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும.

விளைவேலி துர்க்கை அம்மன் கோயிலடி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.



# நினைவஞ்சலி



**தம்பிப்பிள்ளை மயில்வாகனம்**
தோற்றம் 14.02.1926 மறைவு 07.08.2016

**மயில்வாகனம் கண்ணம்மா**
தோற்றம் 06.01.1936 மறைவு 24.11.2015



ஆண்டுகள் பல ஆனாலும் அழியாத உங்கள்
நினைவுகள் எங்களோடு வாழும்
எங்கள் அன்புத் தெய்வங்களே உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

செட்டிச்சோலை
அளவெட்டி வடக்கு.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்


## டெங்கு, குப்பைக்கு தீர்வு காண
# பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் விரைவில் வரும் நடைமுறைக்கு

பெரும் பிரச்சினைகளாகியுள்ள குப்பைகள் அகற்றல் மற்றும் டெங்குநோயைக் கட்டுப்படுத்தல் ஆகிய இரண்டையும் சரியாக நிறைவேற்றுவதற்காகப் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

இந்தச் சட்டத்தின் மூலம் கவனிப்பாரற்ற நிலையிலுள்ள வீடுகளையும், ஏனைய கட்டடங்களையும் பரிசோதனைக்குட்படுத்தி அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும்.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதன் மற்றொரு அங்கமாகச் சைக்கிள்கள் மூலம் சென்று கழிவுப்பொருள்கள் சேரும் இடங்களையும், டெங்கு நுளம்புகள் பெருக வாய்ப்புள்ள இடங்களையும் பரிசோதிக்க 40 குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் குழுக்களில் முப்படையைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிப்பர். அவர்களுக்கு முப்பது ஸ்மார்ட் தொலைபேசிகளும் வழங்கப்படும். அவை மூலம் அவர்கள் பிரச்சினைகளுக்குரிய இடங்களைப் படம் பிடிப்பர். அந்தப் படங்கள் சட்ட நடவடிக்கைகளின்போது சாட்சியங்களாகச் சமர்ப்பிக்கப்படும்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவும், சட்டம் ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்னா யக்கவும் கூட்டாகச் சமர்ப்பித்த பிரேரணைகளுக்கே அமைச்சரவை இவ்வாறு அங்கீகாரம் வழங்கியுள்ளது. (தூ)

# விலகிச் செல்வதால் வீழ்ந்துவிடாது அரசு
## கூறுகிறார் முஜிபுர் ரஹ்மான்



கொழும்பு. ஜூலை 27

அரசில் இருந்து 18பேர் விலகிச் சென்றால் அந்த வெற்றிடத்தை நிரப்புவற்கான மாற்று ஏற்பாடு அரசிடம் உண்டு என்றும் அவர்கள் விலகிச் செல்வதால் அரசைக் கவிழ்க்க முடியாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைத்தமைக்குக் காரணம் பல முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணவேண்டும் என்பதற்காகும்.

நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை இல்லாதொழித்தல்.புதிய அரசமைப்பை உருவாக்குதல் மற்றும் ஆணைக்குழுக்களை அமைத்தல் போன்ற பல விடயங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு தேசிய அரசு தேவையாக இருக்கிறது.

தேர்தலுக்கு முன்பிருந்தே தேசிய அரசு பற்றிப் பேசப்பட்டது. இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்தால் மாத்திரமே இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று தலைமை அமைச்சரும் அரச தலைவரும் உணர்ந்து தேசிய அரசை உருவாக்கினர்.

இந்தத் தேசிய அரசுக்கு எதிரானவர்களும் உள்ளனர்; ஆதரவானவர்களும் ற்உள்ளனர். எவரையும் மிரட்டி நாம் இந்த அரசில் இணைக்கவில்லை.

அரசின் செயற்பாடுகளை விமர்சித்துக்கொண்டு சிலர் அரசில் இருந்து விலகப்போவதாகக் கூறப்படுகிறது. அப்படி நடந்தால் அது அரசுக்கு எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது.

விலகுபவர்களால் ஒருபோதும் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. 2020 வரை எதுவித சிக்கலுமின்றி அரசு தொடரும். விலகுபவர்களின் வெற்றிடத்தை நிரப்புவற்கான மாற்று ஏற்பாடு எம்மிடம் உண்டு - என்றார். (த-3)


# கண்ணீர் அஞ்சலி

எமது S.V முருகேசு நிறுவன
வங்கி கணக்காய்வாளரின்
அன்புத் தாயார்

**திருமதி கனகம்மா செல்லையா**



தோற்றம் 31.10.1927 மறைவு 25.07.2017

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

S.V முருகேசு
உரிமையாளர் குணரட்ணம்.
அங்கர் ஊழியர்கள்.
154.ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

S.V முருகேசு
உரிமையாளர் குணரட்ணம்.
அங்கர் ஊழியர்கள்.
பருத்தித்துறை வீதி. ஆவரங்கால்.
புத்தூர் கிழக்கு

S.V முருகேசு
உரிமையாளர் குணரட்ணம்.
ஊழியர்கள்.
154.ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

S.V முருகேசு
கிளிநொச்சி.

S.V.M (PVT) Ltd.
No.122, Dam Street
Colombo - 12




# ஆசிரியர்களுக்குப் பரிசு கொடுக்க மாணவரிடம் பணம் பெறலாகாது
## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 27

ஆசிரியர்களுக்குப் பரிசில்கள், அன்பளிப்புகள் வழங்குவதற்காக மாணவர்களிடம் பணம் வசூலிக்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, மாத்தறை மாவட்டத்திலுள்ள பாடசாலையொன்றில் ஆசிரியர் ஒருவர் இடம்மாறிச் செல்லவுள்ளதால் அவருக்குப் பிரியாவிடை நிகழ்வொன்றை நடத்துவதற்கு மாணவர்களிடம் பாடசாலை நிர்வாகம் பணம் அறிவிட்டுள்ளமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மாணவர்களிடம் இப்படி பணம் அறிவிடமுடியாது என ஏற்கனவே சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதை மீறும் வகையில் செயற்பட்டால் அது தொடர்பில் முறைப்பாடு கிடைத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். விசாரணையாளர்களும் இருக்கின்றனர் - என்றார் அமைச்சர். (த)

## தேயிலைத் துறைக்கு 150 வருடங்கள் பூர்த்தி

### பத்து ரூபா நாணயம் வெளியீடு

கொழும்பு, ஜூலை 27
இலங்கைத் தேயிலைத்துறைக்கு 150 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு பத்து ரூபா நாணயமொன்று வெளியிடப்படவுள்ளதாக இலங்கைத் தேயிலைச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 38 வீதத்தை ஈட்டும் தேயிலைத்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான பல வேலைத்திட்டங்கள் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இலங்கைத் தேயிலைச் சபையும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து இந்தத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலும் மண் சரிவுகளாலும் பாதிக்கப்பட்ட சிறு தேயிலைத் தோட்டங்களுக்கு நிவாரணம் வழங்குவதும் இந்த அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் இலங்கைத் தேயிலைச் சபை தெரிவித்துள்ளது. (த)

### 40 வருட அரசியல் வாழ்க்கையில்

## ரணில் பெற்ற அதி உயர் விருது பிணைமுறி மோசடி விவகாரமே

### வாசுதேவ நாணயக்கார எம்.பி. கிண்டல்

கொழும்பு, ஜூலை 27
தனது 40 வருட அரசியல் வாழ்க்கையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொண்ட அதியுயர் விருதாக அவர் அர்ஜுன் மகேந்திரனுடன் சேர்ந்து செய்த பிணைமுறி மோசடி விவகாரமே என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எள்ளி நகையாடியுள்ளார்.



பிணைமுறி மோசடி விவகாரத்தில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பான திடுக்கிடும் தகவல்கள் பல இப்போது வெளியாகிக்கொண்டிக்கின்றன. ஏற்கனவே இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டபோதும் ரவி கருணாநாயக்க அந்த விவகாரத்தைப் பூசி மெழுகப் பார்த்தார். தலைமை அமைச்சர் அந்த விவகாரத்தைப் பெரிதுபடுத்தாமல் மூடி மறைத்துள்ளார். இப்போது இந்த விவகாரம் ஆணைக்குழுவின் முன்னிலையில் அம்பலமாகியுள்ளதால் அவர்கள் இருவரும் திரிசங்கு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் திசை தெரியாமல் போய்விட்டன என்பதற்கு இது நல்ல உதாரணம் - என்றார். (த)

## காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக்கும் சட்டவரைவு குறித்து கூட்டமைப்பு விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
"காணாமற்போனோர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் கடத்தியவர் யார்? என்பது கண்டறியப்பட்டால், அரசு (சட்டமாஅதிபர்) அவர்களுக்கு எதிராக பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் குற்றமாகும் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

"காணாமற்போனோர் அலுவலகத்தால் முற்றுமுழுதான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று சொல்ல முடியாது. ஆனால் இந்த அலுவலகத்தில் மிகச் சிறந்த பொறிமுறை இருக்கின்றது. வேறு பல நாடுகளில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்துக்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை அடிப்படையாக வைத்தே எமது நாட்டில் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுக்கள் போன்றது அல்ல இந்த அலுவலகம்.

காணாமற்போனோர் அலுவலகத்தால் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. ஆனால் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக்கும் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால், அதன் பின்பு காணாமல் ஆக்கப்படுதல் இலங்கையில் குற்றமாகும். காணாமற்போனோர் அலுவலகத்தால் மேற்கொளெப்படும் விசாரணைகளில் கடத்தியவர் யார்? என்பது கண்டறியப்பட்டால், அரசு (சட்டமாஅதிபர்) அவர்களுக்கு எதிராக பலவந்தமாக்க் காணாமல் ஆக்கப்படுதல் குற்றமாகும் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வார்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (வ-5)

## சு.க. வெளியேறினால் ஐ.தே.க. தனித்து ஆட்சி

### யதார்த்தத்தை உணரவேண்டும் என்கிறார் சிறிபாலடி சில்வா

யாழ்ப்பாணம், ஜூலை 27
கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறினால், ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா, மைத்திரிபாலவின் வெற்றிக்காக நாம் பாடுபடாதபோதும் அவர் எம்மை உதைத்துத் தள்ளாமல் வைத்திருக்கின்ற யதார்த்தத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பதுளையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதிக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மைய செயற்குழ கூடி அரசிலிருந்து நாளை வெளியேறவேண்டும் எனத் தீர்மானம் எடுத்தால், அதற்குத் தலைவணங்க நாம் தயாராக உள்ளோம். கடந்த அரச தலைவர் தேர்தலின் பின்னர், அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன நினைத்திருந்தால், எம்மைக் காலால் உதைத்துக் கட்சியிலிருந்தும் அரசிலிருந்தும் விரட்டியிருக்கலாம். ஏனெனில், அந்தத் தேர்தலில் நாம் அவருக்காக உழைக்கவில்லை. ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை.

நாம் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். நாம் இன்று கூட்டு அரசிலிருந்து வெளியேறிவிடுவதாகத் தீர்மானம் எடுத்தால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 106 ஆசனங்கள் உள்ளன. அந்தக் கட்சிக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒட்டியிருக்க வேண்டும் என்ற தேவை கிடையாது. அந்தக் கட்சி நினைத்தால் இன்னும் தேவையான ஏழு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டு ஆட்சி அமைத்திருக்கலாம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே சிறிலங்கா சுதந்திரக்கட்சியை இணைத்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஆட்சி நடத்தி வருகின்றார் - என்றார். (த-5)

## முஸ்லிம் கூட்டமைப்பு குறித்து அலட்டிக் கொள்ளவேண்டாம்

கொழும்பு, ஜூலை27
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிரான முஸ்லிம் கூட்டமைப்பைப் பற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என முஸ்லிம் காங்கிரசின் உயர்பீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட பொருளாளருமான யகியாகான் தெரிவித்தார்.

கல்முனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கைகளில் அதிகாரம் இருக்கின்றபோது சமூகத்தின் மீது அக்கறை காட்டாதவர்கள் இன்று அதிகாரங்கள் இல்லாத நிலையில் அக்கறை காட்டுவது போல் பாசாங்கு செய்கின்றனர். இது வேடிக்கையாக இருக்கின்றது.

இலங்கை முஸ்லிம் மக்களின் பேரியக்கமான முஸ்லிம் காங்கிரசுடன் முட்டிமோதி மூக்குடைந்தவர்கள் எல்லோரும் இன்று கூட்டணியாகச் சேர்ந்துள்ளனர்.

மு.கா. என்ற இந்தப் பெரும் இயக்கத்தை ஓரம் கட்டித் தாங்கள் நினைத்தவற்றை அடையலாம் என நினைப்பது அவர்களுடைய மடைமையைக் காட்டுகின்றது.

மக்கள் இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பவர்களை நிராகரித்து ஓரம் கட்டிவிட்டார்கள். இது இன்னும் புரியவில்லை என்றால் முஸ்லிம் காங்கிரஸை அழிக்க நினைத்து மண் கௌவியவர்களின் பட்டியலில் எதிர் காலத்தில் இவர்களும் சேர்வார்கள் - என்றார். (த-ய)

## இலங்கையில் டெங்கை ஒழிக்க உலக சுகாதார நிறுவனம் தீவிரம்


கொழும்பு, ஜூலை 27
இலங்கையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் பணியில் உலகை சுகாதார நிறுவனம் நேற்று முன் தினம் முதல் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நான்கு வாரங்களில் டெங்கு நோயின் தீவிரத்தை 50 வீதமாகக் குறைக்கும் நோக்கில் உலக சுகாதார நிறுவனம் தனது பணிகளை ஆரம்பித்திருப்பதாகவும், இலங்கைக்கு வந்துள்ள அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் தற்போதிருக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை, நோய் தீவிரமாகியுள்ள பிரதேசங்கள், அங்குள்ள வைத்தியசாலைகளின் வசதிகள் போன்றவை பற்றித் தீவிரமாக ஆராய்ந்த பின்னரே இந்த நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தங்களது திட்டம் தொடர்பில் சுகாதார அமைச்சு அதிகாரிகளிடம் விரிவாகக் கலந்துரையாடிய பின் அவர்களது ஒத்துழைப்புடன் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதியொருவர் கூறினார். (த)

## மரண அறிவித்தல்

பிறப்பு
26 . 03 . 1943



இறப்பு
25 . 07 . 2017

### ஐயாத்துரை நவரத்தினம்
(பெரியண்ணை)

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நவரத்தினம் 25.07.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜபூபதியின் அன்புக் கணவரும், தேவரஞ்சன் (பொறியியலாளர் சிங்கப்பூர்) தேவகஜன் (லண்டன்),மகிந்தா(லண்டன்)ஆகியோரின்பாசமிகுதந்தையும்,இராஜேஸ்வரி,இராஜரட்ணம், விக்னேஸ்வரி,காஞ்சென்றசெல்வரட்ணம்(இ.போ.ச)விக்னேஸ்வரன்(இ.போ.ச),ஜெகதீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிருந்தா (சிங்கப்பூர்), யாமினி (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், புவனேந்திரம், கனகாம்பிகை, காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் திலகவதி, முருகையா, காலஞ்சென்ற இரத்தினபூபதி, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வர்ஷா, அக் ஷயா, நிகிதா, பவிகேஷ், ஷாலினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.07.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் வீதி,
அளவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்.

0212059651

# வெள்ளை வான் குறித்து இரு வாரங்களுள் அறிக்கை

## பொலிஸ்மா அதிபருக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சர் உத்தரவு

கொழும்பு, ஜூலை 27

மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பட்டாளர் ரயன் ஜயதிலகவை கைதுசெய்வதற்காகப் பொலிஸார் கையாண்ட வழிமுறை குறித்து விசாரணை நடத்தி இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தான் பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என்று சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்குச் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. தினப்பணிகள் முடிவடைந்த பின்னர், நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 23/2 இன் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"சைட்டம் விவகாரம் தொடர்பில் தொழிற்துறைசார் நிபுணர்களுக்கிடையிலான கூட்டம் க்டந்த 20ஆம் திகதி நடைபெற்றது. சைட்டத்துக்கு எதிரான அமைப்பும் பங்கேற்றிருந்தது. குறித்த கூட்டம் முடிவடைந்த பின்னர், வெள்ளை வானில் வந்த குழுவொன்று மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பட்டாளர் ரயன் ஜயதிலகவை கடத்திச் செல்வதற்கு முற்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? விசாரணை எந்தக் கட்டத்தில் இருக்கின்றது?" என்பதே தினேஷ் தொடுத்த கேள்விகளின் சுருக்கமாகும்.

இவற்றுக்குப் பதிலளித்த அமைச்சர் சாகல ரத்நாயக்க,

"அது வெள்ளை வான் அல்ல. பொலிஸ் திணைக்களத்துக்குரிய வாகனமாகும். சுகாதார அமைச்சுக்குள் நுழைந்து அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டுக்காக மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளருக்கு நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே, கூட்டம் நடைபெறும் இடத்தில் அவர் இருக்கின்றார் என்பதை அறிந்த பொலிஸார் அங்கு சென்றுள்ளனர். 3 பொலிஸ் அதிகாரிகள் சீருடையில் சென்றிருந்தனர். 9 பேர் சிவில் உடையில் சென்றிருந்தனர்.

எனினும், அவர்களிடம் அடையாள அட்டை இருந்தது. வாகனத்தைச் செலுத்திய பொலிஸ் சாரதியும் சீருடை அணிந்திருந்தார்.

எனினும், கைதுசெய்வதற்காக உரிய நடைமுறை பின்பற்றப்பட்டதா, அன்றைய தினம் என்ன நடந்தது என்பது பற்றி விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன். இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை கிடைக்கப்பெறும். அதன்பின்னர் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மேற்படி சம்பவத்தின்போது ஏதேனும் தவறுகள் இடம்பெற்றிருக்கும் பட்சத்தில் அதற்காக அரசின் சார்பில் வருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்" - என்றார். (த)

# கூட்டு அரசைக் கவிழ்ப்பது மகிந்த அணியின் பகற்கனவு

## அமைச்சர் நிமல் சாட்டையடி



கொழும்பு, ஜூலை 27

நல்லாட்சி அரசைக் கவிழ்க்கப்போவதாக மகிந்த அணியினரான பொது எதிரணியினர் விடும் சவால்கள் வெறும் பகற்கனவே எனவும், அவர்களது கனவு ஒருபோதும் நனவாகப் போவதில்லை எனவும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

ஒருசிலரைப் போல எங்களிடம் இரட்டை வேடம் போடும் பழக்கம் கிடையாது. 2015 இல் அரச தலைவர் தேர்தல் நடந்த சமயம் நாங்கள் எங்களது அப்போதைய தலைவரான மகிந்த ராஜபக்சவுக்கே ஆதரவு வழங்கினோம். அதன்பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை இப்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்றார்.

நல்லாட்சி அரசை தேசிய அரசை அமைப்பதற்காக அவர் எங்களுக்கு அழைப்பு விடுத்தார். கட்சியின் இறைமையையும், பாரம்பரியத்தையும் காப்பாற்றுவதற்காக நாங்கள் அவருடன் இணைந்துகொண்டோம். கட்சியின் நிறைவேற்றுக்குழு எடுத்த தீர்மானத்தின் அடிப்படையிலேயே நாங்கள் தேசிய அரசை அமைக்க ஒப்புக்கொண்டோம்.

எனினும், இன்று ஒருசிலர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தக் கங்கணங் கட்டிக்கொண்டு திரிகிறார்கள். எங்களைப் போல கட்சிக்கு விசுவாசமாக உள்ளவர்களைக் கவர்ந்திழுக்கச் சூழ்ச்சிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களது சூழ்ச்சி வலையில் நாங்கள் சிக்கமாட்டோம்.

நாங்கள் விரும்பினாலோ விரும்பா விட்டாலோ இந்த நல்லாட்சி அரசு 2020 வரை ஆட்சிப்பீடத்தில் இருக்கும் என்பது நிச்சயம். அதை இடைநடுவில் கவிழ்ப்பதற்கு செய்யும் எந்த சூழ்ச்சியும் பலிக்கப்போவதில்லை - என்றார். (த)



# பல்கலை மாணவர்கள் ஐவருக்கு பிடியாணை

கொழும்பு, ஜூலை 27

நீதிமன்றில் தொடர்ந்து முன்னிலையாகத் தவறிய பல்கலைக்கழக மாணவர்களான நான்கு பிக்குகளுக்கும் வேறொரு மாணவருக்கும் கொழும்பு கோட்டை நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிவானுமான செல்வி லங்கா ஜயரத்ன பிடியாணை பிறப்பித்திருக்கிறார்.

சைட்டம் பிரச்சினையை முன்வைத்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தியதன் மூலம் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தியமை, இந்த ஆர்ப்பாட்டத்தைத் தடை செய்து நீதிமன்றம் பிறப்பித்திருந்த தடையுத்தரவை மீறியமை, அரச தலைவர் செயலகத்துக்குள் அத்துமீறிப் புக முயன்றமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் கொழும்பு கோட்டைப் பொலிஸார் தொடர்ந்திருந்த வழக்கில் இவர்கள் ஐவரும் தொடர்ந்து முன்னிலையாகத் தவறியதாலேயே அவர்களுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பிக்குமார் சம்மேளனத்தைச் சேர்ந்த பம்பரவானே அமித, ரத்கரவே ஜினரத்ன, சூரியவெள சுசீல, மடுகல்லே புத்த ரக்பித்த ஆகிய நான்கு பிக்கு மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் உறுப்பினரான அமில சந்தருவன் எனும் மாணவருக்குமே இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

வழக்கின் அடுத்த விசாரணை செப்ரெம்பர் 8ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த)

# மாகாண சபைத் தேர்தல் இனி ஒத்திவைக்கப்படாது

## தேர்தல் ஆணையகத் தலைவர் திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 27

இன்னும் இரண்டு மாதங்களில் பதவிக்காலம் முடிவடையவுள்ள வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒத்திவைக்கப்படமாட்டாது எனத் தேர்தல்கள் ஆணையகத் தலைவர் மகிந்த தேசப்பிரிய திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தேர்தலை ஒத்திவைப்பதானால் அதற்கு நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. அத்துடன், பொது வாக்கெடுப்பொன்றும் நடத்தப்படவேண்டும். எவ்வாறாயினும், இறுதி முடிவு உயர்நீதிமன்றத்தின் கைகளிலேயே உள்ளது. இன்றைய நிலையில் இந்த மூன்று மாகாண சபைகளுக்குமான வேட்பு மனுக்கள் கோரும் திகதி பற்றிய அறிவிப்பு ஒக்ரோபர் 2 ஆம் திகதி வெளிவரும். அதனைத் தொடர்ந்து டிசெம்பர் மாதம் முதலாம் வாரத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும். எனினும், அந்தக் காலப்பகுதியில் பாடசாலைகள் நடக்கவிருப்பதால் தேர்தலை நடத்தமுடியாது.

நான் எங்கு சென்றாலும் உள்ளூராட்சித் தேர்தல் எப்போது நடக்கும் என மக்கள் கேள்வி கேட்கிறார்கள். அதைப்பற்றித் தீர்மானிக்க வேண்டியது நாடாளுமன்றமே தவிர தேர்தல் ஆணையகமல்ல. உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டு வருவதும் டெங்குநோயைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதற்கு ஒரு காரணம் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

எவ்வாறாயினும், உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவேண்டிய திகதி எனக்கு அறிவிக்கப்பட்டால் மாத்திரமே என்னால் மேற்கொண்டு செயற்பட முடியும் - என்றார். (த)

# ரவிக்கு அலோசியஸ் வழங்கிய அதிசொகுசு வீடுகள் அம்பலம்

கொழும்பு, ஜூலை 27

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் பதவிக் காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் பிணைமுறி மோசடியின் பின்னர் அர்ஜுனின் மருமகனான அலோசியஸ் மகேந்திரன் அப்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு கோல் பேஸ் ஹோட்டலுக்கு முன்பாகவுள்ள இரண்டு அதிசொகுசு வீட்டுத்தொகுதிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார் என்ற தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

73 இலட்சம் ரூபா குத்தகைக்கு எடுக்கப்பட்ட இந்த இரண்டு வீட்டுத் தொகுதிகளையும் அவர்கள் இறுதியில் 16.5 கோடி (1,650 மில்லியன்) ரூபாவுக்கு விலைக்கு வாங்கியிருப்பதாக பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டதுடன் அதற்கான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த விவரங்களும் அது தொடர்பான ஆவணங்களும் அந்த வீட்டுத்தொகுதி நிறுவனத்தின் பணிப்பாளரான திருமதி அனிதா விஜேசூரியவால் சமர்ப்பிக்கப்பட்டன.

அலோசியஸ் அன்பளிப்பாக வழங்கிய இந்த வீட்டுத் தொகுதியில் ரவி கருணாநாயக்கவின் மனைவியும் மகளும் தங்கியிருந்ததாகவும், முதலில் இந்த வீட்டுத் தொகுதியைப் பார்வையிட ரவிகருணாநாயக்கவின் மனைவி மெலரின் விரந்தி கருணாநாயக்கவே வந்ததாகவும் அதன்பின் அலோசியஸ் தலையிட்டுப் பரிமாற்றத்தை முடித்ததாகவும் அவர் ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். 73 இலட்சரூபா குத்தகைக் காலம் முடிவதற்கு முன் ரவி கருணாநாயக்க 16.5 கோடி (1,650 மில்லியன்) ரூபாவைச் செலுத்தி அந்த வீடுகள் இரண்டையும் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டார் எனவும் அனிதா விஜேசூரிய மேலும் தெரிவித்தார். (த)

# இந்திய - இலங்கை உடன்பாடே பிரபாகரனை வீழ்த்த உதவியது

## கூறுகிறார் அமைச்சர் நவீன் திசநாயக்க



கொழும்பு, ஜூலை 27


1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்தியஇலங்கை சமாதான உடன்பாடே, வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்கடிக்க உதவியது என்று அமைச்சர் நவீன் திசநாயக்க தெரிவித்துள்ளார்.

"இந்திய இலங்கை சமாதான உடன்பாடு கையெழுத்திடப்பட்டபோது, எனது தந்தையாரான காமினி திசநாயக்க ஐ.தே.க. அரசில் அமைச்சராக இருந்தார். அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அந்த உடன்பாட்டை எதிர்த்தது.

அந்த உடன்பாடு கைச்சாத்திடப்படாமல் போயிருந்தால், வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தோற்கடிக்க, இலங்கைக்கு இந்தியா ஆதரவு அளித்திருக்காது.

1987ஆம் ஆண்டுக்குப் பின்னர், பிரபாகரனைத் தோற்கடிப்பதற்கான இலங்கையின் நகர்வுகளுக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

பிரபாகரனுக்கு இந்தியா உதவியிருந்தால், இலங்கையில் நிலைமைகள் மோசமாக இருந்திருக்கும்" என்றும் அவர் கூறியுள்ளார். (த)



# இலங்கையில் முதல் முறையாக கால் மாற்று அறுவைச் சிகிச்சை

*தமிழ் மருத்துவர் தலைமையியான குழு*
*அனுராதபுரம் மருத்துவமனையில் சாதனை*

கொழும்பு, ஜூலை 27
இலங்கை வரலாற்றில், முதல் முறையாக, கால் மாற்று அறுவைச் சிகிச்சை ஒன்றைச் செய்து தமிழ் மருத்துவர் ஒருவர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் சாதனை படைத்துள்ளனர்.

அனுராதபுரம் மருத்துவமனையில் கடந்த திங்கள்கிழமை இந்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மூளைச் சாவு அடைந்த ஒருவரின் காலை, அகற்றி, அங்கு சிகிச்சை பெற்றுவந்த மற்றொருவருக்குப் பொருத்தி, இரத்த நாளம் மற்றும் மாற்று அறுவைச் சிகிச்சை நிபுணரான மருத்துவ கலாநிதி ஜோயல் அருட்செல்வம் தலைமையிலான மருத்துவர்கள் குழு இந்தச் சாதனையைப் படைத்துள்ளது.

உலகம் முழுவதிலும், இதுபோன்ற 10இற்கும் குறைவாக அறுவைச் சிகிச்சைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விபத்து ஒன்றில் ஒரு ஆண்டுக்கு முன்னர் முழங்காலுக்கு மேல் வரையான பகுதியை இழந்த 32 வயதுடைய இளைஞனுக்கே, இந்த கால் மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவருக்கு மூளைச்சாவு அடைந்த 52 வயதுடைய ஒருவரின் கால் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த அறுவைச் சிகிச்சைக்கு, மூளைச்சாவடைந்தவரின் குடும்பத்தினரும், காலை இழந்திருந்த இளைஞனும் ஒப்புதல் அளித்திருந்தனர்.

இந்த அறுவைச் சிகிச்சையை மருத்துவர் ஜோயல் அருட்செல்வம் தலைமையில், மருத்துவர்கள் அமில இரத்நாயக்க, நுவான் விஜேசிங்க, லேவன் காரியவசம் ஆகியோர் அடங்கிய குழுவினர் மேற்கொண்டனர்.

இத்தகைய உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளுக்கு, இரண்டு பேருடைய இரத்த வகைகள், தோலின் நிறம், மற்றும் ஏனைய பௌதிக காரணிகள் அனைத்தும் ஒத்துப் போகவேண்டும் என்று மருத்துவர் அருட்செல்வம் தெரிவித்தார்.

இளைஞனுக்குப் பொருத்தப்பட்ட கால் நன்றாகச் செயற்படத் தொடங்கியுள்ளது என்றும், அறுவைச் சிசிக்சை செய்யப்பட்டவர் தற்போது தேறிவருவதாகவும், அவர் கூறினார். (த)

# அமைச்சர் ரவி உடனே பதவி விலகவேண்டும்

## மகிந்த அணி அழுத்தம்

கொழும்பு, ஜூலை 27
பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் ரவி கருணாநாயக்கவின் ஊழல் விவகாரங்கள் அம்பலமாகியிருப்பதால் அவர் தனது அமைச்சுப் பதவியை உடனடியாகத் துறக்கவேண்டும் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மத்திய வங்கியில் பட்டப்பகலில் நடந்த பிணைமுறை மோசடி விவகாரம் தொடர்பில் மத்திய வங்கிக்குள் நுழைந்து விசாரணை நடத்திய முதல் ஆள் நானே. பல்வேறு நிந்தனைகளுக்கும் அவதூறுகளுக்கும் மத்தியில் இந்தப் பணியை நான் தைரியமாகச் செய்தேன்.

இந்தப் பிணைமுறி மோசடிக்குப் பதிலளிக்கவேண்டியவர்கள் ரணில் விக்கிரமசிங்கவும், ரவி கருணாநாயக்கவுமே என்று அப்போதே நான் அழுத்தம் திருத்தமாகக் கூறினேன். எனினும், அவர் இருவரும் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தங்களது மோசடிகளை மறைக்க பல்வேறு நாடகங்களை அரங்கேற்றி வந்தார்கள்.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் அரசுக்குப் பணம் தேவைப்படுவதாகக் கூறும் திகதியிடப்படாத ரவி கருணாநாயக்கவின் கடிதத்தை நான் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்திருந்தேன். நிதி அமைச்சர் ஒருவர் ஒருபோதும் செய்யக்கூடாத விந்தையான வேண்டுகோள் கடிதம் இது வென்பதை ஆணைக்குழுவின் முன்னிலையில் தெளிவுபடுத்தினேன்.

ரவி கருணாநாயக்கவுக்கும் அர்ஜுன் மகேந்திரனுக்குமிடையிலிருந்த நெருங்கிய உறவு பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தினார். அலோசியஸ், பல மில்லியன் ரூபா பெறுமதியான சொகுசு வீட்டுத் தொகுதியொன்றை ரவிக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார் என்ற இரகசியமும் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தப்பட்டது. அந்தச் சமயத்தில் தன்னைத்தவிர மற்றவர்கள் அனைவருமே திருடர்கள் என்ற ரீதியில் ரவி கருணாநாயக்க முழக்கமிட்டது அனைவருக்கும் தெரியும்.

அந்நியச் செலாவணி மோசடியில் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த வழக்கு பல வருடங்களாக விசாரிக்கப்பட்ட பின் பாரதூரக் குற்றப்பத்திரிகை அவருக்கு வழங்கப்பட்டது. எனினும், அந்தக் குற்றப் பத்திரிகையில் ஏற்பட்டிருந்த சில தவறுகளைக் காரணங்காட்டி அவரது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. தீர்ப்பை வழங்கிய (பெண்) நீதிபதியும் அதன் பின் ஓய்வுபெற்றுவிட்டார்.


இவ்வாறான தில்லுமுல்லுகளைச் செய்துவந்த ரவி கருணாநாயக்கவை பற்றி நாட்டின் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான ஏராளமான முறைப்பாடுகள் ஊழல் துஸ்பிரயோக ஒழிப்பு ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளபோதிலும் அவை யாவும் மூடிமறைக்கப்பட்டுவிட்டன. எனினும், பிணைமுறி மோசடி விவகாரத்தில் இப்போது அவரது குட்டு அம்பலமாகிவிட்டது. எனவே, அவர் உடனடியாகத் தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகவேண்டும்- என்றார். (த)



## 15 யானைகளை பெரஹராவில் பயன்படுத்த அனுமதி

கொழும்பு, ஜூலை 27
சட்டவிரோதமான முறையில் தனியார் இடங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 21 யானைகளில் 15 யானைகளை தலதா மாளிகை பெரஹராவில் பயன்படுத்துவதற்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

இன்று முதல் ஓகஸ்ட் 15 ஆம் திகதி வரை இந்த யானைகளை பயன்படுத்துவதற்கு, 10 மில்லியன் ரூபா பிணையின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த)



## சபையில் முதல் முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு

கொழும்பு, ஜூலை 27
நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் முதல் முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தைப் பயன்படுத்தி வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நாணயப் பரிமாற்றச் சட்டம் நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் திருத்தங்களுக்குப் பின்னர் நிறைவேற்றப்பட்டது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவினால் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, 94 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 18 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன் தினம் முதல் முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தித் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். (த)

# அமெ. ஆளுநர் தேர்தலில் இலங்கைத் தமிழ்ப் பெண்

வொஷிங்ரன், ஜூலை 27
அமெரிக்காவின் முன்னாள் முதல் பெண்மணியான மிச்சேல் ஒபாமாவின், கொள்கைப் பணிப்பாளர்களில் ஒருவராக இருந்த இலங்கைத் தமிழ்ப் பெண்ணான,கிரிசாந்தி விக்னராஜா, மேரிலான்ட் மாநில ஆளுநர் பதவிக்குப் போட்டியிடவுள்ளார் என்று கூறப்படுகிறது.

மேரிலான்ட் மாநில ஆளுநர் பதவிக்கான தேர்தலில் களமிறங்குவது பற்றித் தாம் தீவிரமாக ஆலோசித்து வருவதாக, அமெரிக்க வாழ் இலங்கைத்தமிழ்ப் பெண்ணான கிரிசாந்தி விக்னராஜா, வொசிங்டன் போஸ்ட் நாளிதழிடம் தெரிவித்துள்ளார்.

பலர் என்னைக் களமிறங்குமாறு ஊக்குவிக்கிறார்கள், இதுபற்றி நான் தீவிரமாக ஆலோசித்து வருகிறேன் என்று, 37 வயதான கிரிசாந்தி விக்னராஜா கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழ்ப் பெற்றோரின் மகளான கிரிசாந்தி மேரிலான்ட் ஆளுநர் பதவிக்குப் போட்டியிடுவதை அங்குள்ள தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த அமெரிக்கர்கள் வரவேற்றுள்ளனர்.

“கிரிஸ் மிகச் சிறந்த தகைமைகளைக் கொண்டவர்” என்று மார்ட்டின் ஓ மல்லி நிர்வாகத்தில், இராஜாங்கத் திணைக்களப் பிரதிச் செயலராக இருந்த ராஜன் நடராஜன் தெரிவித்துள்ளார். “அவர் மிகச் சிறந்த அனுபவம், தகைமைகளைக் கொண்டவர் என்று நான் நினைக்கிறேன். இந்த மாதிரியான மாற்றுத் தலைவர்கள் பணியகத்துக்குத் தேவை" என்று அவர் கூறியுள்ளார்.

கிரிசாந்தியின் பெற்றோர் - ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள். இவரது சகோதரர், திரு விக்னராஜா, மேரிலான்ட் மாநில பிரதிச் சட்டமா அதிபராகப் பணியாற்றியிருந்தார்.

கிரிசாந்தி ஆளுனர் பதவிக்காக போட்டியிடுவார் என்ற எதிர்பார்ப்பு என்னை மிகவும் உற்சாகப்படுத்தியுள்ளது என்று மேரிலான்ட் ஜனநாயகக் கட்சியின், ஆசிய அமெரிக்க மற்றும் பசுபிக் தீவுகளுக்கான பிரிவின் தலைவரான டேவங் ஷா தெரிவித்துள்ளார்.

மிகச் சிறந்த தகைமையுடைய பெண் என்ற வகையில், இவரது நுழைவு, அரசியலில் எமது சமூகத்துக்கு ஊக்கத்தை அளிப்பதுடன், முதல் சிறுபான்மையின ஆளுநர், மற்றும் முதல் மேரிலான்ட் மாநிலத்தின் முதல் பெண் ஆளுநர் எனப் பல முதன்மைத் தகுதிகளையும் பெறுவார் என்றும் அவர் கூறினார்.




கிரிசாந்தி விக்னராஜா இன்னமும் இந்தத் தேர்தலில் போட்டியிடுவது பற்றி முடிவு செய்யவில்லை. அவர் தனது முடிவைச் செப்ரெம்பரில் அறிவிக்கவுள்ளார்.

கிரிசாந்தி, யேல் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் முதுமாணிப் பட்டத்தையும், லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் அனைத்துலக உறவுகளுக்கான முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவர். யேல் சட்டப் பாடசாலையில் சட்டமாணிப்பட்டத்தையும்பெற்றுள்ளார்.

ஒபாமா ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவின் முதல் பெண்மணியான, மிச்சேல் ஒபாமாவின், கொள்கை மற்றும் அனைத்துலக விவகாரங்களுக்கான பணிப்பாளராக இவர் கடமையாற்றினார். இவர் வெள்ளை மாளிகையில் பணியாற்றியபோது, உலகில் 60 மில்லியன் பெண்பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்கும் திட்டத்துக்கான முதன்முயற்சியை மேற்கொண்டிருந்தார்.

வெள்ளை மாளிகையில் பணியாற்றுவதற்கு முன்னர், கிரிசாந்தி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் பணியாற்றியிருந்தார். ஐ.நாவில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார். இவரது பெற்றோர் சிறிலங்காவின் உள்நாட்டுப் போரினால் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தனர். இவர்கள் இருவரும் பால்டிமோர் நகர பொது பாடசாலையின் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



# தென்சீனக் கடல்பரப்பில் சினிமா திரையரங்குகள்

## சீனாவின் குசும்பு இது

பீஜிங், ஜூலை 27

வியட்நாம், தைவான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் சொந்தம் கொண்டாடிவரும் தென் சீனக் கடல் பகுதியில் சினிமா திரையரங்குகளைத் திறந்துள்ளது சீனா.

அந்த நாட்டின் இந்த நடவடிக்கைக்கு தென்சீனக் கடல் விவகாரத்தடன் தொடர்புடைய நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

தென்சீனக் கடலில் சீனாவுக்கு உரிமையில்லை என்று பன்னாட்டு தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

எனினும் இந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்து தென்சீனக் கடலில் தனது நடமாட்டத்தைப் படிப்படியாக அதிகரித்து வருகிறது சீனா.


மிதக்கும் அணுவுலைகள், இராணுவ முகாம்கள், வானூர்தித் தளங்கள், உலங்கு வானூர்தித் தளங்கள் என்று பல கட்டுமாணங்களை அமைத்து உலக நாடுகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ள சீனா தற்போது குறித்த பகுதியில் திரையரங்குகளையும் அமைத்து வருகிறது.

இதற்கு வியட்நாம், தைவான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. (ம)

## மீண்டும் ஏவுகணை: வடகொரியா திட்டம்

மற்றுமொரு ஏவுகணைச் சோதனையை நடத்துவதற்கு வடகொரியா திட்டமிட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கொரியப் போர் 1953ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் திகதி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தத் தினத்தை தனது இராணுவ தினமாகக் கொண்டாடுவதை வடகொரியா வழங்கமாகக் கொண்டுள்ளது. இதன்படி அந்த நாட்டின் 64ஆவது இராணுவ தினம் இன்றாகும். இதனால் இன்று கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை ஏவுவதற்கு வடகொரியா திட்டமிட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. வடகொரியாவின் அயல்நாடான தென்கொரியாவும் இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளது. (ம)



# வறுமையும், கொலரா ஏமனில் முகாமிட்டுள்

## உள்நாட்டுப்போரால் தாண்டவமாடு





சனா, ஜூலை 27

மனிதகுலம் மிகவும் நெருக்கடியைச் சந்தித்துள்ள நாடுகளின் பட்டியலில் முன்வரிசையில் அமர்ந்துள்ளது ஏமன். உள்நாட்டுப் போர், வறுமை, கொலரா என்று மும்முனைப் போரில் ஏமன் மக்கள் தவியாய் தவிக்கின்றனர். ஏமனில் ஹௌதி ஆயுதக் குழு ஆதிகம் செலுத்தி வருகிறது. அந்த அமைப்பு தலைநகர் சனாவைக் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதை இலக்காகக் கொண்டுள்ளது. ஹௌதி ஆயுதக் குழுவுக்கு எதிராக சவூதியின் தலைமையில் கூட்டுப் படைகள் போரிட்டு வருகின்றன.

உள்நாட்டுப் போர் காரணமாக ஏமன் பெரும் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருக்கையில் தற்போது கொலரா நோய் அங்கு தனது கைவரிசையைக் காட்டிவருகிறது.

இந்த நோய் காரணமாக சுமார் 3ஆயிரம் பேர் இந்த வருடத்தில் உயிரிழந்துள்ளனர்.

சுமார் 8 ஆயிரம் பேர் வரை நோயின் தாக்கத்தால் மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. மருத்துவமனைகள் கொலரா நோயார்களால் நிரம்பி வழிகின்றன. ஓர் படுக்கையில் 3-5 வரையிலான நோயாளிகள் வைத்துப் பராமரிக்கப்படுகின்றனர். கொலரா நோயால் தாக்கப்பட்ட குழந்தைகளை அட்டைப் பெட்டியில் வைத்து பராமரிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் நோயின் தாக்கத்துக்கு இலகுவாக அகப்படுகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்ற
மனித குலம் ெ
நாடாக ஏமன்
நாடுகள் சபை
யடைந்த நாடுக
னுக்கு உதவி
முன்வர வே
என்று அழை
விடுத்துள்ளது.

# அமெரிக்காவின் தடைகளா சிறிதளவும் கவலையில்லை

## வடகொரியா இறுமாப்பு

பியாங்யாங், ஜூலை 27

தனதுமக்கள் வடகொரியாவுக்குச்செல்வதற்கு அமெரிக்கா தடை விதித்துள்ள நிலையில் இந்தத் தடையால் தமது சுற்றுலாத்துறை பாதிப்படையாது என்று தெரிவித்துள்ளது வடகொரியா.

இந்தத் தடை குறித்து வடகொரியா நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையொன்றில், 'அமெரிக்காவின் இந்தத் தடையால் வடகொரியாவின் சுற்றுலா துறைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. அமெரிக்காவின் தடை குறித்து எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை' என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த 22 வயதான ஒட்டோ வார்ம்பியர் என்ற மாணவர் கடந்த ஆண்டு வடகொரியாவுக்கு சுற்றுலா சென்றிருந்தபோது அந்த நாட்டை உளவு பார்த்தார் என்று தெரிவித்து வடகொரிய அரசு அவரை கைது செய்தது. இந்தக் குற்றச்சாட்டில் ஒட்டோ வார்பியருக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது. சிறைத் தண்டனை அனுபவித்து வந்த வார்ம்பியரின் மூளைத் திசுக்களில் பாதிப்புக
பட்டு அவரால் செயல்படாத இ
நிலை ஏற்பட்டது. அவரது
நிலை தொடர்ந்து மோசமான
தொடர்ந்து வார்ம்பியர் கடந்த
வட கொரியாவிலி ருந்து அமெ
அனுப்பப்பட்டார்.

வடகொரியாவில் இருந்து திரு
ஒரு வாரத்தில் வார்ம்பியர் உ
ழந்தார். இதனைத் தொடர்
வடகொரியாவுக்கு தங்கள் குடி
செல்ல அமெரிக்கா தடை விதித்
ளது குறிப்பிடத்தக்கது.

# சிரிய கிளர்ச்சிக் குழுவுக்கு வழங்கிய உதவி வீண்வேலை; புடினைச் சந்தித்த பின்னர் தெரிவித்தார் ட்ர

"சிரியக் கிளர்ச்சிக் குழுவுக்கு வழங்கிய உதவி வீண்வேலை" இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு இடையிலான மாநாடான ஜி- 20 மாநாடு ஜேர்மனியின் ஹம்பேர்க் நகரில் அண்மையில் நடைபெற்றது.


இந்த மாநாட்டுக்கு ட்ரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் புடின் இருவரும் சென்றிருந்தனர்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பொன்றும் அங்கு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் சிரிய விவகாரம் தொடர்பில் அதிகம் விவாதிக்கப்பட்டது. இரு தலைவர்களின் விருப்பத்துக்கும் அமைய சிரியாவில் நடைபெற்றுவந்த உள்நாட்டுப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதைத் தொடர்ந்து சிரிய ஆயுதக் குழுவுக்கு அமெரிக்கா செய்துவரும் உதவியும் முடிவுக்குக் கொண்டுவரப்படவுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தத் தகவல்கள் மெய்ப்படும்படியாக கிளர்ச்சிக் குழுவுக்கு வழங்கிவந்த உதவியை நிறுத்தி உத்தரவிட்டார் ட்ரம்ப். இது தொடர்பாக நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே "சிரிய ஆயுதக் குழுவுக்கு உதவி செய்தது வீண்வேலை" என்று ட்ரம்ப் குறிப்பிட்டார்.

"சிரியாவில் ஆயுதக் குழுக்களுக்கு நிதியுதவி செய்வது அதிகப்படியானது, அபாயகரமானது, மிகவும் வீணானது என்பதால் இதை நிறுத்துமாறு நான் உத்தரவிட்டேன்" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார்.

சிரிய அதிபர் அசாத்தின் ஆட்சிக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் குதித்த ஆயுதக் குழுக்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டத்தை அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கடந்த 2013ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



...ராவும்
...ள்ளன
...டுகின்றன





வெனிசுலாவில் கடும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலைகள், உணவு விடுதிகள் போன்றவற்றால் கொட்டப்படும் கழிவு உணவுகளைத் தேடியெடுத்து பசியாறுவதற்கே அங்கு வரிசையில் நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு கொட்டப்பட்ட கழிவுகளுக்குள் தமக்குத் தேவையான உணவுகளைத் தேடுகின்றனர் சிலர். (ம)





## ‘சியேர்ஸ்’

லண்டன், ஜூலை 27

சிறிதளவு மது குடித்தவர்களுக்கு நினைவாற்றல் அதிகரிக்கும் என்று பிரிட்டன் பல்கலைக் கழகமொன்றின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

மது குடிப்பது உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும், வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடு என்பன போன்ற பரப்புரைகள் ஒருபுறம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேநேரம் மது நினைவாற்றலை அதிகரிக்கிறது என்று ஆய்வொன்று குறிப்பிடுகிறது.

இங்கிலாந்தில் உள்ள எஸ்டர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்விலேயே இந்தத் தகவல் வெளிவந்துள்ளது. எனினும் இந்தத் தகவல் அளவுடன் மது பாவிப்பவர்களுக்கே பொருந்தும் என்றும் அதிகளவில் மது பாவிப்பவர்களுக்கு இந்தத் தகவல் முற்றிலும் பொருந்தாது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம)

## சந்திரனில் மிகப்பெரிய ஏரிகள்



வொஷிங்டன், ஜூலை 27

சந்திரனில் பாறைகளுக்கு அடியில் மிகப்பெரிய ஏரிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என நாசா தெரிவித்துள்ளது.

சந்திரன் தொடர்பாக தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அப்பல்லோ விண்கலம் மூலம் அங்கிருந்து சேகரித்து வரப்பட்ட மண் மாதிரிகள், பாறைகளைக் கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2008ஆம் ஆண்டு நடந்த ஆய்வில் சந்திரனில் உள்ள எரிமலையில் இருந்து வெளியான கண்ணாடித் துகள்களில் தண்ணீர் இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து தண்ணீர் உள்ளதா? என்பதை முழுமையாக கண்டறிய தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்றன. இதன்படி சந்திரனில் பாறைகளுக்கு அடியில் மிகப்பெரிய ஏரிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் எதிர்காலத்தில் சந்திரனில் தங்கியிருந்து ஆய்வு நடத்தும் விஞ்ஞானிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

...ல்
...ல

...ரம்ப


P.P.T Express

மற்றுமோர் விரிவாக்கசேவை பகல் சேவை




24.07.2017 திங்கள் தொடக்கம் தனது பகல் சேவையை விஸ்தரித்துள்ளது.
இதன் ஊடாக காலை 07.00 மணிக்கு கொழும்பு நோக்கி தனது சேவையை தொடர்கின்றது.
அதே போன்று கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காலை 06.00 மணிக்கு புறப்பட்டு கொட்டாஞ்சேனை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணிகள் சேவையை விஸ்தரித்துள்ளது.
அதன் வழமையான இரவு சேவைகள் வழமைபோல் நடைபெறுகின்றது.
மேலும் இலங்கையின் முதற்தர துரித பொதிகள் சேவை ஊடாக வெளிநாட்டு (அனைத்து நாடுகளுக்கும்) பொதிகள் உடனுக்கு உடன் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் துரித பொதிகள் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.




இலங்கையில் சுற்றுலா பயணத்திற்கு உரிய பஸ் சேவைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.




யாழ்ப்பாணம் - 077 573 1318
பருத்தித்துறை - 077 573 6003
கொழும்பு - 077 575 5175/011 232 0336



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அரசு விரைந்து செயற்படவேண்டும்

காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலகத்தை உடனடியாகஅரசு அமைக்கவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியிருக்கிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணையாக இந்தப் பிரச்சினையை அவர் முன்வைத்திருந்தார்.

அதில் காணாமற்போனவர்கள் தொடர்பில் அரசு வாக்குறுதியளித்த விடயங்களை நிறைவேற்றவில்லை என்று தனது பிரேரணையில் சம்பந்தர் குற்றஞ்சாட்டினார். அவற்றை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சம்பந்தர் இவ்வாறு அரசை வலியுறுத்துவதற்கு ஆணித்தரமான பின்னணிக்காரணம் ஒன்றுள்ளது. மைத்திரி-ரணில் கூட்டு அரசு 2015இல் பதவிக்கு வந்ததும் காணாமற்போனவர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் தொடர்பில் அமைச்சர்கள், அதிகாரிகளுடன்பலதடவைகள் பேச்சுநடத்தியது. அந்தச்சந்திப்புக்களில் பல முடிவுகள் எட்டப்பட்டன. ஆனால் வழக்கம்போலவே அவை அனைத்தும் கிடப்பில் போடப்பட்டன.

எனவே எதற்கும் இணங்கிப்போவதும், சட்டங்களை நிறைவேற்றுவதும் மட்டுமே போதுமானதல்ல, தேவையான பொருத்தமானநடவடிக்கைகளைஎடுப்பதுதான் முக்கியம் என்பதையே சம்பந்தர் தனது பிரேரணையின் ஊடாக அரசிடம் இடித்துரைத்திருக்கிறார். கடந்தகாலங்களில் அரசு செய்வதாக இணங்கிவிட்டுப் பின்னர் செய்யாமல்விட்டவற்றை அவர் தனது பிரேரணையில் பட்டியலிட்டுள்ளார்.

தற்போதைய அரசு கடமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட வேளையில், கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுடைய பெயர்களும், அவ்வாறு அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களும் பகிரங்கப்படுத்தப்படும். அத்துடன்,

தற்பொழுது கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களும், அவர்கள்தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களும் பகிரங்கப்படுத்தப்படும். அத்துடன்,

கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிலரைத்தடுத்து வைத்துள்ளதாகக் கூறப்படும் இரகசியத் தடுப்பு முகாம்கள் பற்றிய தகவல்களை அறிந்து வைத்துள்ளதாகக் கூறப்படும் காணாமல் போன வர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு அத்தகைய தடுப்பு முகாம்களைப் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். அத்துடன்,

கடந்த ஆண்டு ஆவணி மாதம் ஆக்கப்பட்ட காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், அப்பொழுது மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு படிமுறைச் செயற்பாடுகளூடாகக் காணாமல்போனவர்களுடைய குடும்பங்கள் எதிர்நோக்கும் வேதனைகளை ஏற்கத்தக்க வகையில் ஒரு முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய சந்தர்ப்பங்கள்ஏற்படுத்தப்படும்,உண்மையானதகவல்கள்கிடைக்காமையினால் ஏற்படும் நிச்சயமற்ற நிலமை காரணமாக இந்தக் குடும்பங்கள் தற்பொழுது முகங்கொடுக்கும் மன உளைச்சல்கள் இச்செயல் முறைகள் மூலம் முடிவுக்கு வரும், ஆகிய வாக்குறுதிகளை அரசு வழங்கியிருந்தபோதும் அவற்றை நிறைவேற்றவேயில்லை என் பதையே சம்பந்தர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த விவரங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பானது, இதற்கும் காணாமற்போனவர்களுக்கும் என்ன தொடர்பு என்ற எண்ணம் ஏற்படுவது இயல்பே! ஆனால், போரின் போதும், அதன் பின்னரும் போரைக் காரணமாகக் காட்டித் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களை உத்தியோகபூர்வமாக அரசிடம் இருந்து பெற்றுவிட்டால் அவர்கள்தவிர்ந்த ஏனையவர்கள்காணாமற்போய்விட்டார்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுவிட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

ஆனால், கேட்கப்பட்ட எந்த விவரமும் அரசு சார்பில் கடைசி வரை வழங்கப்படவேயில்லை. இந்த நிலையில்தான் காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைப்பதற்கான அனுமதிப் பத்திரத்தில் நீண்ட கால இழுபறியின் பின்னர் அரச தலைவர் கையெழுத்திட்டுள்ளார்.

காணாமற்போனவர்களின் உறவினர்கள் வீதிகளில் கிடந்து போராட்டம் நடத்தி வருகையில், இந்த அலுவலகம் அமைக்கப்படுவது மேலும் தாமதிக்கப்படக்கூடாது என்பதாலேயே இந்த ஞாபகமூட்டலையும், அதற்கூடான வலியுறுத்தலையும் சம்பந்தர் முன்வைத்தார். அவரது குரலுக்குச் செவிசாய்த்து அரசு விரைந்து செயற்படவேண்டும் இந்த விடயத்தில்.



கட்டுரை

# இணைந்ததன் நோக்கங்கள் நிறைவேறாததால் விலகுகிறோம்

## சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார பிரதி அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவிப்பு



அரசுக்குள் ஏற்பட்டுள்ள குழப்பநிலை தொடர்பாக சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார பிரதி அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி.

எம்.ஐ.முபாறக்

அரச தலைவர் மைத்திரிபால, முன்னாள் அரச தலைவர் மகிந்தவை நாட்டின் தலைமை அமைச்சராக நியமித்து, தனித்துச் சுதந்திரக் கட்சி ஆட்சியை ஏற்படுத்தினால், மைத்திரிபாலவையே மீண்டும் அரச தலைவராக ஆக்கி வைப்போம்.புதியகட்சியொன்றின்ஊடாக கோத்தபாயவை அடுத்த அரசதலைவர் தேர்தலில் களமிறக்கும் மகிந்தவின் திட்டம் தடுக்கப்பட வேண்டுமானால், மகிந்தவை தனது தலைமையிலான அரசின் தலைமை அமைச்சராக மைத்திரிபால நியமிப்பதே புத்திசாலித்தனமாகும்.

**கேள்வி:** *நீங்கள் கூட்டாட்சி அரசை விட்டு விலகவுள்ளீர்கள் என்று கதை அடிபடுகிறது. அதுபற்றிய தங்களது கருத்தென்ன?*

**பதில்:** நாம் நீண்ட காலமாக மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து அரசியல் செய்தவர்கள். கடந்த அரச தலைவர் தேர்தலில் மகிந்த தோல்வியடைந்ததும், நாடாளுமன்றத் தேர்தல் மூலம் அவரை தலைமை அமைச்சராக்கி சுதந்திரக் கட்சி ஆட்சியை அமைப்பதற்கு நாம் முயற்சித்தோம். அது சாத்தியப்படவில்லை.
அதன் பின்னர் அவரை எதிர்க்கட்சித் தலைவராக ஆக்குவதற்கு முயற்சி செய்தோம். அந்த முயற்சியும் வெற்றி அளிக்கவில்லை.
அதற்குப் பின்னரே நாம் அரசுடன் இணைந்து செயலாற்றுவதற்கு முடிவெடுத்தோம்.
நாம் ஏற்கனவே ஆரம்பித்த அபிவிருத்தி வேலைகளைத் தொடர்வதற்காகவே அரசில் இணைந்து செயற்பட முடிவெடுத்தோம். அரசில் இணைந்த நோக்கங்கள் நிறைவேறாததால், அரசிலிருந்த விலகி எதிர்க்கட்சியில் இருப்பதற்கு விரும்புகிறோம்.

**கே:** *மேற்குறிப்பிட்ட பதவிகள் ஒன்றிலாவது மகிந்தவை அமர்த்தமுடியாமல் போனதால்தான், மகிந்தவை விட்டு விட்டு அரசுடன் இணைந்திருக்கின்றீர்கள் என்று சொல்லலாமா?*

**ப:** முதலில் எமது தரப்பின் சிரேஷ்ட உறுப்பினர்களே அத்தகைய முடிவை எடுத்தனர். புத்தளம் மாவட்ட மக்கள் என்னை இரண்டாவது தடவையாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பி இருக்கின்றனர். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிவரிசையில் இருப்பதா? அல்லது அரசுடன் இணைந்து மக்களுக்குச் சேவை செய்வதா? என்று முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் நான் இருந்தேன். மக்களிடம் இது தொடர்பில் நான் பேசியபோது, அரசுடன் இணைந்து வேலை செய்யுமாறு கூறினார்கள். அரசு விடுத்த அழைப்பை அடுத்தே அரசுடன் இணைந்தோம். ஆனால், நாம் எதிர்பார்த்த விதத்தில் இதுவரை எந்த அபிவிருத்தியும் இடம்பெறவில்லை.
மகிந்த காலத்தில் பசில் ராஜபக்ச எங்கள் மூலமாக கிராமமட்டத்தில்மேற்கொண்ட அபிவிருத்திகள் இப்போது முற்றாக நிறுத்தப்பட்டுவிட்டன. இந்த அரசின் ஒட்டுமொத்த செயற்பாடுகளால் நாம் மனமுடைந்து போய் இருக்கின்றோம்.
மக்கள் இந்த அரசை வெறுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பலபிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அரச தலைவரைச் சந்திக்கின்ற ஒவ்வொரு தடவையும் நாம் எல்லாத் துறைகளிலும் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துகொண்டு செல்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டி இருக்கின்றோம்.
தேரர்களுடன் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தம்புள்ள விகாரை பிரச்சினை இதற்கு நல்ல உதாரணம். அரசு அடுத்த தேர்தலில் வெல்லமுடியுமா என்ற கேள்வி எழுகின்றது. என்னை அரசுடன் இணையுமாறு கூறிய மக்கள், இப்போது விலகுமாறு கூறுகின்றனர்.

**நாம் ஏற்கனவே ஆரம்பித்த மக்கள் நலத் திட்டங்களை பூர்த்தி செய்தற்காகவே அரசில் இணைந்தோம்**

**கே:** *நீங்கள் அரசில் இருந்து விலகுதென உறுதியாகத்தீர்மானித்துவிட்டீர்களா?*

**ப:** இந்த அரசுடன் நாங்கள் இணைந்ததன் நோக்கத்தை அடைய முடியவில்லை. இத

னால் இந்த அரசில் தொடர்ந்தும் இருப்பதில் அர்த்தமில்லை. எதிர்க் கட்சியில் இருப்பது மேல் என்று நாங்கள் கருதுகிறோம்.

அரச தலைவரைச் சந்தித்து இதுபற்றிப் பேசியபோது டிசெம்பர் மாதம் வரை பொறுமையாக இருக்குமாறு கூறினார்.

இந்தத் தேசிய அரசுக்கு முடிவு கட்ட வேண்டும். ஒன்றுஐக்கியதேசியக் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட வேண்டும் அல்லது மகிந்தவைத் தலைமை அமைச்சராகக் கொண்டு சுதந்திரக் கட்சி ஆட்சி அமைக்கவேண்டும். இந்தக்கோரிக்கையை நாம் அரச தலைவரிடம் முன்வைக்கவுள்ளோம். இதை அவர் ஏற்றால், அரசுடன் இருப்போம். இல்லையேல் எதிர்க்கட்சியில் இருப்போம். இரண்டு கட்சிகளும் சேர்ந்து அரசை நிர்வகிப்பதில் எவருக்கும் எந்தப் பிரயோசனமும் இல்லை.

**மகிந்தவையும் மைத்திரிபாலவையும் இணைந்து செயற்பட வைக்கவே நாங்கள் விரும்புகிறோம்**

**கே**: *மகிந்தவை தலைமை அமைச்சராக்குவதற்கு மைத்திரி விரும்புவாரா?*

**ப**: மகிந்தவைத் தலைமை அமைச்சராக நியமித்து ஆட்சியைக் கொண்டு செல்ல வேண்டுமென்றால், மகிந்தவுக்கும் மைத்திரிக்கும் இடையில் நல்லுறவொன்று ஏற்பட வேண்டும். அதற்கான வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும். நாம் அரச தலைவருக்கு நிபந்தனைகள் முன்வைப்பது போல், மைத்திரி தரப்பும் இது தொடர்பில் நிபந்தனைகளை முன்வைத்து எம்முடன் பேச்சு நடத்தலாம். இந்த இரண்டு தலைவர்களுக்கிடையில் நிலவும் முரண்பாடுகளை நீக்கி இவர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகின்றோம். மக்களின் விருப்பமும் அதுவே.

மகிந்தவை மைத்திரி தலைமை அமைச்சராக நியமித்தால், அடுத்த நிமிடமே மைத்திரி மக்கள் அனைவரும் விரும்பும் ஒரு தலைவராக மாறிவிடுவார். ஆனால் அவ்வாறு செய்தால் ராஜபக்ச குடும்பத்தால் தனக்கு ஆபத்து வந்துவிடும் என்று மைத்திரி அஞ்சுகிறார்.


நாம் கூறுவதுபோல் மகிந்தவை மைத்திரி தலைமை அமைச்சராக நியமித்தால், அடுத்த அரச தலைவர் தேர்தலில் நாம் மைத்திரியை அரசதலைவராக்குவோம். மகிந்த புதிய கட்சி ஒன்றின் ஊடாக ஆட்சியைப் பிடிப்பதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பம் இது. அதைத்தடுப்பதென்றால் அவர் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும். அடுத்த அரச தலைவருக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மைத்திரியை ஆதரிக்காது. அவர்கள் தனி வேட்பாளரை நிறுத்துவார்கள். ஆகவே மைத்திரி அணியும், மகிந்த அணியும் ஒன்றிணையாவிட்டால், அடுத்த அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால வெற்றியீட்டுவது சிரமமே.

மகிந்தவால் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாவிட்டாலும், மாற்று ஏற்பாடாக கோத்தபாய ராஜபக்சவை அவர்கள் வேட்பாளராக்கலாம். இது, மைத்திரிக்குத்தான் சிக்கலை ஏற்படுத்தும். இதையெல்லாம் உணர்ந்து மைத்திரி முடிவெடுக்க வேண்டும். எமது நிபந்தனைகளை ஏற்க வேண்டும். அவரால் அது இயலாவிட்டால், இந்த அரசு தொடர்ந்து ஆட்சியை நடத்தட்டும். எதிர்க்கட்சியில் அமர்வதற்கு எமக்குச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள். இல்லாவிட்டால் எங்களால் மக்கள் முன்னிலையில் செல்ல முடியாது.

**கே**: *நீங்கள் [18பேர்] மகிந்தவைச் சந்தித்தது உண்மையா?*

**ப**: ஆம்; மகிந்தவை நாம் சந்தித்தது உண்மையே. ஆனால் 18 பேர் அல்ல. நானும் டி.பி.ஏக்கநாயகவும், துலிப் விஜயசேகரவுமே சந்தித்தோம். இது திருட்டுத்தனமாக இடம்பெறவில்லை. அவரது நிலைப்பாடு, அவரது வேலைத் திட்டம் தொடர்பில் அறிய வேண்டிய தேவை எமக்கு இருந்தது. நாம் 18 பேர் இணைவதன் ஊடாக ஆட்சியைக் கைப்பற்றும் திட்டம் அவரிடம் உண்டா அல்லது இப்படியே எதிர்க்கட்சியில் இருந்துவிட்டு அடுத்த தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றும் திட்டத்தில் இருக்கின்றாரா என்று அறியவே அவரைச் சந்தித்தோம்.





மைத்திரிகூட அவரைச்சந்திக்கவேண்டாம் என்று எமக்கு ஒருபோதும் சொல்லவில்லை. மகிந்தவையும் மைத்திரியையும் ஒன்றிணைக்க இயலாவிட்டால், புதிய கட்சியொன்றை உருவாக்குவதே மாற்றீடு.

**கே**: *உங்களது நிபந்தனைகளை அரச தலைவர் ஏற்காவிட்டால், நீங்கள் அரசை விட்டு விலகுவது உறுதி என்று சொல்கிறீர்கள். அப்படியென்றால் மகிந்த அணியுடன் இணைவீர்களா அல்லது தனித்து இயங்குவீர்களா?*

**ப**: எதிர்க்கட்சி என்று வரும்போது மகிந்த அணியுடன்தான் இணைவோம். சுயாதீனமாகச் செயற்படுவதிலோ அல்லது புதிய கட்சியொன்றை உருவாக்குவதிலோ எனக்கு உடன்பாடு இல்லை. சுதந்திரக் கட்சியின் ஊடாகவே ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்காகவே நாங்கள் மைத்திரி தரப்பையும் மகிந்த தரப்பையும் ஒன்றிணைப்பதற்குப் போராடுகிறோம்.

ஆனால், கடைசி வரைக்கும் இந்த இரு கட்சிகளையும் ஒன்றிணைய வைக்க முடியவில்லையென்றால், புதிய கட்சியொன்றை உருவாக்குவதைத் தவிர வேறு வழியில்லை. சுதந்திரக் கட்சியை ஒற்றுமைப்படுத்த முடியாத இறுதித் தருணத்தில் மாற்றீடாகவே புதிய கட்சி என்ற முடிவு இருக்க முடியும்.

**கே**: *உங்களது நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் நீங்கள் விலகுவதற்கு டிசெம்பர் வரை பார்த்துக்கொண்டு இருப்பீர்களா?*

**ப**: இல்லை. நான் அதற்கு முன்னர் வெளியேறிவிடுவேன். எவர் கூட வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி நான் தனியேயாவது விலகிச்சென்றுவிடுவேன்.

**கே**: *நீங்கள் மகிந்தவையும் மைத்திரியையும் ஒற்றுமைப்படுத்துவதற்கு முயற்சி செய்கிறீர்கள். ஆனால், சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க, இனிவரும் தேர்தல்களில் மகிந்தவுக்கு கட்சியால் வேட்பாளர் நியமனம் வழங்கப்படமாட்டாது என்று சொல்கிறாரே?*

**ப**: உண்மையில் இது ஒரு முட்டாள்த்தனமான கூற்று. மகிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்காவிட்டால் ஜீ.எல்.பீரிஸால் உருவாக்கப்பட்டிருக்கும் புதிய கட்சியின் ஊடாக அவர் போட்டியிடுவார். அது சுதந்திரக் கட்சியையே பாதிக்கும்.

கட்சியின் செயலாளர் என்ற அடிப்படையில் அவர் கட்சியை எவ்வாறு வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல முடியும் என்றே யோசிக்க வேண்டும். அப்படி யோசித்தால் அதற்கு ஒரே முடிவு மீண்டும் மகிந்தவை கட்சியில் இணைப்பதுதான்.

அரச தலைவர் தேர்தலில் மகிந்த தோல்வியடைந்ததும், அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதற்கே திட்டமிட்டிருந்தார். ஆனால், மக்கள் அவரை விடவில்லை. இந்த அரசு ஆரம்பம் முதலே பிழையான பாதையில் செல்லத் தொடங்கியதால், மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்காக அவர் மீண்டும் அரசியலில் இறங்க வேண்டியேற்பட்டது.

**இந்த அரசு 2020ஆம் ஆண்டு வரை நீடிக்கும் என உறுதிகூற முடியாது**

**கே**: *இந்த அரசின் ஆயுட்காலம் எவ்வளவுவரை நீடிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*


**ப**: அரசு அரசியல் அமைப்பால் தப்பியுள்ளது. நான்கரை வருடங்களுக்குப் பிறகுதான் தேர்தல் நடத்த முடியும் என்று 19ஆவது திருத்தச் சட்டம் சொல்வதால், அரசு 2020 வரையும் பயணிக்கும். ஆனால், நாடாளுமன்றுக்குள் கட்சித் தாவல்கள் இடம்பெற்றால் அரசின் கதை முடிந்துவிடும். இன்று ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட, இந்த ஆட்சி மாற வேண்டும் என்றே விரும்புகின்றனர். ஆட்சி மாற்றத்துக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்த கிழக்கு மாகாண முஸ்லிம் அரசியல்வாதிகள்கூட இந்த அரசை வெறுக்கின்றனர். அந்த அளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

**எதிர்க்கட்சி என்று வரும்போது மகிந்த அணியுடன்தான் இணைவோம். சுயாதீனமாகச் செயற்படுவதிலோ அல்லது புதிய கட்சியொன்றை உருவாக்குவதிலோ எனக்கு உடன்பாடு இல்லை. சுதந்திரக் கட்சியின் ஊடாகவே ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்காகவே நாங்கள் மைத்திரி தரப்பையும், மகிந்த தரப்பையும் ஒன்றிணைப்பதற்குப் போராடுகிறோம்.**

அரசில் இருந்து நாங்கள் விலகுவதால் ஆட்சி மாற்றம் ஏற்படாவிட்டாலும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கை அதிகரிக்கும்; எதிர்க்கட்சியின் பலம் கூடும். இது இறுதியில் ஆட்சி மாற்றத்துக்கு காரணமாக அமையலாம்.

**கே**: *எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நீங்கள் வெளியேறக்கூடுமா?*

**ப**: நாங்கள் அனைவரும் செப்டம்பருக்குள் வெளியேற வேண்டுமென்றுதான் விரும்புகிறோம். இருப்பினும், நான் எப்படியும் தனித்தாவது செப்ரெம்பருக்குள் ஒரு முடிவை எடுத்துவிடுவேன், என்றார்.



## ஆசிரியருக்கான கடிதம்

### தரம் தாழ்ந்து போயுள்ள இலங்கை அரசியல்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கட்சித் தாவல்கள் இன்று நேற்று ஏற்பட்ட வழக்கமொன்றல்ல. முன்னைய கால கட்டங்களிலெல்லாம் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அரசியல்வாதியொருவர், தமது தனிப்பட்ட இலாபமீட்டும் நோக்கில் தாம் சார்ந்த கட்சியைக்கைவிட்டுவேறொருகட்சிக்குக் கட்சி தாவி (பெரும்பாலும் அது ஆட்சி அதிகாரத்தைத் தன்வசம் கொண்டுள்ள அரச தரப்பாக இருக்கும்) அமைச்சுப் பதவியையோ அல்லது அரை மந்திரிப் பதவியையோ ஏற்கும் அயோக்கித்தனச் செயற்பாடுகள் தாராளமாகவே இடம்பெற்று வந்துள்ளன.

ஆனால் அத்தகையோர் அடுத்து வந்த தேர்தல்களில் வாக்காளர்களினால் புறக்கணிக்கப்பட்டு, மதிப்பிழந்து போனமையும் வரலாறு. அந்த அளவுக்கு அரசியலில் கட்சித் தாவல்கள் அநாகரிகச் செயற்பாடுகளாக வாக்காளர்களால் கணிக்கப்பட்டன.

இப்போதெல்லாம் என்னடா வென்றால், ஆட்சி அதிகாரத்தைப் பெறும் தரப்பில் இணைந்து தத்தமது எதிர்கால அரசியல் இருப்பை ஸ்திரப்படுத்த முனைவதும் தவறானதல்ல என்றதொரு அரசியல் சித்தாந்தம் நாட்டின் அரசியல் தரப்பினர்கள் மத்தியில் நிலைகொண்டு வருகிறது. அந்த வகையில் ஆட்சி அதிகாரத்தைக் கைவசம் கொண்டுள்ள தரப்பினர்களும் சரி, தாம் இழந்த அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிக் கொள்ள முயலும் முன்னாள் அரச தலைவர் மகிந்தவும் அவரது தரப்பினரும் சரி ஆளுக்கு ஆள், எப்போது, எத்தனைபேர் எதிர்த்தரப்பிலிருந்து தமது தரப்புக்குக் கட்சி தாவவுள்ளனர் என ஆரூடம் கூறும் போக்கு சர்வ சாதாரணமாகி விட்டுள்ளது. அந்த அளவுக்கு அதிகார மோகத்தால் இவர்களெல்லாம் தம்மைத் தாமே தரம் தாழ்த்திக் கொள்வதைக் காண மனது கனக்கிறது. அந்த அளவுக்கு நாட்டின் அரசியல் நாகரிகம் தாழ்ந்து போனமை கவலைக்குரியது.

இ.கணேசன்,
கரவெட்டி.

# பெப்ரவரி மாதத்துக்கான பணவீக்கம் அதிகரிப்பை பதிவுசெய்தது

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையான வருடத்தின் மீதான பணவீக்கமானது நடப்பாண்டின் பெப்ரவரி மாதத்தில் சிறிய அதிகரிப்பினை பதிவு செய்துள்ளதென தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க தெரிவித்துள்ளார்.


இதன்பிரகாரம் கடந்த ஜனவரி மாதத்தில் 6.5 வீதமாக இருந்த பணவீக்கமானது பெப்ரவரி மாதத்தில் சிறிய அதிகரிப்பினை வெளிக்காட்டி 8.2 வீதமாகப் பதிவாகியுள்ளது. தவிர தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பற்றிய அறிக்கையில் பின்வரும் விடயங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த பெப்ரவரி மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பணவீக்கப் பங்களிப்புகள் முறையே 4.5 வீதம், 3.8 வீதமாக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நிலவிய ஆகக் குறைந்த விலை மட்டங்களைப் பிரதிபலிக்கும் வகையில் பணவீக்கத்துக்கான இந்த இரு பிரிவுகளினதும் பங்களிப்புகள் முறையே 0.3 வீதம், 2.0 வீதமாகக் காணப்பட்டுள்ளது.

“2017 பெப்ரவரி மாதத்தில் உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கான காரணமாக கல்வி,மின்,வீடு,எரிவாயு, தளபாடம், குடிசார் உபகரணம் மற்றும் வழமையான குடிசார் பராமரிப்பு, ஆடை, நானா விதப் பொருள்களும் சேவைகளும் ஆகிய பிரிவுகளில் ஏற்பட்டதான செலவுப் பெறுமதியின் அதிகரிப்புகள் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.”

கடந்த பெப்ரவரி மாதத்தில் பதிவாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 119.9 ஆக காணப்படுகிறது. இருப்பினும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதம் மீதான மாத மாற்றங்கள் என்ற வகையிலே ஒப்பிடும் போது நடப்பு வருடத்தின் ஜனவரி மாதத்தில் பதிவாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 119.3இல் இருந்து பெப்ரவரி மாதத்தில் 119.9 ஆக அதிகரித்துள்ளது. இதனை ஜனவரி மாதத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது 0.6 சுட்டெண் புள்ளி அல்லது 0.5 சதவீத அதிகரிப்பை வெளிக் காட்டியுள்ளது.

அதேபோன்று அரிசி, தேசிக்காய், வாழைப்பழம், பச்சை மிளகாய், உருளைக்கிழங்கு, மைசூர்ப் பருப்பு, செத்தல் மிளகாய் மற்றும் மிளகாய்த் தூள் ஆகியவற்றின் விலை நிர்ணய வீழ்ச்சிக்கு உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதி வீழ்ச்சியே காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)




தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின்மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| 2016 | பெப்ரவரி | 110.8 | -1.1 | 1.7 |
| | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஒகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | ஒக்ரோபர் | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |





வா! வா! சண்முகா! வடிவேல் முருகா!

**தேரேறி தமிழருக்கு வாழ்வு தர வா! வா!**

“ மரகத மயில் மேல் வருமுருகா!
அரகர சிவசிவ ஆறுமுகா வா!
சரவண பவனே சண்முகனே!
வரம் தர வா வா என்முன்னே
அரவணிசிவனருள் பாலா பரவரமுரள பரமதயாளா ”

(சிவயோக சுவாமிகள்)

அன்புடையீர்,

**யாழ்நகரில் புகழ் பூத்த நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவம் நாளை (28.07.2017) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.**

கடந்த காலங்களைப் போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள **மூத்ததம்பி அன்னதான மடத்தில்** முருகன் அருள்வேண்டி வரும் அடியார்களுக்கு திருவிழா நடைபெறும் 26 நாள்களும் அன்னதானமும் விடியற் காலையில் கோப்பியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இந்த அன்னதானத்தில் பங்குபற்றிய அடியார்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தங்கள் பேருதவிக்கு நல்லைக் கந்தன் அருள்புரிவானாக.**

அன்னதான மண்டபத்திற்கு உதவி செய்ய விரும்புபவர்கள் பொருள்களாக தந்து உதவலாம்.

மூத்ததம்பி அன்னதான மடம்,
139, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. : 075 673 1327


# வாடிக்கையாளர் தகவல் கசிவு தொடர்பில் நடவடிக்கை


## மத்திய வங்கியின் மேற்பார்வை பிரிவு தகவல்

ஹற்றன் நசனல் வங்கி வாடிக்கையாளர்கள் 4 ஆயிரத்து 630 பேரின் தனிப்பட்ட தகவல் கசிவு தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வரும் தகவலை மத்தியவங்கியின் மேற்பார்வை பிரிவு வெளியிட்டுள்ளது.

இதன்பிரகாரம் இடம்பெற்ற விசாரணைகளின் போது கிடைக்கப்பெற்ற முதல் தகவல்களின்படி இவை வங்கியியல் தகவல்களுக்கு பொருத்தமற்ற விதமாக இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பாக, வாடிக்கையாளர் தகவலை நிர்வகித்தல் மற்றும் பயன்படுத்துதல் போன்ற செயல்நிலைகளில் ஏற்பட்ட தவறுகளே காரணமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட விதிகள் மற்றும் நியமங்களின் பிரகாரம் இடைக்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்திய வங்கியும் ஹற்றன் நசனல் வங்கியும் மேற்கொண்டு வருகின்றன. (ஒ)



# ‘அப்துல் கலாம்’

## தமிழ் மொழியின் அடைவு கண்ட விஞ்ஞானத் தமிழன்

ஈழத்தமிழ்மணி

உலகம் போற்றும் விஞ்ஞானத்தின் பொருள் கண்ட மெய்ஞானியாகத் திகழ்பவர் அப்துல்கலாம். ‘கனவு காணுங்கள் அந்தக் கனவை நனவாக்கப் பாடுபடுங்கள்' என்ற அற்புதமான காரண காரியமுடைய இலட்சிய அர்த்தப் பேணுகையை இளைஞர்களின் மனதில் விதைத்தவர். பொன் மொழிகளாலும், கவிதைகளாலும்,நல்வழி உரை வாசகங்களாலும் எல்லோர் மனதிலும் வியாபகம் கொண்டு நீங்கா இடம்பிடித்துள்ள மாமனிதராக விளங்குகிறார்.

அமெரிக்க தேசத்துக்கு ஒரு மாட்டின் லூதர் கிங், ஆபிரிக்க மண்ணுக்கு ஒரு நெல்சன் மண்டேலா போல இந்திய தேசத்துக்கு ஒரு அப்துல்கலாம் என பணிநிலை சார் அணிகலன் கொண்டு இவரது தனித்துவங்கள் காணலாம். இத்தகு சீரிய மொழிவுடைய பெருந்தகையின் இரண்டாவது ஆண்டு நினைவு நாளினை இந்திய தேசம் மட்டுமன்றி, உலகத் தமிழர்களும் ஒன்றிணைவாக நினைவு கூருகின்றனர்.

### பிறப்பும் கல்வியும்

தமிழ் நாட்டின் இராமேஸ்வரத்தில் 1931 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி பிறந்தார். சைனுலாப்தீனுக்கும், ஆஸியம்மாவுக்கும் மகனாகப் பிறந்த அவுல் பக்கிர் ஜைனுலாப்தீன் அப்துல் கலாம் சாதாரண மீனவக் குடும்பத்தைச் சார்ந்தவர். தனது ஆரம்பக் கல்வியை இராமநாதபுரம் ஸ்வார்ட்ஸ் மெட்ரிக்கியுலேசன் பாடசாலையில் தொடர்ந்தார். கற்பதில் அதிக ஆர்வமுடைய மாணவனாக இருந்த போதும் தனது குடும்ப வறுமை காரணமாக பத்திரிகை விநியோகிக்கும் பணியையும் செய்துகொண்டார்.

பாடசாலைக் கல்வியைத் திருச்சி சென். ஜோசப் கல்லூரியில் கற்றார். அதனைத் தொடர்ந்து 1954 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சென்னை பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் துறையில் இளங்கலைப்பட்டம் பெற்றார். இதனைத் தொடர்ந்து 1955 ஆம் ஆண்டு விண்வெளிப் பொறியியல் படிப்பை சென்னை எம்.ஐ.டியில் கற்று முது நிலைப் பட்டம் பெற்றார்.

### ஆராய்ச்சி வாழ்வில் இணைவு

1960 ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் விஞ்ஞானியாக இணைவு கொண்டு தனது ஆராய்ச்சி வாழ்க்கைக்கு தொடக்கம் தந்த அப்துல் கலாம் சிறிய ரக உலங்கு வானூர்தியை இந்திய இராணுவத்துக்கு வடிவமைத்துக் கொடுத்திருந்தார்.

1970 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட இந்தியாவின் அணுவாயுதச் சோதனைகளின் போது எந்தவொரு வேலைகளிலும் கலாம் பங்குபற்றாத போதும் பார்வையாளராகப் பங்கு கொண்டிருந்தார். தவிர இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எஸ்.எல்.வி. ரொக்கட் வெற்றியைத் தொடர்ந்து பலிஸ்டிக் ஏவுகணையை வடிவமைக்கும் திட்டம் உள்ளிட்டவற்றிலும் கலாம் பணியாற்றியிருந்தார்.

> தமிழினத்துக்கும். தமிழ் மொழிக்கும் உலகளாவிய ரீதியில் பெருமை சேர்த்த விஞ்ஞானத் தமிழன் அப்துல்கலாம் மறைந்து இன்றுடன் இரண்டாண்டுகள் கடந்துவிட்டன. இருந்த போதும் எழுத்துக்களிலும்,அறிவுரைப் பேச்சுகளிலும், உலக இளைஞர்களின், மாணவர்களின் இதயங்களில் நித்திய ஆன்மாவாகச் சுடர்விடுகின்றார். அறிவியலின் பிரகாசமாக ஒளி தருகின்றார். மனிதகுலத்தின் அவதார புருசனாக அப்துல்கலாம் மகத்துவ ஸ்தானம் பெறுகிறார்.

1980 ஆம் ஆண்டு காலப்பகுதி இந்தியாவின் ‘ஏவுகணை மனிதன்' என்ற பெயரை அப்துல் கலாமுக்கு வழங்கியது எனலாம். இவருடைய திறமையை அறிந்துகொண்ட அப்போதைய இந்தியத் தலைமை அமைச்சர் இந்திராகாந்தி அவரை ஊக்கப்படுத்தினார். ஒருங்கிணைந்து வழிநடத்தப்படும் ஏவுகணைத் திட்டத்துக்கு அமைச்சரவையின் எதிர்ப்பையும் மீறி இரகசிய நிதி உதவிகளை வழங்கி கலாமை இயக்குநராகவும் நியமித்திருந்தார்.

### விருதுகள்

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்த இவர் செயற்கைக் கோள்களின் விண் செலுத்துகையில் முக்கிய பங்காற்றினார். இந்தப் பணி நிலைகள் கலாமுக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் சாதனையாக அமைந்திருந்தது. இதற்காகவே 1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய அரசு பத்மபூசன் விருதை கலாமுக்கு வழங்கிக் கௌரவித்திருந்தது.

1992 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்வரையான காலப்பகுதியில் தலைமை அமைச்சர் இந்திராகாந்தியின் ‘தலைமை விஞ்ஞானவியல் ஆலோசகராகவும்' கடமையாற்றினார். இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தியாவின் இரண்டாவது அணுவாயுத பரிசோதனைத் திட்டமான ‘புன்னகைக்கும் புத்தர்-2' இன் பிரதான ஒருங்கிணைப்பாளராகவும் இவரே செயற்பட்டார். இந்தத் திட்டத்தின் தீவிர அரசியலையும், தொழில் நுட்பம் சார்ந்த பிரிவுகளையும் சிறந்தமுறையில் கையாண்டார்.

இந்தியாவை அணுவாயுத வல்லரசாக மாற்றும் ஐந்து ஏவுணைத் திட்டங்களிலும் முக்கிய பங்காற்றியுள்ளார். பத்மபூசன், பத்மவிபூசன், பாரதரத்தினா உள்ளிட்ட பல விருதுகளை இவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

### அரச பதவியும் எழுத்துக்களின் ஊட்டமும்

2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றிபெற்ற அப்துல் கலாம் இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். 2007 ஆம் ஆண்டு காலப்பகுதிவரை குடியரசுத் தலைவராகப் பணியாற்றி இவர் ‘மக்களின் குடியரசுத் தலைவர்' என இந்தியமக்கள் அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்த அப்துல்கலாம் ‘அக்கினிச் சிறகுகள்', ‘இந்தியா 2020' உள்ளிட்ட பல நூலருக்களை எழுதித் தொகுத்துள்ளார். பொது மகளிடையே ஒரு விஞ்ஞானியாக, அரசதலைவராக அறிமுகமானதை விடவும் சிறந்த ஓர் ஊக்குவிப்பாளராக, வழிகாட்டியாக முன்னிலைபெற்றார். குடியரசுத் தலைவர் மாளிகையில் குடிகொண்ட போதும் மிக எளிமையான வாழ்வைக் கண்டுக் கொண்டார். நாட்டின் நலனையும், மாணவர்களின் முன்னேற்றத்தையும் கடமையாகக்கொண்டு அதற்கெனவே தனது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார். நாடு முழுமையாகப் பயணம் செய்து மக்களையும். மாணவர்களையும் சந்தித்து இந்தியா வல்லரசாக வேண்டும் என்ற தனது விருப்பத்தை மக்கள் மனதில் பதிய வைத்தார். பத்து ஆண்டுகளில் ஒரு கோடி மாணவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

மாணவியொருத்தி நல்லநாள் எது..?, கெட்ட நாள் எது? என்று கேட்டபோது அதற்கு பதிலுரைத்த அப்துல்கலாம், “பூமி மீது சூரிய ஒளி பட்டால் அது பகல். படாவிட்டால் இரவு”. இதில் நல்லது கெட்டது என எதுவுமில்லை என்று விளக்கமளித்திருந்தார்.

### மொழி அடைவு

அவருடைய தாய்மொழிக் கல்வி அவர் விரும்பிய அறிவையும் நல்லொழுக்கத்தையும் அவருக்கு ஊட்டியது. அவருடைய முன்னேற்றத்துக்கு அச்சாரமாகவும் அமைந்ததும் அதுவே. தமிழ் மொழியை அதிகம் நேசித்தார். தமிழ்க்கல்வி அவரிடையே திருக்குறளை அறிமுகம் செய்து கொண்டது. அதன்வழியே இறுதி வரை வாழ்ந்து காட்டினார். மாமிச உணவையும், மதுசாரத்தையும் தவிர்த்து சைவ உணவை வழக்கமாகக் கொண்டிருந்தார். தனது தன்னம்பிக்கைக்கு திருக்குறளே முக்கிய காரணமெனத் தெளிவுறுத்தினார். தமிழர்கள் அல்லாதோர் மத்தியில் உரையாற்றும் போது கூடத் திருக்குறளை மேற்கோள் இட்டுப் பேசும் பண்பினைக் கொண்டிருந்தார். தமிழில் பேசுவதையே பெருமையாக நினைத்தார். ஆட்சி அதிகாரத்திலும், சட்டம் நீதியிலும் தமிழ்மொழியையே பயன்படுத்த வேண்டும், அதேசமயம் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டு அதை துணை ஆட்சி மொழியாகப் பயன்படுத்த வேண்டும் என அப்துல்கலாம் தமிழ் மொழி வளர்ச்சி பற்றிய உறுதிப் பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். ஒரு முஸ்லிம் மதம் சார்ந்தவர் இந்துதர்மத்தில் உள்ள மனுஸ்மிருதி வேதத்தைக் கற்று அதன்படி வாழ்ந்தார்.

குடியரசுத்தலைவர், முதல்தமிழ்விஞ்ஞானி, அரசியல்வாடையில்லாத குடியரசுத் தலைவர், பிரமச்சாரி, நீர்மூழ்கிக்கப்பலில் பயணம் செய்த முதல் குடியரசுத் தலைவர், சியாச்சின் பனிமலை எல்லையில் உள்ள உலகின் உயரமான போர்க்களத்துக்குச் சென்ற முதல் குடியரசுத் தலைவர், பதவிக்குரிய கட்டுப்பாடுகளைத் தளர்த்தி சிக்கனத்தைக் கடைப்பிடித்தவர் என்ற பணி நலன்களை கொண்டு சிறப்புறுகிறார்.

அணுசக்தியின் பிதாமகன், தமிழ் மண்ணின் மைந்தன், இளைஞர்களின் கனவு நாயகன், அறிவியல் தொழில்நுட்பத்தின் காதலன், அக்கினிக் குஞ்சுகளின் தந்தை, பாரதரத்னா என்ற அணிகலன்களைப் பெற்றுத் தனித்துவம் பெறுகிறார்.

### மெய்யுணர்தல்

2015 ஆம் ஆண்டு ஜூலை மாத காலப் பகுதியில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு மொறட்டுவ பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றுக்கு சென்று மாணவர்கள் மத்தியில் உரையாற்றியிருந்தார். அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகையின் ஆசிரியர்களைச் சந்தித்தும் உரையாடினார்.

யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டிருந்த போது, ‘தான் கண்ட முதல்காட்சி மனதை உருக்கும் விதத்தில் இருந்தது. எல்லோர் முகத்திலும் புன்னகை இருந்தாலும் அவர்களது புன்னகைக்குப் பின் சொல்ல முடியாத துன்பங்கள் இழையோடுவதைக் கண்டுணர்ந்தேன். யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் சிரித்துக் கொண்டே அழுகின்றார்கள்.' என வேதனையுடன் கூறியிருந்தார்.

இவ்வாறு தமிழினத்துக்கும். தமிழ் மொழிக்கும் உலகளாவிய ரீதியில் பெருமை சேர்த்த விஞ்ஞானத்தமிழன் அப்துல்கலாம் மறைந்து இன்றுடன் இரண்டாண்டுகள் கடந்து விட்டன. இருந்த போதும் எழுத்துக்களிலும்,அறிவுரைப் பேச்சுகளிலும், உலக இளைஞர்களின், மாணவர்களின் இதயங்களிலும் நித்திய ஆன்மாவாகச் சுடர்விடுகின்றார். அறிவியலின் பிரகாசமாக ஒளி தருகிறார். மனிதகுலத்தின் அவதார புருசனாக அப்துல் கலாம் மகத்துவ ஸ்தானம் பெறுகிறார்.



# ஆடி மாத பலன்

(உத்திராடம் 2, 3, 4 பாதங்கள்
திருவோணம் அவிட்டம் 1,2 பாதங்கள்)

## மகரம்

பொதுக் காரியங்களில் விருப்பம் உள்ள மகர ராசியினரே நீங்கள் திறமைசாலிகளாகவும் இருப்பீர்கள் இந்த மாதம் அறிவுத் திறன் கூடும். இனிமையான பேச்சின் மூலம் பலரது உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். சுக்கிரனின் சஞ்சாரத்தால் செல்வம் சேரும். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்ப்புகள் அகலும். உங்கள் செயல்களுக்கு இருந்த தடை நீங்கும்.

தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் பலம் பெற்றிருக்கிறார். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பலவகை முன்னேற்றங்களும் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். தேவையான பண உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் சாதிக்கும் திறமையும் சாமர்த்தியமும் கிடைக்கலாம்.

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். மற்றவர்களுக்காக பரிந்து பேசும் போதும் அவர்களுக்கு உதவிகள் செய்யும் போதும் கவனமாக இருப்பது நல்லது. வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் ஏற்படும்.

பெண்களுக்கு அறிவு திறமை அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி கிடைக்கும். தேவையான பண உதவியையும் எதிர் பார்க்கலாம்.

கலைத்துறையினர் அதீத கவனத்துடன் செயல்படுவது உங்களுக்கு பதவி உயர்வு மற்றும் வெற்றியைத் தேடித்தரும். எதிர்பார்த்த வாய்ப்புக்கள் வந்து சேரும். சிலருக்கு நெடுநாளைய ஆசைகள் நிறைவேறும். லட்சியங்கள் கைகூடும். மனதிற்கு நெகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். நிதானம் தேவை.

மாணவர்கள் திறமையாகச் செயற்பட்டு பாராட்டுகள் கிடைக்கப் பெறுவீர்கள். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

பரிகாரம்: சனிக்கிழமைகளில் விநாயக பெருமாளை தீபம் ஏற்றி வழிபட்டு வர காரிய தடைகள் நீங்கும். எதிலும் நன்மை உண்டாகும்.

சந்திராஷ்டம தினங்கள்: 25, 26, 27

அதிர்ஷ்ட தினங்கள்: 19, 20

**உத்திராடம் 2, 3, 4 பாதங்கள்:**

இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மன மகிழ்ச்சி ஏற்பட அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவது நன்மையை தரும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.

**திருவோணம்:**

இந்த மாதம் எதிலும் காலதாமதம் உண்டாகும். சொன்ன சொல்லை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். பணவரத்து தாமதப்படலாம். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் மெத்தனம் காட்டாமல் இருப்பது நல்லது. எதிலும் கவனமாக இருப்பது நல்லது.

**அவிட்டம் 1,2 பாதங்கள்:**

இந்த மாதம் ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 26.07.2017

1921 - உயிரியல் இரசாயனவியலாளர் பிரெட்ரிக் பான்ரிங் தலைமையிலான ரொறன்ரோ பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களால் இன்சுலின் சுரப்பி குருதியில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தப்படுகிறது எனக் கண்டறியப்பட்டது.

1929 - போர்க் கைதிகள் கையாளப்படும் முறை தொடர்பான 1929ஆம் ஆண்டின் ஜெனிவா ஒப்பந்தத்தில் 53 நாடுகள் கைச்சாத்திட்டன.

1953 - ஐக்கியஅமெரிக்கா, சீனா மற்றும் வடகொரியா ஆகியன போர் நிறுத்தம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதைஅடுத்து கொரியப் போர் முடிவுக்கு வந்தது.
தென்கொரிய அரசதலைவர் இதில் கைச்சாத்திடாத போதிலும் ஒப்பந்தத்துக்குக் கட்டுப்படுகிறேன் என்று தெரிவித்தார்.

1964 - வியட்னம் போரில் ஆதிக்கத்தை நிலைநாட்ட மேலும் 5 ஆயிரம் சிப்பாய்கள் அமெரிக்காவால் அனுப்பப்பட்டனர்.

1975 - யாழ்ப்பாண மாவட்ட மேயரும் நாடாளுமன்றின் முன்னாள் உறுப்பினருமான அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார்.

1983 - (கறுப்பு ஜூலை) மேலும் 18 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பு வெலிக்கடைச் சிறைச் சாலையில் சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்பட்னர். இரண்டு நாள்களில் இடம்பெற்ற இதுபோன்ற இரண்டாவது படுகொலைச் சம்பவம் இதுவாகும்.

1990 - சோவியத் யூனியனிலிருந்து சுதந்திரம் பெற்றது பெலாரஸ்.

1995- மல்லாகம் நோக்கி முன்னேறும் படையினரின் முயற்சி முறியடிப்பு. அகோர ஷெல் தாக்குதலால் பெருமளவு மக்கள் இடம்பெயர்வு.

2002 - புலிகளைப் போரில் தோற்கடித்ததன் பின்னரே பேச்சு நடத்த வேண்டும் என ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா பேட்டி

2005 - அரச சட்டத் தரணி சமூகமளிக்காததால் அரச படையினரால் கைதாகி காணாமற் போனோர் தொடர்பான ஆள்கொணர்வு விசாரணை ஒத்திவைப்பு.

2015 - இந்தியாவின் ஏவு கணை விஞ்ஞானியும், முன்னாள் குடியரசுத் தலைவருமான அப்துல்கலாம் தனது 83ஆவதுவயதில் மறைந்தார்.




2016 - காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதே முக்கியம் என அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர் என்று பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு.

2016 - இலங்கை ஒரு பௌத்த நாடு சிங்களவர்களுக்கே பிரதான இடம் என்று அஸ்கிரிய மகாநாயக்கர் தெரிவிப்பு.

## நாளை

**28.07.2017**

வெள்ளிக்கிழமை

**ஆடி - 12**

திதி:பஞ்சமி மு.ப.10.44 வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.ப. 09.02 வரை
சுபநேரம்: 06.02–07.32 வரை
ராகுகாலம்: 10.32–12.02 வரை

ஷஷ்டி விரதம்

## பத்தி எழுத்து

# சிரியக் கிளர்ச்சிக்குழுவை அமெ. கைவிட்டது ஏன்?

'ட்ரம்ப், புடினின் நாய்க்குட்டி', 'ட்ரம்ப், புடினின் கைப்பொம்மை', 'ட்ரம்ப், ரஷ்யாவின் விசுவாசி' இவ்வாறான வாசகங்கள் அடங்கிய பாதாகைகள்தான் அமெரிக்காவில் தற்போது நடைபெறுகின்ற அதிகளவான ஆர்ப்பாட்டங்களில் இடம்பிடிக்கின்றன. இந்த விமர்சங்களை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது சிரிய கிளர்ச்சிக் குழுக்கள் தொடர்பில் ட்ரம்ப் எடுத்துள்ள அதிர்ச்சிகரமான முடிவு.

உலகமெங்கும் செயற்படும் ஆயுதக் குழுக்களை இரண்டு பெரும் பிரிவுகளாக வகைப் படுத்திக் கொள்ளலாம். ஒன்று, உலகத்தின் பொதுஎதிரியாக மாறக்கூடிய அளவுக்கு பயங்கரவாதச் செயற்பாடுகளை அரங்கேற்றும் குழுக்கள். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்), அல் சபாப், அல் குவைதா, தலிபன், ஹமாஸ், போகோஹரம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் நடவடிக்கைகள் மனிதகுலத்துக்கு எதிரானதாகவும் எவராலும் ஏற்கமுடியாததாகவும் காணப்படுகின்றன.

இரண்டாவது, ஓர் இனத்தின் அல்லது ஒரு மக்கள் கூட்டத்தின் விடுதலையை வலியுறுத்திப் போராடும் குழுக்கள். இவற்றை பொது எதிரியாக அனைத்து நாடுகளும் கொள்ளாது. ஆனால் ஒரு மக்கள் கூட்டம் இத்தகைய குழுக்களுக்கு ஆதரவாக இருக்கும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக தமிழீழ விடுதலைப் புலிகளைக் குறிப்பிடலாம். தமிழ் மக்களின் விடுதலையை வலியுறுத்தி புலிகள் எவ்வாறு போராடினார்களோ அவ்வாறே சன்னி பிரிவு இஸ்லாமியர்களின் விடுதலையை வலியுறுத்தி சிரியாவில் பல ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றன.

சியா இஸ்லாமியரான சிரிய அதிபர் அல் அசாத்தை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று ஆரம்பித்த கிளர்ச்சிக் குழுக்கள் ஆயுதக் குழுக்களாக மாற்றம் பெற்றிருந்தன. ஆயுதக் குழுவை ஒடுக்குவதில் சிரியாவுக்கு ரஷ்யா ஆதரவாக நின்றது. கடந்த 2013ஆம் ஆண்டு சன்னிப் பிரிவு கிளர்ச்சிக் குழுக்களுக்கு தனது ஆதரவைத் தெரிவித்து ஆயுத உதவிகளைச் செய்தது அமெரிக்கா. ஒபாமா எடுத்த இந்த முடிவு முட்டாள் தனமானது என்று தெரிவித்த ட்ரம்ப் ஆயுதக் குழுக்களுக்கு எவ்வித உதவியும் வழங்கப்பட மாட்டாது என்று உறுதிப்பட அறிவித்துள்ளார். சன்னிப் பிரிவு மக்களுக்கு விழுந்த பேரிடியாக இந்த முடிவு அமைந்துள்ளது.

ட்ரம்ப் பதவியேற்று கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமையுடன் சரியாக ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. இந்த ஆறு மாதங்களில் கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆதரவான போக்கையே அவரும் கொண்டிருந்தார். ஆனால் புடினை அண்மையில் சந்தித்த பின்னர், 'கிளர்ச்சிக் குழுக்களுக்குச் செய்யும் உதவி முட்டாள் தனமானது' என்று அவர் குறிப்பிடுகிறார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கிளர்ச்சிக் குழுவின் பகுதிக்குள் சிரியா இரசாயனத் தாக்குதலை மேற்கொண்டது. இதற்குப் பதிலடியாக சிரிய இராணுவத்தின் வானூர்தித் தளமொன்றை அமெரிக்கா அழித்தது. அப்போது ட்ரம்புக்கு கிளர்ச்சிக் குழுக்களுக்கு செய்யும் உதவி முட்டாள் தனமானது என்று ஏன் தோன்றவில்லை. ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டம் இருநாடுகளின் இணக்கத்தில், அதிலும் குறிப்பாக இருவேறு தன்மைகளைக் கொண்ட (ஒபாமா, ட்ரம்ப்) தலைமைகளின் முடிவுகளில் அஸ்தமித்து விடுகின்றன. தோற்றது சிரிய கிளர்ச்சிக் குழு மட்டுமல்ல......

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | 8 | | | 5 | |
| | | 9 | | 5 | 4 | 3 | 1 | |
| | | | | | 7 | | | 6 |
| 7 | | | 6 | | 1 | | 9 | |
| | | | | 2 | | | | |
| | 5 | | 9 | | 8 | | | 2 |
| 2 | | | 5 | | | | | |
| | 4 | 6 | 8 | 1 | | 7 | | |
| | 3 | | | 6 | | 1 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 8 | 3 | 5 | 9 | 7 | 4 | 6 |
| 7 | 5 | 4 | 1 | 6 | 2 | 8 | 3 | 9 |
| 3 | 9 | 6 | 8 | 7 | 4 | 2 | 1 | 5 |
| 8 | 4 | 5 | 2 | 1 | 6 | 9 | 7 | 3 |
| 1 | 7 | 9 | 5 | 4 | 3 | 6 | 8 | 2 |
| 6 | 2 | 3 | 9 | 8 | 7 | 4 | 5 | 1 |
| 9 | 6 | 1 | 4 | 3 | 8 | 5 | 2 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 9 | 5 | 1 | 6 | 8 |
| 5 | 8 | 7 | 6 | 2 | 1 | 3 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

**சம்பளம் வாங்கின உடனே
கடனெல்லாம் அடைச்சிட்டு
கையில இருக்கிற மிச்சத்தைப்
பாத்தா...**



**அடுத்து யாருக்கிட்ட கடன்
வாங்கலாம் எண்டு யோசிக்க
வேண்டியதா இருக்கு...**

**வாழ்க்கை என்பது
வாழைப்பழம் மாதிரி**




**சாப்பிட்டா சத்து
வழுக்கி விழுந்தா டெத்து....**

சூதாடி பணத்தை இழப்பவனைவிட, இறக்கும்போது இன்சூரன்ஸ் இல்லாமல் இறப்பவன் தன் குடும்பத்துக்கு அதிக துரோகம் செய்கிறான்.

நான் நல்லவன் என்பதற்குச் சாட்சி, நான் செய்த எந்தத் தவறுக்கும் சாட்சி இல்லை என்பதே...

தின்னிப் பயலை ஸ்கூல்ல
சேர்த்தது தப்பாப்
போச்சு....!
ஏன்?
ஆஸ்திரேலியாவின்
புகழ்பெற்ற நகரம் எதுன்னு
கேட்டா 'சட்னி'ன்னு
சொல்றான்.






## 'மெர்சல்' படத்தின் இசை உரிமத்துக்கு இமாலயத் தொகை


விஜய் நடிப்பில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள படம் மெர்சல். இந்தப் படத்தின் இசை உரிமத்தை கடும் விலைகொடுத்து வாங்கியுள்ளது சொனி மியூசிக் நிறுவனம். எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்படவில்லை. எனினும் இந்திய ஊடகங்கள் பலவும் வழங்கப்பட்டுள்ள தொகை 'இமாலயத் தொகை' என்று குறிப்பிடுகின்றன.

அட்லி இயக்கத்தில் விஜய்-நடித்து வரும் 'மெர்சல்' படத்தின் இறுதிக்கட்டப் படப்பிடிப்பு சென்னையில் நடைபெற்று வருகிறது.

ஓகஸ்ட் 20ஆம் திகதி படத்தின் பாடல்கள் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இந்தப் படத்தின் இசை உரிமையைக் கைப்பற்ற, கடும் போட்டி நிலவியுள்ளது. பெரும் விலை கொடுத்து இதன் உரிமையைக் கைப்பற்றியுள்ளது சொனி மியூசிக் நிறு வனம். கடந்த ஒரு வருடத்தில் வேறு எந்தப் படத்தின் இசை உரிமமும் இந்தளவு தொகைக்குப் போனதில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது.

**காதல் என்னை
கவிஞனாக்கியது
உன்னை
கவிதையாக்கியது**





## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். சிறிய பணியும் பலமடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**இடபம்:** சுயநலத்துடன் சிலர் நட்புப்பாராட்டலாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் திடீர் செலவால் சிரமப்படுவர். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** இனிய நிகழ்வால் மனதில் உற்சாகம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப்பெறுவர்.

**கடகம்:** கடந்த கால உழைப்பின் பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சீரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். ஆபரணம் வாங்குவர்.

**சிங்கம்:** அவமதித்தவரும் அன்பு பாராட்டி நெருங்குவர். தொழில் வியாபார வளர்ச்சியால் அமோக இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சுதந்திர உணர்வுடன் பணியாற்றுவர்.

**கன்னி:** திட்டமிட்டு செயல்பட்டு வளர்ச்சி காண்பீர்கள். தொழில் வியாபாரத்தில் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** உங்களின் வளர்ச்சி கண்டு பிறர் பொறாமைப்படுவர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.


**விருச்சிகம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைப்பதில் தாமதமாகும். தொழில் வியாபாரத்தில் முன்னேற கூடுதல் உழைப்பு அவசியம். இலாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**மகரம்:** களதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில் வியாபாரத்தில் இலாபம் உயரும்.

**கும்பம்:** பிறரைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்துவேறுபாடு கொள்வர்.


**மீனம்:** ஆரோக்கியம் மேம்படும். தொழில் வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தாமதமாகும்.



## எலி கேக்கை உண்ணுமா? உண்ணாதா?



ஒரே மாதிரியாக இருக்கும் படங்களைச் சுற்றி வட்டம் இடுங்கள்




## ஆப்பிழுத்த குரங்கு

வளர்ந்து உயர்ந்து பருத்த மரங்கள்
பற்பல அருகினிலே
பிளந்து அரிந்து விற்கும் நிலையம்
ஒன்றின் வளவினிலே
அளந்து இரண்டாய் அறுத்து நடுவில்
நிறுத்தி இடையினிலே - வாள்
நுழைந்து பின்னர் அறுக்க சுகமாய்
அவ்விடை வெளியினிலே

இரும்பால் செய்த ஆப்பொன்று அதனுள்
இறுக்கி வைத்திடவே
குறும்பே உருவாய் ஆன குரங்குக்
கூட்டமவ் இடத்தினிலே
பெரும்படை எடுத்து வந்து அங்குள்ள
மரங்கள் மீதினிலே - தாம்
விரும்பிய விதமாய் துள்ளிக் குதித்து
ஓடித் திரிகையிலே

அவைகளில் ஒன்று ஆப்பு வைத்த
மரத்தின் மீதினிலே
அழகாய் அமர்ந்திட அதன்வால் ஆப்பு
வைத்த அவ் இடையினிலே
அகப்பட் டிருப்பதை அறியாக் குரங்கு
ஆப்பை அசைப்பதிலே - மிக
ஆர்வம் கொண்டு மீண்டும் மீண்டும்
அசைத்து இழுக்கையிலே

ழன்றந்த ஆப்பு திடீரென குரங்கின்
கைகளில் வந்திடவே
ளந்தங்கு இருந்த பகுதிகள் விரைவாய்
ன்றோ டொன்றுடனே
சேர்ந்திட அதனுள் அகப்பட்ட வாலும்
ந்து அறுந்திடவே - வலி
ங்கிட முடியாது குரங்கும் எங்கோ
லறிக்கொண் டோடியதே

முன்பிருந்த சிந்தனை பண்ணா எதையும்
செய்திடு வோருக்கும்
ண்முன் இவ்விதம் காரியம் எதனையும்
செய்திடல் யாருக்கும்
பின்னதன் விளைவு பெரும் பாதிப்பை
தருமென நனைவருக்கும்
இதன்படி நன்றாய் உணர்த்திடும் அழகாய்
இக்கதை யாவருக்கும்

- பீ. த. எட்வின், உடுவில்


# முயன்றால் முன்னேறலாம்

முயற்சி திருவினையாக்கும் என்றார்கள் ஆன்றோர்கள். இதன் பொருள் உழைப்பு செல்வத்தைப் பெருக்கும். உழைப்பு, முயற்சி மதிப்பிட முடியாத பெரும் சக்தி இது. உள்ளத்துக்கு உவகை தந்து சோம்பலை நீக்கி நல் வழியில் செல்ல உதவுவது. ஒவ்வொருவரதும் அயராத உழைப்பே முயற்சி யாகும்.

மனிதன் முயற்சியால் வெல்லுபவன் உழைத்து உழைத்து அரிய உயர் இடத்தில் இருப்பவன். மனிதன் ஒளியுடன் வாழ்வதற்கு உழைப்பு உதவுகிறது. உருக்கு இரும்பைப் பார்ப்போம் அது பயன்படுத்தப் பயன்படுத்த மின்னி மின்னி ஒளிரும். பயன்படுத்தாது போனால் மினுக்கத் தன்மை கெட்டு மூலையிலே முடங்கி விடும். அது போல நாமும் சுறுசுறுப்புடன் தினமும் இயங்க வேண்டும்.

சிறுவர்களே! நீங்கள் பாடசாலையிலும் வீட்டிலும் சுறுசுறுப்புடன் மிளிர வேண்டும். இயற்கையைப் பாருங்கள்! யாவும் இயங்கிய வண்ணமே இருக்கின்றன. சூரியன் எழுகிறான் மறைகிறான், காற்று வீசுகிறது. பூமி சுற்றிக் கொண்டிருக்கிறது. அணுக்கள் அசைகின்றன. எடிசனைப் பாருங்கள்! ஒரு நாளில் 21 மணி நேரம் ஆராய்ச்சியில் ஈடுபட்டாராம். 2அல்லது3 மணி நேரமே தூங்கு வாராம். விஞ்ஞான நூல்களையே தலையணையாகப் பயன்படுத்தினராம். இந்த அயராத முயற்சியால் பெரிய விஞ்ஞானியாக வளர்ந்தார் அல்லவா? ஆபிரகாம் லிங்கன் ஏழையாக இருந்து இரவல் புத்த கங்களைப் படித்து அடுப்பு ஒளியில் கல்வி கற்று கடின உழைப்பினால் அமெரிக்காவின் அதிபராக விளங்கினார்.

பண்டிதர் நேரு தன் நாட்காட்டியில் ஓய்வு நாள் இல்லை என்றே கூறி வந்தாராம். அண்ணல் காந்தியோ இரவு பகல் இடைவிடாது உழைத்து இந்திய நாட்டையே விடு



தலை பெற வைத்த பெரும் வள்ளலானார். ஆகவே முயற்சி இள வயதிலிருந்தே ஏற்பட வேண்டும். அது ஆக்க பூர்வமான முயற்சியாகவும் இருக்க வேண்டும்.

**ஊக்கமும் சுறுசுறுப்பும் உள்ளவன் அடைவதெல்லாம் என்றும் வெற்றியே!**

## அறிந்ததும் அறியாததும்....!

- டெங்கு, மலேரியா நுளம்புகள் சுத்தமான நீரில் முட்டையிட்டுப் பெருகும்.
- ஆனைக்கால் நுளம்புகள் யாவும் அசுத்தமான நீரில் முட்டையிட்டு பெருகும்.
- நுளம்பு பெருகுவதைத் தவிர்ப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.
- பொது இடங்களில் நுளம்பு பெருகும் இடங்களை சிரமதானம் மூலம் சுத்த செய்ய வேண்டும்.
- வீட்டையும், சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் நுளம்பு, தேள், மட்டைத்தேள், புலிமுகச் சிலந்தி போன்ற பிராணிகள் பெருகி ஆபத்து விளைவிப்பதைத் தவிர்க்கலாம்.
- பெண் நுளம்புகள் மட்டுமே மனிதக் குருதியைக் குடிக்கின்றன, இதன் மூலம் அவர்களுக்கு நோய்களைப் பரப்புகின்றன.
- ஆண் நுளம்புகள் தாவரச் சாற்றை மட்டும் குடிக்கும், மனிதனைக் கடிப்பதில்லை.

# கோட்டைகள்



பண்டைக் காலத்தில் பகைவரிடமிருந்து தம்மையும் தம் மக்களையும் அரசர்கள் பாதுகாக்க வேண்டியிருந்தது. இதற்காக பல வசதிகளை உடையதும் பகைவர் எளிதில் அணுக முடியாததுமான இடத்தைத் தேர்ந்தெடுத்து அவ்விடத்தில் செயற்கை முறையில் அரண்கள் அமைத்தார்கள். இவ்வாறு அரண் அமைத்த இடத்திற்கு கோட்டை என்று பெயர். மண் சுவர் எழுப்பியும் கருங்கற்கள் அல்லது செங்கற்களால் உயர்ந்த சுவர்கள் கட்டியும் கோட்டைகளை அமைத்தார்கள். அவ்வாறு அமைக்கப் பெற்ற கோட்டையைப் பகைவர்கள் எளிதில் நெருங்க முடியாது. கோட்டையின் மதில் சுவர்களில் எந்திரக் பொறிகள் பொருத்தப்பட்டிருக்கும். மறைந்திருந்து தாக்கப் பல இடங்களும் இருக்கும். கோட்டையைக் சுற்றி பகைவர் தாக்கும் போது கோட்டையிலிருந்து யாரும் வெளியே செல்ல முடியாது. அதனால் கோட்டைக்குள்ளேயே ஏராளமான போர்க் கருவிகளையும் பல நாள்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் வைத்திருப்பார்கள். கோட்டையைச் சுற்றி அகன்ற ஆழமான அகழி இருக்கும். அகழியில் நீரும் முதலைகளும் பெரிய மீன்களும் நச்சுச் செடிகள் முதலியனவும் இருக்கும். இந்தியாவில் பல பகுதிகளில் பழங்காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகள பல இருக்கின்றன. தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் கோட்டையின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இந்தியாவில் சென்றை செஞ்வு திருச்சி, ஆர்க்காரு



அலகாபாத் ஆகிய நகரக் கோட்டைகளும் டெல்லி செங்கோட்டையும் புகழ் பெற்றவை. ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் பெரியகோட்டைகள்உள்ளன. விஞ்ஞானம் வளர வளரக் கோட்டையின் முக்கியத்துவம் குறைந்து விட்டது. இன்று வானூர்திகளாலும் வெடி குண்டுகளாலும் வலிமையான கோட்டையையும் அழித்து விட முடியும். ஆதலால் இக்காலத்தில் கோட்டைகளை கட்டப்படுவில்லை. முன்பு கட்டப்பட்ட கோட்டைகள் இன்று வரலாற்றுச் சின்னங்களாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

உதாரணமாக யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் கால கோட்டை வரலாற்றுச் சின்னமாக உள்ளது.

## நீதிமன்ற...

தைக் கண்டித்தும் நீதி விசாரணையை வலியுறுத்தியும் வடக்கு மாகாண நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இன்று நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள அனைத்து நீதிமன்ற உத்தியோகத்தர்களும் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். (வ)

## வேலையாள் தேவை

நல்லூரில் இயங்கும் விருந்தினர் விடுதி ஒன்றிற்கு வேலை ஆள் தேவை.
சம்பளம் நேரில்பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - 077 3973 166
078 5000 917

## காணவில்லை

பொன்னாலையைச் சேர்ந்த தி .பொன்னம்பலவாணர் என்பவரது தேசிய அடையாள அட்டை.லைசன்ஸ்.மோட்டார்சைக்கிள் ரைக்ஸ் .இன்சூரன்ஸ் ஆகியவை யாழ்ப்பாணத்திற்கும் மல்லாகத்திற்கும் இடையில் தொலைந்துவிட்டது.கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
077 886 4245

## விற்பனையாகிறது...

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு

15 எதிர் பார்க்கை மாதிரி வினாத்தாள்களுடன்

1 பூமாலை — இலங்கையில் அதிகளவில் விற்பனையாகின்ற வினாத்தாள் தொகுப்பு

10 எதிர் பார்க்கை மாதிரி வினாத்தாள்களுடன்

2 யாழ் எக்ஸ்பிரஸ் — விலை : 400/-

தொடர் மாதிரி வினாத்தாள்களுடன்

3 வெற்றிச்சிகரம்

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
தொ.பேசி : 077-6258778

## பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 29.07.2017 சனிக்கிழமை அன்று நடைபெறவிருந்த சங்கீதபூஷணம் அமரர் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களது ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

203, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## கூறுவிலை கோரல்

இலங்கை மின்சாரசபை யாழ் ஒளி மின்நிலையத்தில் பணிபுரியும் பயிலுனர்கள் தங்குவதற்கான விடுதி ஒன்றை பெறுவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் மற்றும் மேலதிக விவரங்களையும் அலுவலக நேரத்தில் 17.08.2017 பி.ப 2.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 17.08.2017 பி.ப 2.00 மணிக்கு யாழ் ஒளி மின் நிலையம், இலங்கை மின்சாரசபை, சுன்னாகத்தில் திறக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

பிரதம பொறியியலாளர்,
யாழ் ஒளி மின் நிலையம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம் - 40075.

021 224 2400/ 021 224 2247

## வல்வெட்டித்துறை பிரதேச வைத்திய சாலை நோயாளர் நலன்புரி சங்கம் வருடாந்த பொதுக் கூட்ட அறிவித்தல்

காலம் :- 06 . 08 . 2017 ஞாயிறு
முற்பகல் 10.30 மணி
இடம் :- வைத்தியசாலை மண்டபம்
தலைமை :- Dr.S.சோதிமயம்

**நிகழ்ச்சி நிரல்**

01.இறை வணக்கம்
02. தலைவர் உரை
03. செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தல்
04. பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
05. புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு
06. பிறவிடயங்கள்

நலன்விரும்பிகள் பொதுமக்கள் அனைவரையும் பங்குபற்றி ஒத்துழைக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். பொதுக்கூட்டத்திற்கான பிரேரணைகள் 30.07.2017 இற்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

Dr.S.சோதிமயம்
தலைவர்.

க.ஜெயகணேஸ்
செயலாளர்.

## கேள்வி அறிவித்தல்
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG-Stage II)- 2017
## வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், வடமாகாணம்

1. தலைவர் , பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காக கோரப்படுகின்றது.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(I) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி புனரமைப்பிற்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை(Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம் (தொலைபேசி : 0212250144, தொலைநகல் :0212250144, மின்னஞ்சல் :valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரை 17ஒகஸ்ட் 2017 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. செயலாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம் எனும் இடத்தில் 27.07.2017 ஆம் திகதியிலிருந்து 17.08.2017 ஆம் திகதி வரைகாலை 09.00 மணிக்கும் பி.ப14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனி கடித உறைகளில் இட்டு தலைவர், பெறுகைக்குழு,வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் எனும் முகவரிக்கு 17.08.2017 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது ,கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்
8. கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் கேள்வி அறிவித்தலிலுள்ள வேலைகளின் கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்தி மூன்று–19.10.2017) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்.ரு) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01. | NP/14/41(17) 2/Stage II/PSDG | சங்கானை பொது நூலகம் அமைத்தல் (கட்டம் IV) | 3.795 | 03 மாதங்கள் | C8 கட்டிடம் | 38,000.00 | 16..11.2017 |
| 02 | NP/14/41 (17)2/Stage II/PSDG | அராலி திண்மக்கழிவு சேகரிக்கும் கொட்டகை அமைத்தல் | 1.867 | 03 மாதங்கள் | C9 கட்டிடம் | 19,000.00 | 16.11.2017 |


10. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபைக் கட்டடத்தில் 10.08.2017 அன்று மாலை 14.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம்,

26.07.2017

## மரண அறிவித்தல்
## சிலுவைராஜா ஞானசீலன் (JP)

(ஓய்வுபெற்ற பிரதம தபால்அதிபர்)



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிலுவைராஜா ஞானசீலன் நேற்று (26.07.2017)புதன்கிழமைகாலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சிலுவைராஜா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களானதிரு.திருமதிதேவசகாயம் (இளைப்பாறிய IP) தம்பதியரின் அன்பு மருமகனும் மார்க் கிறட்டின் அன்புக் கணவரும் வாசுகி (லண்டன்), சுகந்தினி (லண்டன்), காண்டீபன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யூட் (லண்டன்), அன்ரசன் (லண்டன்), கிறிஸ்ரி நிலானி (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் கெலனி (லண்டன்), மெலனி (லண்டன்), சுயன் (லண்டன்), சிரோணி (லண்டன்), ஜெரோணி (லண்டன்), கீர்த்தனா, கிஸானா ஆகியோரின் அன்புப் பேரனும் றொபேட் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற அன்ரன், சாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.07.2017) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின் காக்கை தீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் - காண்டீபன் 077 3867355,
மகள் - சுகி(லண்டன்)0044747 626 6409

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**பரமேஸ்வரி சம்பந்தபிள்ளை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி :- 27.07.2017

ஓராண்டு கடந்து சென்றாலும்
ஒவ்வொரு விநாடியும்
நீங்கள் எங்களுடன் வாழ்வதைப்
போல் உணர்கின்றோம்.


உங்கள் நினைவால் துயருறும் (சகோதரிகள்)
இலங்கா - மனோகரன்
பவளம் - சிவானந்தம்

"இலங்காவா"
கண்டிவீதி, சாவகச்சேரி வடக்கு.

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு குமாரரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியர் -
யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்,
யா/ வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்)



மண்டைதீவு கிழக்கை பிறப்பிடமாகவும், வேலணை வடக்கு, மணியகாரன் வீட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு குமாரரத்தினம் (26.07.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லாச்சி தம்பதியரின் அன்புமகனும் ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புமருமகனும் யோகம்மா (இளைப்பாறிய ஆசிரியை - யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம்) அவர்களின் அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான கந்தையா, செல்லத்தம்பி, ஆச்சிக்குட்டி, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் மனோன்மணி, நாகேஸ்வரி, அருமைநாயகம் (இளைப்பாறிய கோட்டகல்வி அதிகாரி), புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வு இன்று (27.07.2017) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
சுதாகரன்
(பெறாமகன் - 077 3151 593)

வேலணை வடக்கு,
மணியகாரன் வீட்டடி.

## தவறிவிட்டது

மீசாலை கிழக்கு, மீசாலையில் வசிக்கும் கணபதிப்பிள்ளை இராசேஸ்வரி ஆகிய நான் சாவகச்சேரி வைத்தியசாலைக்கும், சாவகச்சேரி பஸ் நிலையத்திற்குமிடையில் எனது பணப்பையினைத் தவறவிட்டு விட்டேன். பணப்பையினுள் எனது தேசிய அடையாள அட்டை, சிறுதொகைப்பணம், முக்கியமான பொருள் என்பன இருந்தன. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மனிதாபிமான அடிப்படையில் கீழுள்ள எனது முகவரியில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**முத்து கணபதிப்பிள்ளை**
**மீசாலை கிழக்கு, மீசாலை.**

தொடர்பு -
021 490 8507

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி
**பொஸ்கோ மதுரா**



Best wishes

யா / செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற 10 ஆவது மாகாண மட்ட தடகளப் போட்டியில் பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக 12 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான நீளம் பாய்தல் போட்டியில் வெண்கல பதக்கத்தைக் கைப்பற்றி தேசிய மட்ட போட்டியில் கலந்துகொள்ளவுள்ள **செல்வி பொஸ்கோ மதுராவை** பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : பாடசாலை சமூகம்,
யா / செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை

## யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்

**குழந்தைப் பேறற்றோருக்கான மாபெரும்**
**இலவச மருத்துவ முகாம்.**

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகமும், கோயம்புத்தூர் காலைக்கதிரவன் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் மேற்படிமுகாமில் குழந்தைப்பேறற்ற தம்பதியினர்குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவதற்கான இலவச பரிசோதனைகள் ஆரம்ப சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படும்.

**மருத்துவமுகாம்**

| முதலாம் நாள் | 2ஆம் நாள் |
|---|---|
| திகதி - 05.08.2017 | திகதி - 06.08.2017 |
| சனிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |
| இடம் - இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். | இடம் - Loyola திருமணமண்டபம் சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| நேரம் : 9am - 3pm | நேரம் : 9am - 3pm |

**மருத்துவநிபுணர்கள் :**

1. Dr. Vasanti Nitinlad 2. Dr.LadNitin Laxmikant

பயன் பெற விரும்பும் அனைத்து அன்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்பு - 077 0367 136,
077 3657 062

**யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்.**

## பெற்றோல்...

பெறப்பட்டுள்ளதாக, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரட்ன நேற்று மாலை தெரிவித்தார். சுமுகமான எரிபொருள் விநியோகத்திற்கு ஊழியர்கள் இணங்கியதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் பெற்றோலிய தொழிற்சங்கங்கள் நேற்று முன்னிரவு நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரையில் தமது போராட்டத்தை மீளப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக அவர்கள் அறிவித்தனர்.

கடந்த திங்கள்கிழமை இரவிலிருந்து 3 கோரிக்கைகளை முன்வைத்து பெற்றோலியத் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதித்தன. எரிபொருள் விநியோகம் நேற்று முன்தினம் இடம்பெறவில்லை. பெரும் நெருக்கடி நிலை நாடளாவிய ரீதியில் ஏற்பட்டிருந்தது. அரசு அதிரடியாகச் செவ்வாய்க்கிழமை இரவு தொடக்கம், எரிபொருள் விநியோகத்தை அவசர சேவையாகப் பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டிருந்தது.

இந்த அறிவித்தல் வெளியானதும், இராணுவத்தினர் கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல எரிபொருள் விநியோக மையங்களைச் சுற்றி வளைத்தனர். தொழிற் சங்கத்தினரின் எதிர்ப்புக்களை அடக்கி, எரிபொருள் விநியோக நடவடிக்கையைப் பொறுப்பெடுத்தனர்.

நேற்றுக் காலையிலிருந்து எரிபொருள் பவுசர்கள், எரிபொருள் தொடருந்துகள் இராணுவத்தினர் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன் கொலன்னாவ மற்றும் முத்துராஜ வெலவிலிருந்து புறப்பட்டன. இவற்றை இடைமறித்து விநியோக நடவடிக்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்த முயன்ற தொழிற் சங்கப் போராட்டக்காரர்களைக் குண்டுக்கட்டாகத் தூக்கி பொலிஸார் அகற்றினர். அவர்களில் சிலரைக் கைது செய்தனர்.

இந்த நிலையில், தொழிற்சங்கத்தினர் எரிபொருள் விநியோகம் சுமுகமாக இடம்பெறும் என்று உறுதியளித்ததைத் தொடர்ந்து இராணுவத்தினர் இந்த நடவடிக்கையிலிருந்து பின்வாங்கினர்.

(த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி சத்தியவதி செல்லத்துரை (சங்கானை)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சத்தியவதி செல்லத்துரை நேற்று (26.07.2017) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா செல்லத்துரை (2240 கார் உரிமையாளர்) யின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற யோகரத்தினத்தின் அன்புச் சகோதரியும் ஸ்ரீகந்தராஜா, மகேந்திரன், விக்னேஸ்வரி, கேசவதாஸ், திலகேஸ்வரி, சுசிலா (ஜேர்மனி), கோவிந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயலட்சுமிதேவி, சத்தியதேவி, மகாதேவன், பிரேமளா, யோகானந்தன், வரதராஜா, விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும் சர்மிளா, சுஜித்தா, சுலக்ஷனா, நிருபன், மதுரன், சரணியா, சரவணன், பிரசாந்த், ஜெயகாந், ஜெகநாத், லக் ஷினா, ஜனனி, பானுஷா, ரவீனா, துவாரகன், துளசி, விவேகா, பானுஜன், தேனுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ரஷ்வினா, கிருத்திக், புவிஷ்னா, சாய் மாயோன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2017) வியாழக் கிழமை மு.ப. 11 மணியளவில் வல்லை வீதி, சங்கானையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை, கரைச்சி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


ஸ்ரீகந்தராஜா - 075 042 8054,
மகாதேவன் - 076 832 8607

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முருகையா தியாகேஷன்

(ஓய்வு நிலை பாடசாலை பணியாளர் - யா/யாழ்ற்றன் கல்லூரி, யா/செங்குந்தா இந்துக்கல்லூரி, யா/கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயம், யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.06.1962 | 26.07.2017 |

வடக்கம்பரை பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கு, உப்புமடப்பிள்ளையார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட முருகையா தியாகேஷன் நேற்று (26.07.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் வல்வெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சதாசிவம் - இராசம்மா தம்பதியரின் மருமகனும் சிவமலரின் (குஞ்சு) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சபேசன் (அப்புச்சி), கனகலக்சுமி (வசந்தி) மற்றும் தனபாலன் காலஞ்சென்றவர்களான ஜெகன்மோகன், கணேசன் ஆகியோரின் அன்புசகோதரனும் காலஞ்சென்றவர்களான சரத்பஞ்சாட்சரம், தில்லைநாதன் மற்றும் சாந்தி, பரமேஸ்வரி, பேரின்பமலர், ரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் குமணன், கதீபன், மதுவந்தி, மதுஷா, டினோஜா, ஐங்கரன் ஆகியோரின் மாமனும் நந்தினி, மால்மருகன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2017) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இருபாலை வீதி, கோண்டாவில் மேற்கு.
(உப்புமடச்சந்திக்கு அருகில்)

தகவல்: மனைவி
077 170 7031

## தாக்குதல்...

ளர்களிடம் பேசிய அவர் தாக்குதல் நடந்த விதம் குறித்து விளக்கினார்.
அவர் தெரிவித்ததாவது:
நான் முதலாவது சாட்சி, பொலிஸ் கான்ஸ்டபிள் விமலரத்ன இரண்டாவது சாட்சி, எனது சாரதி மூன்றாவது சாட்சி, தாக்குதலாளி தப்பிச் செல்வதற்காகப் பறித்துச் சென்ற மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் நான்காவது சாட்சி.
என்னுடைய மெய்ப்பாதுகாவலரின் இடுப்பிலிருந்து துப்பாக்கியை தாக்குதலாளி உருவியபோது நான் கண்டேன். உடனடியாகக் காரில் இருந்து இறங்கி வந்தேன். அந்தநேரத்தில் உப பரிசோதகரும் தாக்குதலாளியும் ஒருவரையொருவர் பிடித்தபடி இழுபறிப்பட்டுக் கொண்டிருந்தனர். கழுத்தைப் பிடித்து இறுக்கியபடியும் சட்டையைப் பிடித்திழுத்தபடியும் அவர்கள் காணப்பட்டபோது தாக்குதலாளி தனது வலது கையை மேல் நோக்கி உயர்த்திப் பிடித்திருந்தார். அதிலேயே துப்பாக்கி இருந்தது. அதைப் பார்த்ததும் நான் அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்தபடியே துப்பாக்கியைக் கீழே போடு என்று சத்தமிட்டேன்.
அதன் பின்னரே உப பரிசோதகரைத் தாக்குதலாளி தள்ளிவிட்டு அவரை நோக்கிச் சுட்டார். பின்னர் என்னை இலக்கு வைத்துத் துப்பாக்கியை நீட்டினார். அப்போது எனது இரண்டாவது மெய்ப் பாதுகாவலர் என் பின்னால் நின்றிருந்தார். அவர் உடனடியாக என்னைக் காருக்குள் தள்ளிவிட்டார். அதன் பின்னரே தாக்குதலாளியை நோக்கி அவர் சுட்டார்.
இவ்வளவும் நடந்தது கிட்டத்தட்ட 10 அடிச் சுற்று வட்டாரத்துக்குள்தான். நல்லூர்ச் சந்தி அது. துரதிர்ஷ்டவசமாக அந்த நேரத்தில் அந்த இடத்தில் யாரும் இருக்கவில்லை. பொலிஸார் அந்த இடத்தில் பலர் இருந்தனர் என்று இப்போது கூறுகின்றார்கள். ஆனால் உண்மையில் அப்படி யாரும் இருக்கவில்லை. எனது இரண்டு மெய்ப் பாதுகாவலர்களும் சூடுபட்டு வீழ்ந்து கிடக்கிறார்கள். அவர்களைத் தூக்கி ஏற்றுவதற்கு உதவி செய்யக்கூட அங்கு யாரும் இருக்கவில்லை. ஒரு நீதிபதியாகிய நானும் எனது சாரதியும்தான் அவர்களைத் தூக்கிக் காரில் போட்டுக்கொண்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். போகும்போதே பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குச் சம்பவம் குறித்துத் தெரிவித்தேன். 11.30 மணிவரை நான் வைத்தியசாலையில் இருந்தேன். 12.20 மணியளவில் உப பரிசோதகர் உயிரிழந்தார்.
இதுதான் அன்று உண்மையில் நடந்தது. நான் சொல்வது உண்மையா பொய்யா என்பதற்கு அப்பால் சம்பவத்தின் நேரடியான முதல் சாட்சி நான். மேல் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கின்றேன். பொலிஸ் பேச்சாளர் இப்படிச் சொல்வாராக இருந்தால் இந்த வழக்கிலிருந்து நான் விலகத் தயாராக இருக்கின்றேன். பேச்சாளர் நீதிமன்றத்துக்கு வந்து சாட்சியமளிக்கட்டும். சம்பவம் தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாகவோ முதன்மைச் சந்தேகநபர் கைது செய்யப்படுவதற்கு முன்பாகவோ எந்தவொரு கருத்தையும் தெரிவிப்பதற்குப் பொலிஸ் பேச்சாளருக்கு எந்தவொரு உரிமையும் கிடையாது.
சந்தேக நபர்கள் என்னவேண்டுமானாலும் சொல்வார்கள். என்னுடைய மெய்ப்பாதுகாவலர்கள் மிகவும் நல்லவர்கள். அவர்களுக்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லை. அவர்களை இலக்கு வைக்கவேண்டிய தேவை ஏதும் இல்லை. அப்படி யாழ்ப்பாண மக்கள் அவர்களை வெறுத்திருந்தால் ஏன் யாழ். பல்கலைக்கழகத்தில் உயிரிழந்த பொலிஸ் உப பரிசோதகருக்காக விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்? இலங்கையின் வரலாற்றில் இப்படி நடந்திருப்பது இதுவே முதற்றடவை.
நான் 20 வருடங்களாக நீதிச் சேவையில் இருக்கின்றேன். கிட்டத்தட்ட 1000 உயிரிழந்த உடல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தியிருப்பேன். யார், எப்படி நடந்துகொள்வார்கள் என்பது பற்றி எனக்குத் தெரியும். தாக்குதலாளி உப பரிசோதகரிடம் இருந்து துப்பாக்கியைப் பறித்ததும் உடனடியாகவே சுடுகுழலுக்குள் குண்டை ஏற்றிச் சுட்டார். நேர்த்தியான தொழில் விற்பனம் இல்லாத ஒருவரால் அவ்வாறு இலகுவாக பிஸ்ரலைக் கையாண்டிருக்க முடியாது. இரண்டு மூன்று தடவைகள் உப பரிசோதகரைச் சுட்டதன் பின்னர் தான் என்னை நோக்கித் துப்பாக்கியை நீட்டினார். அதன் பின்னர்தான் எனது இரண்டாவது மெய்ப் பாதுகாவலர் தனது துப்பாக்கியை "லோட்" பண்ணிச் சுட்டார். தாக்குதலாளி சுட்டபோது எனக்குக் காயமேற்படாததற்குக் காரணம் அவரால் என்னை இலகுவாக இலக்கு வைக்க முடியவில்லை. எனக்கும் அவருக்கும் இடையே உப பரிசோதகர் இருந்தார். என் பின்னால் மற்றைய பொலிஸ் கான்ஸ்டபிள் நின்றிருந்தார்.
இப்படி இருக்கையில் யார் இலக்கு என்பதைப் பற்றி இவர்கள் ஏன் தேடிக்கொண்டிருக்கிறார்கள்? யாரையாவது திருப்திப்படுத்துவதற்காக இவர்கள் இப்படிச் செய்கிறார்களா என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை-என்றார். (த)

## எரிபொருள்...

ஏற்பட்டது.
ஆளும் எதிரணி உறுப்பினர்களுக்கிடையிலான சொற்போர் வலுப்பெற்றதால் சபை நடவடிக்கைகளை சபாநாயகர் கரு ஜயசூரிய 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார். அதன்பின்னர், மீண்டும் சபை கூடியபோதும் சர்ச்சை நீடித்ததால் விவாதமின்றியே சட்டவரைவுகள் நிறைவேற்றப்பட்டன.
நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது.
சபாநாயகர் அறிவிப்பு, மனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று, 23/2 இன்கீழான சிறப்புக் கூற்று ஆகியன முடிவடைந்த பின்னர் அமைச்சரவை அறிவிப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டது.
இதன்போது, எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டமை குறித்தும், எரிபொருள் தொழிற்சங்க ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை சம்பந்தமாகவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க விரிவானதொரு விளக்கத்தை வழங்கி, இது விடயத்தின் அரசின் கொள்கை என்னவென்பதை அறிவித்தார்.
இந்த அறிவிப்பையடுத்து கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, அந்த அறிவிப்பில் சில போலியான தகவல்கள் இருப்பதாகத் தெரிவித்தார்.
அத்துடன், அரச தலைவருடன் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பிய தொழிற்சங்க உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டிய அவர், அதற்குக் கடும் கண்டனத்தையும் வெளியிட்டார்.
அத்தியாவசிய சேவைகளுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்கு தொழிற்சங்க உறுப்பினர்கள் தயார்நிலையில் இருந்த வேளையிலேயே இராணுவத்தைப் புகுத்தி குண்டர் குழுக்களைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என வாதிட்ட அநுரகுமார திஸாநாயக்க, துறைமுகம், எண்ணெய்க் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட விடயங்களில் அரசின் கொள்கைகளையும் கடுமையாகச் சாடினார்.
இதையடுத்துஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய தினேஷ் குணவர்தன, எரிபொருள் தொழிற்சங்க ஊழியர்களின் கோரிக்கைகளை நியாயப்படுத்தியதுடன், கொலன்னாவை எரிபொருள் களஞ்சியசாலை இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட அரசின் செயலையும் கடுமையாகச் சாடிப் பேசினார்.
அந்த வேளையில் சபை முதல்வர் குறுக்கிட்டதால் கடுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன , பெற்றோல் பற்றி எரியும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் என எச்சரித்தார்.
இவ்வாறு தினேஷ் குணவர்தன கருத்து வெளியிட்டுக் கொண்டிருக்கையில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார்,
"தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் உரிமை தொழிற்சங்கத்துக்கு இருக்கின்றது. ஆனால், வேலைக்குச் செல்ல விரும்பும் தரப்பைத் தடுத்து நிறுத்துவதற்குரிய அதிகாரம் அதற்கு இல்லை. வேலைக்குத் திரும்ப முற்பட்டவர்கள் மீது முட்டைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆகவே, எண்ணெய்க் களஞ்சியசாலையைப் பாதுகாக்கவே இராணுவம் சென்றது. மாறாக விநியோகிப்பதற்கு அல்ல" என்றார்.
இதற்கிடையில் ஆளும் எதிரணி உறுப்பினர்கள் கருத்து வெளியிடுவதற்காக அடிக்கடி ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினர்.
கூச்சல், குழப்பத்துக்கு மத்தியில் நாமல் ராஜபக்சவுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.
"அரச தலைவருடன் பேச்சு நடத்திவிட்டு வந்த 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எண்ணெய் விநியோகத்துக்காகத்தான் இராணுவம் சென்றது எனத் தலைமை அமைச்சர் கூறினார். பாதுகாக்கவே என்று மரிக்கார் தெரிவித்தார். இதில் யார் சொல்வது சரி?" என்று கேள்வி எழுப்பினார்.
மகிந்த அணி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, தினேஷ் குணவர்தனவுக்கு வாய்ப்பளிக்குமாறு உரத்த குரலில் கேட்டனர்.
அமைச்சரவை அறிவிப்பு வேளையில், விவாதம் நடத்துவதற்கு இடமளிக்கமுடியாது எனச் சபாநாயகர் கூறி, நிலையியல் கட்டளை ஏற்பாடுகள் பற்றி விளக்கமளித்ததுடன், இதுவரை எழுப்பப்பட்ட கேள்விகளுக்குத்தலைமை அமைச்சர் பதிலளிப்பார் எனக் கூறி வாய்ப்பை அவருக்கு வழங்கினார்.
இதற்கமைய தலைமை அமைச்சர் பதிலளிக்க முற்பட்டார். எனினும், வாய்ப்புக் கிடைக்காததால் கடுப்பான மகிந்த அணி உறுப்பினர்கள் பலர் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.
"ஏற்கனவே வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மறுபடியும் வழங்கமுடியாது. கையை நீட்டி மிரட்டினாலும் இதுதான் முடிவு" என்று சபாநாயகர் திட்டவட்டமாக அறிவித்தார்.
மகிந்த அணி ஓயவில்லை. தொடர்ந்தும் கூச்சலிட்டனர். இதனால், சபை நடவடிக்கைகளை சபாநாயகர் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.
பின்னர், மாலை 3.15 மணிக்கு சபை மீண்டும் கூடியது. இதன்போது அறிவிப்பொன்றை விடுத்த சபாநாயகர்,
"தலைமை அமைச்சரால் விடுக்கப்பட்ட அமைச்சரவை அறிவிப்பு குறித்து கருத்து வெளியிடுவதற்காக உறுப்பினர்களுக்கு என்னால் உரிய காலம் வழங்கப்பட்டது. சர்ச்சையால் சபை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. எனினும், எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டமை குறித்து நாளை (இன்று) முழுநாள் விவாதம் நடத்தமுடியும். அவ்வேளை அது பற்றி உறுப்பினர்கள் கருத்து வெளியிடமுடியுமென்பதால் இன்றைய தினம் சபை அமர்வை சர்ச்சையின்றிக் கொண்டுநடத்துவதற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்" என்றார்.
சபாநாயகரின் அறிவிப்பின் பின்னர் தலைமை அமைச்சர் விளக்கமளிக்க முற்பட்டபோது மீண்டும் சர்ச்சை ஏற்பட்டது. மகிந்த அணி, ஜே.வி.பி. உறுப்பினர்கள் எழுந்து நின்று கருத்து வெளியிட வாய்ப்புக் கோரினர்.
இதற்கிடையே ஆளுங்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே கடும் சொற்போர் மூண்டது.
"குண்டர்கள் குழு தொழிற்சங்க ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். இதை உடன் நிறுத்துங்கள். கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுங்கள்" என்று மகிந்த அணி உறுப்பினர்கள்ள கூட்டாக வலியுறுத்தினர்.
"வாக்குமூலம் பெறுவதற்காகவே தொழிற்சங்க உறுப்பினர்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். இரத்தக்களரி எதுவும் ஏற்படவில்லை" என்று தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.
சபாநாயகர் எவ்வளவு தலையிட்டும் சர்ச்சையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனது. இதையடுத்து, சபை முதல்வரால் நிதி அமைச்சின் கீழான 6 பிரேரணைகளும், ஒரு சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டு விவாதமின்றி வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன. (த)

## மெய்க்காவலரின்...

ளைக ளையும் தான் தத்தெடுத்துக் கொள்வதாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று அறிவித்தார்.
தனது மெய்ப்பாதுகாவலராக 15 வருட காலமாகப் பணியாற்றிய உப பொலிஸ் பரிசோதகரின் இறுதிக் கிரியை நேற்று அவரது சொந்த ஊரான சிலாபத்தில் இடம்பெற்றது.
இதில் உரையாற்றியபோதே நீதிபதி இவ்வாறு கூறினார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
எனக்கு இரு புதல்வர்கள் உள்ளனர். அவர்களுடன் சேர்த்து இன்று (நேற்று) முதல் ஒரு மகளும் ஒரு மகனும் இணைந்து கொள்கின்றனர். எனக்கு இப்போது 4 பிள்ளைகள். மெய்க்காவலரின் பிள்ளைகளையும் எனது சொந்தப் பிள்ளைகள் ஆக்கியுள்ளேன்.
எனது உயிர் இருக்கும் வரை அவர்கள் இருவரினதும் சகல தேவைகளையும் நானே மேற்கொள்வேன். ஒரு தந்தை என்ற நிலையில் இருந்து அவர்களுக்கான சகல விடயங்களையும் எதிர்காலத்தையும் நான் கவனிப்பேன். அவர்கள் முன்பாகவே நான் இதனைக் கூறுகின்றேன்.
எனது உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுயிரை நீத்த எனது மெய்ப்பாதுகாவலருக்குச் செய்யும் கடமையாக நான் இதனைக் கருதுகிறேன்-என்றார். (த)

## காசு வாங்கி...

என்று தெரிவித்துள்ளனர்.
கேப்பாபிலவு மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையில் மீள்குடியேற்ற அமைச்சில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது மக்கள், தமது காணி விடுவிப்புக்காக இனிமேலும் பொறுமையாக இருக்கமுடியாது என்று தெரிவித்தனர்.
இராணுவத்தினர் 111 ஏக்கர் காணியை விடுவிப்பதற்குச் சம்மதம் என்றும், அந்த முகாம்களை இடம் மாற்றப் பணம் தேவை என்றும் குறிப்பிட்டுள்ளனர். இதன்போது மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், எனது அமைச்சின் ஊடாக அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுத் தருவதாகப் பதில் வழங்கியுள்ளார்.
பணம் கிடைக்கப் பெற்றால் இந்த ஆண்டு இறுதிக்குள் முகாம்களை இடம் மாற்றுவதாக இராணுவத்தினர் குறிப்பிட்டுள்ளனர். மக்கள் இராணுவத்தினரின் இந்தப் பதிலை ஏற்கவில்லை.
இதேவேளை, கேப்பாபிலவில் 180 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்காக, அந்தக் காணியில் உள்ள முகாமை இடம் மாற்றப் பணம் தேவை என்று இராணுவம் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக, மீள்குடியேற்ற அமைச்சு அந்தப் பணத்தை வழங்கியிருந்தது. அதற்கு அமைவாக 180 ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் விடுவித்தனர். அந்தக் காணிகள் மக்களின் குடியிருப்புக் காணிகளாக அல்லாமல் காட்டுப் பகுதியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## உங்களை...

தும், உங்களை நம்பித்தான் இருக்கின்றோம் என்று கேப்பாபிலவு மக்கள் தெரிவித்துள்ளனர்.
கேப்பாபிலவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களில் சிலர், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் கொழும்புக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களுடனான கலந்துரையாடலில் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, இராணுவத் தளபதியின் சார்பில் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.
கேப்பாபிலவில் 111 ஏக்கர் மற்றும் 70 ஏக்கர் என்று இரண்டு கட்டங்களாக காணி விடுவிக்கப்படவேண்டியுள்ளது. இவற்றை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இந்த ஆண்டு இறுதிவரை கால அவகாசம் கோரினர். அத்துடன் 70 ஏக்கர் விடுவிக்க முடியாது என்று சாரப்படப் பதில் வழங்கினர். இதனால் கேப்பாபிலவு மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது.
இந்தச் சந்தர்பத்தில் கருத்துத் தெரிவித்த இரா. சம்பந்தன், நீங்கள் வீதிகளில் போராடுவது எங்களுக்கு வருத்தமாக இருக்கின்றது. நான் இன்னமும் 10 நாள்களுக்குள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலருடன் இரண்டு காணிகள் தொடர்பிலும் பேசுகின்றேன். உங்களுக்கு நல்ல பதில் வழங்குகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.
'உங்களை நம்பித்தான் இருக்கின்றோம். நாங்கள் உங்களை நம்பித்தான் போராட்டத்தை ஆரம்பித்தோம். நீங்கள் நல்ல முடிவைப் பெற்றுத் தாருங்கள்' என்று கூறியுள்ளனர். (த-5)

## மின்...

கப்படலாம் என்று மின்சக்தி மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தெரிவித்தது.
நாட்டில் நிலவியுள்ள வறட்சியான காலநிலையின் காரணமாக நாளாந்த மின்சார விநியோகத்துக்கான தேவையைப் பூர்த்தி செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்சன ஜயவர்தன குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இரவுவேளையில் 2 ஆயிரத்து 400 மெகாவோட்ஸிற்கும் அதிக மின்சாரம் தேவைப்படுகின்றது. நீர் மின்சார உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதாலும், நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் 300 மெகாவோட் மின் பிறப்பாக்க இயந்திரம் செயலிழந்துள்ளதாலும், ஊழியர் பணிப்புறக்கணிப்பினால் எம்பிலிப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்திற்கான எரிபொருள் கிடைக்காமையா லும் மின் விநியோகத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது என்றார். (த-5)

# வடமாகாண கிரிக்கெட் நடுவர்கள் தரமுயர்த்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 27
வட மாகாணத்தைச் சேர்ந்த துடுப்பாட்ட நடுவர்கள் ஆறுபேர் இலங்கை கிரிக்கெற் நடுவர்கள் சபையினால் சபையினால் தரம் 5 இல் இருந்து தரம் 4 பி பிரிவுக்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.
கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் நடைபெற்ற இந்தப் பரீட்சை தொடர்பான விவரங்கள் தற்போது வெளிவந்துள்ளன. இதனடிப்படையிலேயே இந்த தரமுயர்த்தல்கள் நடைபெற்றுள்ளன.
வடமாகாண நடுவர்களான இரவீந்திரன் சிறீரமணன், தவராஜசிங்கம் கிருபாகரன், பாலச்சந்திரன் சஞ்சீவ், திருச்செல்வம் துசானந்த், சண்முகசுந்தரம் குணதாஸ், முருகவேல் ஆகியோரே அவ்வாறு தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.
(ம)



வேலணை அணி



கரவெட்டி அணி

# கரவெட்டி - வேலணை இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்ப்பாண மாவட்டச் செயலர் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கரவெட்டி பிரதேச செயலக அணி, வேலணை பிரதேச செயலக அணி என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில், வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேசசெயலக அணி மோதியது. ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் வேலணை அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார் ஜெனா. வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் திருப்பங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது வேலணை அணி.
தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணி மோதியது. ஆட்டத்தின் 16ஆவது நிமிடத்தில்கரவெட்டியின்கோலைப் பதிவுசெய்தார் ராஜா. அடுத்த இரண்டுநிமிடங்களில் வேலணையின் கோல் ஜெயக்குமாரால் பதிவானது. 1:1 என்ற நிலையில் முதல் பாதி முடிவடைந்தது. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது கரவெட்டி. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

**இளைஞர் வி.க. கால்பந்தாட்டம்**

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கனகபுரம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி ஜெயந்திநகர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**ஐக்கியத்தின் கபடித் தொடர்**

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் உள்ளக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கபடித் தொடர் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அப்பாக்குட்டி வாரியர்ஸ் அணியை எதிர்த்து பெரியம்மான் சலஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது.

**கால்பந்தாட்டம்**

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'ஏஜ' விளையாட்டு வியாபார நிலையத்தினால் நடத்தத்திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடர் மன்னார் பொது விளையாட்டுமைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது. இன்றைய நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உப தலைவர் ஜெராட் கலந்துகொள்கிறார். (ம-23)

# ஆவரங்கால் மத்தி. அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஜூலை 27
கைதடி மேற்கு சனசமூக நிலையம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.
கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலிலேயே தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் செற்றைக் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி. இரண்டாவது செற்றை 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது வளர்மதி. முதலிரு செற்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 2 செற்களைக் கைப்பற்றியிருந்ததால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற்றை 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னேற்றம் கண்டது ஆவரங்கால் மத்தி. (ம-23)

# சென். ஜோசெப் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூலை 27
நானாட்டான் நீகன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் பனங்கட்டுக் கொட்டு சென். ஜோசெப் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
நானாட்டான் பிரதேச சபை விளையாட்டுக்கழகமைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசெப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நானாட்டான் நீகன் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் சென். ஜோசெப் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# கலந்துரையாடல்

கரணவாய், ஜூலை 27
வட மாகாண மெய்வன்மைப் பயிற்சி முகாம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டி தேசியமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்ற தகுதி பெற்ற மாணவர்களுக்கான பயிற்சிமுகாம் ஒன்றை மாகாணக் கல்வி திணைக்களம் நடத்தவுள்ளது. இது தொடர்பாக இன்று நடைபெறவுள்ள கலந்துரையாடலில் வலயங்களின் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ். உதயகுமார் அறிவித்துள்ளார். (ம-108)

# காளியம்பாள், விநாயகர் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஜூலை 27
கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் காளியம்பாள்'பி', விநாயகர் அணிகள் வெற்றி பெற்றன.
குமரநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 10:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் காளியம்பாள் 'பி' அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. 5:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் விநாயகர் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# நவஜீவன்ஸ், ஆதிசக்தி அணிகள் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
திக்கம் சனசமூக நிலையம் தனது வைர விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி, வல்லை ஆதிசக்தி அணி என்பன அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றன.
திக்கம் சனசமூக நிலையத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து சிறிஅம்பாள் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி. 22ஆவது நிமிடத்தில் சங்கர், 30ஆவது நிமிடத்தில் சஞ்சீவ் ஆகியோர் அடுத்தடுத்து இரு கோல்களை பதிவு செய்ய இடைவேளைக்கு முன்னர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 2:0



என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படாத நிலையில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி.
அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் வல்லை ஆதிசக்தி அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி அணி வீரர் அஜய் ஒரு கோலைப் பதிவு செய்ய இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது அந்த அணி. இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்திலும் ஆதிசக்தி அணியின் ஆதிக்கம் தொடர்ந்தது. 37ஆவது நிமிடத்தில் அஜய், 47வது நிமிடத்தில் சுதர்சன் ஆகியோர் அடுத்தடுத்து இரு கோல்களை பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் வல்லை ஆதிசக்தி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. (ம-422)





## சவாலானவர் சச்சின்; சொல்கிறார் பிரட் லீ

"எனக்கு மிகவும் சவாலான துடுப்பாட்ட வீரர் என்றால் அது இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் தான்" இவ்வாறு தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ.

சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எனக்கு மிகவும் சவால் தந்த துடுப்பாட்ட வீரராக நான் சச்சினையே குறிப்பிடுவேன். அவர் அமைதியானவர் என்று எடைபோட்டுவிடக் கூடாது. எமது வார்த்தை மோதல்களுக்கு அவர் துடுப்பு மட்டையால் பதில் வழங்குவார். களத்தில் அவர் ஆக்ரோசமானவரே. சச்சினை நான் ஆட்டமிழக்கச் செய்யும்போதெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியடைவேன். அதற்குக் காரணம் அவரை வீழ்த்துவதற்கு எமது அணி வீரர்கள் ஒன்றிணைந்து தனித்திட்டம் அமைத்துத் தயார்ப்படுத்துவோம். எனவே அத்தகைய ஓர் ஜாம்பவானை வீழ்த்துவது சாதாரண இலக்கா என்ன" என லீ மேலும் தெரிவித்தார். (ம)

## டெஸ்ட்டுக்கு வந்தார் பாண்டியா

இந்திய அணியின் சகலதுறை வீரரான பாண்டியா டெஸ்ட் ஆட்டங்களுக்கு நேற்று அறிமுகமானார். இந்திய அணித்தலைவர் கோக்லி, டெஸ்ட் தொப்பியை பாண்டியாவுக்குக் கொடுத்து அவரை அணிக்குள் வரவேற்றார்.

இந்த ஆட்டத்தில் இந்திய அணி 6 துடுப்பாட்ட வீரர்கள், 5 பந்து வீச்சாளர்கள் என்ற வியூகத்தை நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இலங்கையை அதன் சொந்த மண்ணில் சிறப்பாக எதிர்கொள்ள இந்தத் திட்டமே சிறந்தது என்று ஆட்டத்துக்கு முதல்நாள் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து கோக்லியும் தெரிவித்திருந்தார். இதனால் பாண்டியா இலங்கைக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் களமிறக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதன்படி அவர் நேற்றுக் களமிறக்கப்பட்டார்.

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் இந்திய அணியின் நம்பிக்கை வீரராக பாண்டியா உருவெடுத்துள்ளார். எனினும் அவர் டெஸ்ட் ஆட்டங்களில் இதுவரை களமிறக்கப்படாமை குறித்து விமர்சிக்கப்பட்ட நிலையில் தற்போது மூவகை ஆட்டங்களுக்கும் உரிய அணியில் இடம்பிடித்தார் பாண்டியா. (ம)

# முதல் நாளில் இந்திய அணி 399

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளில் இந்திய அணி 399 ஓட்டங்களைக் குவித்து அசத்தியுள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடர் காலியில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் முகுந்த் இருவரும் களமிறங்கினர். வெறும் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் முகுந்த். 27 ஓட்டங்களுக்கு இந்தியாவின் முதல் இலக்கு வீழ்த்தப்பட்டது. இதன் பின்னர் தவானுடன் இணைந்து சிறந்தவொரு இணைப்பாட்டத்தை வழங்கினார் புஜாரா. அணி 100 ஓட்டங்களைத் தொட்டபின்னரும் இலக்குச் சரிவு ஏற்படவில்லை. இணைப்பாட்டம் தொடர்ந்துகொண்டே இருந்தது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் அடித்தாடினார் தவான். அவர் 62 பந்துகளில் அரைச்சதத்தையும், 110 பந்துகளில் சதத்தையும் கடந்தார். மறுமுனையில் வழக்கம்போல் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி சதம் கடந்தார் புஜாரா.

இணைப்பாட்டமாக 200 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னரும் இலக்குச் சரிவு ஏற்பட்டபாடில்லை. அணி 280 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 190 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தவான். வெறும் 168 பந்துகளில் 31 பவுண்டரிகள் அடங்கலாக அவர் இந்த அடைவை எட்டியிருந்தார். முகுந்த், தவான் இருவரையும் ஆட்டமிழக்கச் செய்த பிரதீப், கோக்லியை வெறும் 3 ஓட்டங்களுடன் இருக்கைக்குத் திருப்பினார். ரகானே ஓரளவு தாக்குப்பிடிக்க 3 இலக்குகளை இழந்து 399 ஓட்டங்களைக் குவித்துள்ளது இந்திய அணி.

முதல் நாளில் இந்திய அணி 399 ஓட்டங்களைக் குவித்தமையானது அந்த அணியின் ஆதிக்கம் இந்த ஆட்டத்தில் மேலோங்கக்கூடிய அறிகுறியாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. புஜாரா 144 ஓட்டங்களுடனும், ரகானே 39 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பாண்டியா, சகா, அஸ்வின், ஜடேயா ஆகிய வீரர்கள் களமிறங்கக் காத்திருக்கின்றனர். இதனால் இந்திய அணி 600 ஓட்டங்களைப் பெறவும் வாய்ப்புள்ளது என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

“
முதல் நாளில் இந்திய அணி 399 ஓட்டங்களைக் குவித்தமையானது அந்த அணியின் ஆதிக்கம் இந்த ஆட்டத்தில் மேலோங்கக்கூடிய அறிகுறியாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. புஜாரா 144 ஓட்டங்களுடனும், ரகானே 39 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பாண்டியா, சகா, அஸ்வின், ஜடேயா ஆகிய வீரர்கள் களமிறங்கக் காத்திருக்கின்றனர். இதனால் இந்திய அணி 600 ஓட்டங்களைப் பெறவும் வாய்ப்புள்ளது என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அஸ்வின் 50

இந்திய அணியின் சகல துறை வீரரான அஸ்வின், நேற்று தனது 50ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்கினார்.

இந்த ஆட்டத்தில் பாண்டியாவை அறிமுகம் செய்யும் திட்டம் இந்திய அணித்தலைவர் கோக்லியிடம் இருந்ததால், அஸ்வின் பதினொருவர் கொண்ட குழாமில் இடம்பிடிக்க வாய்ப்பில்லை என்றவாறாகவும் கருதப்பட்டது. எனினும் நேற்றைய ஆட்டத்தில் அஸ்வின் களமிறக்கப்பட்டதை அடுத்து அவர் தனது 50ஆவது ஆட்டத்தை எட்டினார்.

இதுவரை 49 ஆட்டங்களில் விளையாடியுள்ள அஸ்வின், ஆயிரத்து 903 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அதிகபட்சமாக 124 ஓட்டங்களைக் குவித்துள்ளார். பந்துவீச்சில் 275 ஓட்டங்களைக் கைப்பற்றியுள்ளார். இந்தத் தொடரில் அஸ்வின் தனது 300ஆவது டெஸ்ட் இலக்கைக் கைப்பற்றுவாரா என்பது தொடர்பிலும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. (ம)




## எல் சல்வடோர் வீரர்கள் இடைநிறுத்தம்

அமெரிக்காவில் இடம்பெற்று வரும் கொன்ககாப் தங்கக் கிண்ணத் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் தம்மை எதிர்த்து விளையாடிய அமெரிக்க வீரர்களைக் கடித்த எல் சல்வடோர் வீரர்கள் இருவருக்கு இடைநிறுத்தம் வழங்கப்பட்டுள்ளதாக, கொன்ககாப் அமைப்பு நேற்று அறிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தின் போது இடம்பெற்ற வெவ்வேறு இரண்டு சம்பவங்களுக்காக, ஹென்றி றொமேரோவுக்கு ஆறு ஆட்டங்கள் தடைவிதிக்கப்பட்டுள்ளதோடு, அணித்தலைவர் டர்வின் செரெனுக்கு மூன்று ஆட்டங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அடுத்தாண்டு உலகக் கிண்ண தகுதிகாண் ஆட்டங்களில் இருந்து எல் சல்வ டோர் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்த கோப்பா சென்றோ அமெரிக்கானா அல்லது 2019ஆம் ஆண்டு ஆரம்பமாகும் 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கான தகுதிகாண் ஆட்டங்களின்போதே மேற்படிதடைகள் நடைமுறைப்படுத்தப்பட வாய்ப்புள்ளது.

## அசல குணரட்னவுக்கு நான்கு வாரங்கள் ஓய்வு

இலங்கை அணியின் சகலதுறை வீரர் அசல குணரட்ன நான்கு வாரங்கள் ஓய்வெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் அவரின் துடுப்பாட்டம் இல்லாமல் இந்திய அணியை இந்த ஆட்டத்தில் எதிர்கொள்ள வேண்டும் என்ற நெருக்கடிக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று தவான் கொடுத்த பிடியெடுப்பை பிடிக்க முற்படுகையிலேயே அசலவின் கையில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் சுமார் நான்கு மாதங்கள் அசல ஓய்வில் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. (ம)



# ரியல் மட்ரிட்டில் தொடர்கிறார் கிறிஸ்ரியானோ ரொனால்டோ



போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ, கழகத்தைப் பொறுத்தவரை ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார். அவர் அந்த அணியில் இருந்து வெளியேறப்போகிறார் என்று சமீப காலமாகத் தகவல்கள் வெளிவந்தன. எனினும் அவற்றை மறுத்துள்ளார் ரொனால்டோ.

ரொனால்டோவின் சிறப்பான ஆட்டத்தால் ரியல் மட்ரிட் அணி கடந்த சில வருடங்களாக தொடர்ந்து வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்து வருகிறது. 2016ஆம் ஆண்டின் சம்பியன்ஸ் லீக், நடப்பு வருடத்தின் லா லிகா, நடப்பு வருடத்தின் சம்பியன்ஸ்லீக் உள்ளிட்ட முக்கிய தொடர்களில் ரியல் மட்ரிட் கிண்ணம் வெல்வதற்கு ரொனால்டோவே முக்கிய காரணம். பன்னாட்டு கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் கடந்த வருடத்துக்கான சிறந்த வீரரும் ரொனால்டோவே. இவர் ரியல் மட்ரிட் அணியுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளைத் தொடர்ந்து அணியில் இருந்து விலகப்போகிறார் என்று அண்மையில் செய்திகள் வெளிவந்தன. இதனால் இங்கிலாந்தின் மன்செஸ்டர் யுனைற்ரெட், பிரான்சின் பரிஸ் செயின்ட் ஜேர்மைன் அணிகள் ரொனால்டோவுக்கு வலை விரித்தன. எனினும் எதிலும் சிக்காமல் ரியல் மட்ரிட் அணியில் தொடரும் விருப்பத்தை வெளிப்படுத்தினார் ரொனால்டோ.

பன்னா ட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்தத் தகவலை ரொனால்டோ வெளிப்படுத்தினார்.

"கடந்த வருடம் என்னுடைய கழகம் முக்கியமான கிண்ணங்களை வென்றது மிகவும் சிறப்பானது. நான் அவற்றைத் தனிப்பட்ட கிண்ணமாகத்தான் விரும்புகிறேன். அவற்றிறைத் திரும்பவும் வென்றால் மிகவும் சிறப்பானதாக இருக்கும். ஒவ்வொரு வருடமும் கடுமையாக உழைக்க வேண்டும். நான் அதை தொடர்ந்து செய்வேன். கால்பந்து என்னுடைய வாழ்க்கை. அது தான் என்னுடைய விருப்பம்: ரியல் மட்ரிட் அணியில் இருந்து செல்லும் எண்ணமில்லை. எனக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் எந்தக் கருத்து முரண்பாடும்இல்லை." என ரொனால்டோ மேலும் தெரிவித்தார். (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L, A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர், தொழில்புரிவோர் இணையமுறையும்
சனி,ஞாயிறு பயிற்சி ஆரம்பம் : 29.07.2017
பிரிவு 1 காலை 08.00-10.00 | பிரிவு 2 மு.ப 10.00-12.00
பிரிவு 3 பி.ப 01.00-03.00 | பிரிவு 4 மாலை 03.00-05.00
வாரநாள் பிரிவுகள் (செவ்வாய் மற்றும் வியாழன்) 01.08.2017
1. காலை: 08-10 2. காலை: 10-12
அடிப்படை ஆங்கிலஅறிவில்லாதவர்களும் மூன்றேமாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
SAAMSON
Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோவில் அருகில்) யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

TCT Multi Trade Centre இல்
காணப்படும் உடனடி பதவி வெற்றிடங்கள்
★ காசாளர் - Cashier (பெண்கள்)
குறைந்த பட்ச கல்வித்தகைமை A/L
(யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் மாத்திரம்)
★ விற்பனை உதவியாளர்
Sales Assistant (பெண்கள்)
குறைந்த பட்ச கல்வித்தகைமை O/L
(யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் மாத்திரம்)
★ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
Security Guards (ஆண்கள்)
TCT உணவகத்திற்கு அனுபவமுள்ள சமையல்காரர் மற்றும் சமையலறை உதவியாளர் ஒருவர் தேவை. தங்கியிருந்து வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
முகாமையாளர், TCT Multi Trade Centre
இல. 527, நாவலர் வீதி, நல்லூர், தொடர்பு - 077 776 3436

- மலேசிய சுற்றுலா -
59,800/-
4 பகல் 3 இரவுகள்
விசா கட்டணம், விமான பயணச்சீட்டு, காலை உணவு, 3 நாள் சுற்றுலா போக்குவரத்து, 3 நட்சத்திர விடுதியில் 3 இரவு தங்கும் வசதி உள்ளடங்கலாக.
Sunway lagoon, Batu caves, Genting Highland, City tour
Sunway Lagoon Feel the fun
• KL Tower • Twin Tower • Independence Square
• Monument • King Palace • China Town
• Central market • Chinese temple • Batu caves
• Dark Caves • Ramayana Caves • Vishnu Temple
• Hanumen Temple • Genting Highland
• Return cable car • Casino
• Snow World
Asiazone VACATION
AsiaZone Vacation
551A, Kasthuriyar Road, Jaffna.
021 492 7779, 077 676 8080

சேவை
பைக்கோ இயந்திரம் மூலம் சிறந்த முறையில் கிணறு வெட்டித் தரப்படும்.
075 907 8805/ 077 542 8937/ 077 642 8927

DLB
CAR PLUS
சீட்டிழுப்பு இலக்கம் 16
சீட்டிழுப்பு திகதி 2017.07.26
35 47 53 B சனி 04 27 45
- 20 4,896,580/=
Galaxy Star
வெற்றி வாரம் 180 திகதி 26.07.2017
01 10 42 44 49
23 28 30 60
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2, 319, 812/-
2017.07.30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2908 திகதி 26.07.2017
03 09 19 73 E 67 33, 565, 670/-
48 52 55 66
பச்சை நிற டிக்கட்டுகள் 2017.07.29 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

A/L
வரலாறு - 2017
இறுதி விசேட கருத்தரங்கு
முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்கள்
யாழ், கொழும்பு முன்னணி வரலாற்று ஆசிரியர்
காலம் - 28.07.2017
நேரம் - மு.ப 9 - 4 மணி
நாவலர் கல்வி நிலையம்
தொடர்பு - 077 489 0605

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.